# தமிழரசு

1-11-1990 ரூ.1








மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், வேலூரில் தளபதி அழகிரி போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். (19.10.90)



# இந்த இதழில்...


மொழிப் பிரச்சினையில் நேரு
உறுதிமொழிக்கு சட்ட அந்தஸ்து
தர வேண்டும்
—மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 2

தேசிய வளர்ச்சி மன்றக்
கூட்டத்தில் முதல்வர் உரை ... 6

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப்
பல்கலைக் கழகம் - முதல்
பட்டமளிப்பு விழா ... 9

'சிடா' சமூகக்காடு திட்டப் பணிகள் -
ஒரு திருப்பு முனை ... 15

நலம் பயக்கும் சமூக நலத் திட்டங்கள்
—மாண்புமிகு சமூக நலத்துறை
அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி
ஜெகதீசன் ...

குற்றாலத்தில் சுற்றுலா வளர்ச்சிப்
பணிகள் ... 22

ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல!
(கருத்துப் படங்கள்) ... 24

நூல் நயம் ... 26

கைத்தறித் தொழிலில் சணல் உற்பத்தி ... 27

சிப்காட்டின் சீரிய பணிகள் ... 29

சேலம் - ஒரு பார்வை ... 31

மருத்துவ விந்தை ... 35

உயர்நீதி மன்றக் கட்டடம்
உருவான வரலாறு ... 37

உலகு போற்றும் தமிழகச் சிற்பக் கலை ... 41

நெல்சன் மண்டேலாவுக்குப்
'பாரத ரத்னா' பட்டம் ... 45

பெரியார் மாவட்டத்தில் தீவிர சுகாதாரத்
திட்டப் பணிகள் ... 47

தங்கப் பதக்கம் வென்ற சிறுநீரக
நோயியல் துறை ... 48



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஐப்பசித் திங்கள் - 15

மலர்: 21 இதழ்: 9

1-11-1990



### மொழிப் பிரச்சினை:

# நேரு உறுதிமொழிக்குச் சட்ட அந்தஸ்து தரவேண்டும்!

## முதல்வர் கலைஞர்

" பன்மாநிலக் குழுவை அமைக்க வேண்டுமென முடிவெடுத்துள்ள மத்திய அரசுக்கு குறிப்பாக பிரதமருக்கு நமது பாராட்டுதலை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிய போதிலும், தற்போது தான், தேசிய முன்னணி அரசு தேர்தல் வாக் குறுதியை நிறைவேற்றும் வகையில், பன்மாநிலக் குழு அமைப்பதற்கு வகை செய்யும் 263-ஆம் பிரிவு, செயல்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி யாகும்.

மத்திய-மாநில உறவு சம்பந்தப்பட்ட அனைத்து முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கும், முடிவு எடுப்பதற்குமான உயர் நிலை அமைப்பாக இக்குழுவைக்கருத வேண்டும். எனவே, நமது இந்த முதல்கூட்டத்திலேயே, மத்திய-மாநில உறவுகளைச் சீரமைப்பதற்கான நமது கருத்துக்களை நாம் பரி மாறிக்கொள்ள வேண்டும்.

1969-ஆம் ஆண்டில், எங்கள் கட்சி தமிழ் நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, முன்னாள் மாநிலத்தலைமைநீதிபதி பி.வி. இராஜ மன்னார் அவர்களைத் தலைவராகவும், டாக்டர் ஏ.இலட்சுமணசாமி முதலியார், திரு. பி.சந்திர ரெட்டி ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட, மத்திய-மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு ஒன்றை, நாங்கள் அமைத்திருந்தோம். அப்போது தான் நமது நாட்டிலேயே முதன்முறையாக, மத்திய-மாநில உறவுகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. அந்தக் குழு, 1971-இல் அதன் அறிக்கையை அளித்தது. 16.4.1974 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட "மாநில சுயாட்சி" குறித்த தீர்மானத்தில், ராஜமன்னார் குழுவின் முக்கிய பரிந்துரைகள் இணைக்கப்பட்டன.

இத்தீர்மானத்தின் அடிப்படையில், மத்திய-மாநில உறவுகள் குறித்த அனைத்துக் கூறுகள் தொடர்பான கருத்துக்கோவைகளை மத்திய மாநில உறவுகள் குறித்த ஆணைக்குழுவிடம் எங்கள்

அரசு அளித்தது. அதன்பின்னர், ஆணைக்குழு அறிக்கை தொடர்பான எங்கள் உணர்வுகளையும் விளக்கமாகத் தெரிவித்துள்ளோம். இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள், மத்திய-மாநில உறவுகள் குறித்த ஆணைக் குழுவின் அறிக்கையின் மீது நாங்கள் அளித்த விரிவான கருத்துக்கள் ஆகிய வற்றை முழுமையாகப் பரிசீலிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக மத்திய-மாநில உறவுகளைச் சீர மைப்பது தொடர்பாக, மத்திய-மாநில உறவுகள் குறித்த ஆணையம், அதன் பரிந்துரைகளில் எவற் றைக் குறிப்பிட வேண்டும் என்று நாங்கள் விரும்பி எதிர்பார்த்தோமோ, அவற்றை அக்குழு குறிப்பிட வில்லை என்று நாங்கள் கருதுகிறோம். எனினும் இந்தக் குழு பயனுள்ள பரிந்துரைகள் பலவற்றை அளித்துள்ளது. இவை மத்திய-மாநில உறவுகள் குறித்த விரிவான ஆய்வினை மேற்கொள்ள ஒரு தொடக்க நிலையாக அமையலாம். அவ்வாறே, இக்குழுவின் பரிந்துரைகள் மிதமானவையாக அமைந்துள்ளதால், அதனையும் குறைப்பதற்கு அவசியமில்லை. நாம் இவை குறித்து கலந்து பேசி மாநிலங்களுக்கு, அதிக சுயாட்சி கிடைப்பதற்கான வழி வகைகளைக் கண்டறிய வேண்டும்.

மத்திய-மாநில அரசுகள் சட்டம் இயற்றுவது தொடர்பான எங்களுடைய கருத்துக்களை தற் போது நான் தெரிவிக்க விரும்புகிறேன். ''தொழில் நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி, பல்கலைக் கழ கங்கள் ஆகியவை உள்ளிட்ட கல்வி'', ''வனங்கள்'' ஆகியன முன்னர் மாநில அரசின் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. நெருக்கடி நிலை காலத் திலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 42-ஆம் திருத்தத்தின் காரணமாக இவை பொதுப்பட்டியலில் சேர்க்கப்பட்டன. இவை மீண்டும் மாநில அதிகாரப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்து கிறோம்.

இரண்டாவதாக, சட்டமியற்றுவதற்குரிய எஞ்சி யுள்ள அதிகாரங்கள் மாநிலங்களிடம் அளிக்கப் பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். வரிவிதிப்பு தொடர்பானவை தவிர ஏனைய அதி காரங்கள், பொதுப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று மத்திய-மாநில உறவுகள் குறித்த குழு பரிந்துரைத்துள்ளது. குறைந்தபட்சம் இந்தப் பரிந்துரையையாவது உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். மூன்றாவதாக, இக்குழு பரிந்துரைத் துள்ளபடி, பொதுப்பட்டியலில் இடம்பெறும் பொருள்கள் பற்றி மத்திய அரசு சட்டமியற்றக் கருதும் போதெல்லாம் மாநில அரசுகளையும், பன்மாநிலக் குழுவையும் கலந்தாலோசித்த பின்னர் தான் அவ்வாறு சட்டமியற்ற வேண்டும்.

மத்திய-மாநிலங்களுக்கிடையே பொதுவான பொருள்கள் குறித்த சட்டம் இயற்றும் போதெல் லாம், மத்திய-மாநில அரசுகளின் கொள்கை மற்றும் அமுலாக்கம் பற்றி இணக்கமான நிலையில் கலந்து பேசி உரிய நடவடிக்கையினை மேற்

★ **மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக்கொண்டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.**

**—தந்தை பெரியார்**

கொள்ள வேண்டும். நான்காவதாக ஆளுநர் அள விலும், இந்தியக்குடியரசுத் தலைவர் அளவிலும் மாநிலச் சட்ட முன் வடிவுகளுக்கு இசைவளிக்க வேண்டிய கால அளவு உறுதியாக வரையறுக்கப் படுதல் வேண்டும். மாநிலப்பட்டியலில் இடம் பெறும் பொருட்கள் குறித்து இயற்றப்படும் சட்டங் களை இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அனுப் பவோ அல்லது சட்டமன்றத்திற்குத்திருப்பி அனுப் பவோ ஆளுநருக்கு எவ்வித விருப்புரிமையும் அளிக்கப்படக் கூடாது.

நிர்வாக உறவுகளைப் பொறுத்தவரை, மாநிலங் களுக்குக் கட்டளையிடவும், அரசியலமைப்புச் சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி அவசர நிலை பிரகடனத்தைச் செய்யவும், மத்திய அரசுக்கு அபரிமிதமான அதிகாரத்தை அளிக்கக் கூடிய **256, 257, 365-ஆம் பிரிவுகள் தேவையில்லை என்பது எங்களது உறுதியான கருத்தாகும். இப் பிரிவுகள் ரத்து செய்யப்பட வேண்டும்.**

மாநிலங்களில் குடியரசுத் தலைவரின் ஆட்சி யைக் கொண்டு வருவதற்கு வகை செய்யும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 356-ஆம் பிரிவு மாநிலங்களில் ஏராளமான சந்தர்ப்பங்களில் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதை மத்திய-மாநில உறவுகள் குறித்த குழு சுட்டிக் காட்டி யுள்ளது. இதுபற்றி இராஜமன்னார் குழு, தன் அறிக்கையில் பரிந்துரைத்துள்ள கருத்தே எங்களு டைய கருத்தும் ஆகும்.

ராஜமன்னார் குழு தனது அறிக்கையில்,

''அரசியலமைப்புச் சட்டத்தின் 356, 357-ஆம் பிரிவுகள் ஒட்டு மொத்தமாக நீக்கப்பட வேண்டும்.

மத்திய அரசிலுள்ள ஆளுங்கட்சியின் தன்னிச் சையான, ஒருதலைப்பட்சமான போக்கிற்கு எதி ராக, மாநிலங்களின் நலனில் அக்கறை கொண்டு, அவற்றைப்பாதுகாக்கும் வகையில், அரசியலமைப் புச் சட்டத்திலேயே போதிய அளவு பாதுகாப்பு வழிமுறைகள் செய்யப்பட வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தில் இது குறித்த விதிமுறைகள் இருந்திட வேண்டுமாயின்... அப் படியே இருக்க வேண்டுமாயின்...

**1) ஒரு மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு நிலை முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே குடியரசுத் தலைவர் ஆட்சியை 356-ஆம் பிரிவின் கீழ் கொண்டு வரலாம். அம்மாநிலத்தில் மக்களை யும், சொத்துக்களையும் பத்திரமாகவும், பாது**

படமும் செய்தியும்



மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், சென்னை அமைந்தகரை, மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு, பாடி, செனாய் நகர் அரிமா சங்கத்தினர் கட்டித் தந்த வகுப்பறைக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். (22.10.90)

காப்புடனும் வைத்திருக்க மாநில அரசால் இயலவில்லை அல்லது அதற்கு விருப்பமில்லை என்னும் நிலை ஏற்படும்போது மட்டுமே குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்படலாம்.

2) அரசியலமைப்புச் சட்டத்தின் 356-ஆம் பிரிவைச் சேர்ந்த (1) பகுதியில் இடம் பெற்றுள்ள ''அல்லது வேறுவகையில்'' என்று தொடர்நீக்கப்பட வேண்டும்.

3) குடியரசுத் தலைவர் அவசர நிலையைப் பிரகடனம் செய்யும் முன்னர், வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் ஆளுநரின் அறிக்கை மீது மாநில அரசின் சட்டப் பேரவை தனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக, அதனைக் குடியரசுத் தலைவர் அனுப்பி வைக்க வேண்டுமென 356 (1) பிரிவுக்கு வரம்பு நிபந்தனை ஒன்று சேர்க்கப்பட வேண்டும்''.

356-ஆம் பிரிவை மத்திய அரசு எந்தெந்த காரணங்களுக்காகப் பயன்படுத்த உத்தேசித்துள்ளதோ, அக்காரணங்கள் தொடர்பாக, அதிகார முறையில் அறிவிப்பு வெளியிடும் முன்னர், அது பற்றி நாடாளுமன்றத்திலும் விவாதிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

ஆளுநர்களின் பணி ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக ஆகிவிட்டது. ஏனெனில், ஆளுநரின் அதிகாரங்கள் கடந்த காலத்தில் பரவலாக தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆளுநர் பதவி தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்கு எவ்வித அடிப்படையும் இருப்பதாகஎங்களுக்குத் தெரியவில்லை. எனினும், அப்பதவி தொடர்ந்து இருக்க வேண்டுமானால், மத்தியிலுள்ள ஆளுங் கட்சியினர் தங்கள் அரசியல் நலன்களைக் காக்க ஆளுநர்களைக்கருவிகளாகப்பயன்படுத்த முடியாத வகையில், ஆளுநர்களின் அதிகாரங்கள் தக்கவாறு ஒழுங்கு முறைப்படுத்தப்பட வேண்டும். ஆளுநரை நியமனம் செய்யும் முன்னர் முதலமைச்சரைச் சட்டரீதியாகக் கலந்தாலோசிக்க வேண்டுமென்கிற வகையில் 155-ஆம் பிரிவைத் திருத்த வேண்டும் என்று மத்திய-மாநில உறவு குறித்த ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஆளுநரை நியமனம் செய்யும் முன்னர் முதலமைச்சரின் இசைவு பெறப்பட வேண்டும் என்று நாங்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கிறோம். முதலமைச்சர்களைத் தெரிந்தெடுத்தல், சட்ட மன்றத்தைக் கூட்டுதல், மன்றத்தைக் கலைக்காமல் நிறுத்தி வைத்தல் அல்லது கலைத்தல், சட்டமுன் வடிவுகளுக்கு இசைவு அளித்தல், குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வருவதற்கான பரிந்துரைகள் ஆகியன போன்ற ஆளுநரின் விருப்ப உரிமை சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு பொருள் குறித்த பன்மாநிலக் குழுவைக் கலந்தாலோசித்து வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றில் எல்லாம் பதவி ஏற்க அழைக்கப்படும் கட்சியின் பெரும்பான்மையைச் சட்டமன்றத்தில்தான் நிச்சயிக்க வேண்டுமேயன்றி ஆளுநர் மாளிகையில் அல்ல.

மொழிப் பிரச்சினைக்கு நாங்கள் மிக உயரிய முக்கியத்துவம் கொடுக்கிறோம். தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக்கூட்டத்தில் நான் அண்மையில் சுட்டிக்காட்டியதுபோல், அரசியலமைப்பின் எட்

டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலை வாய்ப்புருவாக்குதல், கிராம வளர்ச்சி, கல்வி, சுகாதாரம், சத்துணவு, குடிநீர் வழங்கல், துப்புரவு போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல் ஆகிய பணிகள் மாநிலங்களுக்குப் பெரும் பொறுப்பை அளித்துள்ளன. மாநிலங்களுக்குப் போதுமான நிதி ஆதாரங்களுக்கு வகை செய்தாலன்றி, அப்பொறுப்புகளைச் சரிவர ஆற்ற இயலாது. இது தொடர்பாக, மத்திய ஆயத் தீர்வையில் அனைத்து மாநிலங்களுக்கும் கிடைத்து வந்த பங்குத் தொகையை ஒன்பதாம் நிதிக்குழு 40 சதவீதத்திலிருந்து 37.5 சதவீதமாகக் குறைத்துள்ளது பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது. உண்மையில் 40 சதவீதப் பங்கே போதுமானதல்ல. மேலும் 1979-80 முதல் 1989-90 வரையிலான 11 ஆண்டுகளாக இப்பங்குத் தொகையை மேலும் குறைத்திருப்பது கவலை தருவதாக அமைந்துவிட்டது. எனவே, மத்திய ஆயத் தீர்வையில் மாநிலங்களுக்கான ஒட்டு மொத்தப் பங்குத் தொகையை 1990-95-ஆம் ஆண்டுக் கால அளவில் குறைந்தது 50 சதவீதம் என்ற அளவுக்காவது உயர்த்தப்படலாம் என்றும், அந்த 50 சதவீதப் பங்குத் தொகையில் 42.5 சதவீதம் மாநிலங்களுக்கு அளிக்கப்படலாம் என்றும் எஞ்சிய 7.5 சதவீதத்தைப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு ஒதுக்கப்படலாம் என்றும், பன்மாநிலக்குழு பரிந்துரைக்க வேண்டும் என்று நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். அடுத்து, உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு பிரச்சினை, மாநிலங்களுக்கிடையேயான சரக்கு அனுப்புகை வரி (Consignment tax)பற்றியதாகும். இது குறித்து ஏற்கனவே முதல் அமைச்சர்களிடையே ஒத்த கருத்து நிலவுகிறது. மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கத்தக்க தொகுப்பில் கூட்டு நிறுவன வரியும் சேர்க்கப்பட வேண்டுமென நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். மத்திய-மாநில உறவுகள் குறித்த குழுவும் இதனையே பரிந்துரைத்துள்ளது. விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிகள் அனைத்தும் மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக அறிவிக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய அரசின் கருத்தாகும். ஆங்கில மொழியும் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருக்க வேண்டும்.

பண்டித நேரு அவர்கள் மக்களவையில் 1959 ஆகஸ்ட் திங்கள் 7-ஆம் நாளன்று அளித்த பின்வரும் உறுதிமொழிக்குச் சட்ட அந்தஸ்து தர வகை செய்யப்பட வேண்டும்.

''நான் இரு கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி மொழி திணிக்கப்படக் கூடாது. அடுத்து ஆங்கில மொழி அலுவலகக் காரியங்களுக்குப் பயன்படும் வண்ணம் இணைப்பு மொழியாக இருந்திட வேண்டும். அப்படி எவ்வளவு காலத்திற்கு என்று என்னால் வரையறுக்க இயலாது. தற்போதுள்ள வசதிகளுக்காக மட்டும் அவ்வாறு இருக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. ஏனெனில், இந்திய மொழியில் தொடர்பு கொள்வதைக் கட்டாயப்படுத்துவதன் மூலம், இந்திமொழி பேசப்படாத பகுதிகளில் உள்ள மக்கள், சில அனுகூலங்கள் தங்களுக்கு மறுக்கப்படுகின்றன என்று கருதுவதை நான் விரும்பவில்லை. அவர்கள் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளலாம். மக்கள் விரும்புகின்ற வரையில் ஆங்கில மொழி மாற்று மொழியாக இருக்கலாம். ஆங்கிலம் இணைப்பு மொழியாக எவ்வளவு காலம் நீடிக்க வேண்டும் என்பதை இந்தி மொழி தெரிந்த மக்களின் முடிவுக்கல்லாமல் இந்தி தெரியாத மக்களின் முடிவுக்கே நான் விடுகிறேன்.''

10. மத்திய-மாநில நிதி நிலைத் தொடர்பு குறித்து அடுத்தடுத்து அமைக்கப் பெற்ற நிதிக் குழுக்கள் முன்னர் நாங்கள் எங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்துள்ளோம். தேசிய வளர்ச்சிக் குழுவினால் அண்மையில் ஏற்பளிக்கப்பட்ட எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அணுகு முறை அறிக்கையில் அடுத்து, பன்மாநிலக் குழுவின் செயல்பாடுகள் குறித்து கருத்து அறிவிக்க விரும்புகிறேன். இந்தக் குழுவை அவ்வப்போது எழுகின்ற பிரச்சினைகள் குறித்து மாநில முதலமைச்சர்களுடன் கலந்தாலோசிப்பதற்கான ஒரு மன்றமாக மட்டுமே கருதக்கூடாது. மத்திய-மாநில அரசுகளுக்கிடையே தொடர்ச்சியான, பயனுள்ள ஒருங்கிணைப்பு நிலவச் செய்யவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் உதவும் ஓர் உயரிய மன்றமாக இது கருதப்பட வேண்டும். பன்மாநிலக் குழுவை அமைத்து, மத்திய அரசு வெளியிட்ட 28.5.1990-ஆம் நாளிட்ட அறிவிக்கையின் 5(A)பத்தி, ''இக்குழு, அதன் பரிசீலனைக்குக் கொண்டு வரப்பட வேண்டிய பிரச்சினைகளை இனங்கண்டு தெரிந்தெடுப்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்தளிக்க வேண்டும்'' என்று தெரிவிக்கிறது. இது தொடர்பாக இக்குழுவின் தகவலுக்காக, விவாதத்திற்காக, ஆய்வுக்காக மற்றும் கலந்தாலோசிக்கப்படுவதற்காகக் கொண்டு வரப்பட வேண்டிய பிரச்சினைகளைப் பட்டியலிட்டு விரிவான கருத்துக் கோவைகளை இயற்றித் தெரிவித்துள்ளோம். நான் இந்தக் கருத்துக்களை ஏற்கனவே மாண்புமிகு பிரதமருக்கு அனுப்பியுள்ளேன். அவை, எனது உரையுடன் இணைப்பாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. எங்களின் கருத்துக்களை இக்குழு கவனமாகவும், விரிவாகவும் பரிசீலித்திட வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் தனது உரையில் கூறினார்.

**—10.10.90 அன்று, புதுடில்லியில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையிலான குழுவின் முதல் கூட்டத்தில், ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.**

★ கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

**—தந்தை பெரியார்**

# தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் முதல்வர் உரை

**தே**சிய வளர்ச்சி மன்றக் கூட்டம், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் தலைமை யில், 11.10.90 அன்று புதுடில்லியில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர்கள், மாண்புமிகு மாநில முதலமைச்சர்கள், குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும் மாநிலங்களின் மேதகு ஆளுநர்கள், தேசிய வளர்ச்சி மன்றக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்- தேசிய வளர்ச்சி மன்றக்" கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"மாநிலங்களின் எட்டாவது திட்டச் செலவு மொத்தத் திட்டச் செலவில் 45 விழுக்காட்டுக்குள் அடங்கிட வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஏறத்தாழ ஏழாவது திட்ட அளவிலேயே உள்ளது. நிதியாதாரங் களும், அதிகாரங்களும் ஒரே இடத்தில் குவிக்கப்படாமல் அவை பரவலாக்கப்பட வேண்டும் என்பது திட்ட அணுகு முறை விரைவில் வலியுறுத்தப்பட்டுள்ள மையக் கருத் தாகும். இது வெறும் ஒலி முழக்கமாக இருந்துவிடக் கூடாது.

மாநிலத்தினுடைய திட்டச் செலவுகள் மொத்தத் திட்டச் செலவில் குறைந்தது 50 விழுக்காடாகவாவது உயர்த்தப்பட வேண்டும்.

எட்டாவது திட்ட நிதி ஒதுக்கீடு முறைகளில் சில இடையூறான போக்குகள் காணப்படுவதாக எனக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து தெரிகிறது.

வெளிச்சந்தையில் கடன் எழுப்புவதில் மாநிலங்களின் பங்கு ஏழாவது திட்ட அளவிலேயே கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. வெளிச்சந்தையில் எழுப்பப்படும் மொத்தக் கடன்களில் குறைந்தபட்சம் 40 விழுக்காடாகவாவது மாநிலங்களின் பங்கு உயர்த்தப்பட வேண்டுமென்று நான் என்னுடைய ஆலோசனையை மூன்வைக்கிறேன்.

ஏழாவது திட்டத்தில் உடன்பாடு ஒப்பந்த அடிப்படை யிலான கடன்களில் மாநிலங்களுக்குப் பெரும் பங்கு தரப்பட்டது. எட்டாவது திட்டக் காலத்திலும் இதே நிலை நீடிக்கும் என உறுதி செய்யப்பட வேண்டும்.

மத்திய உதவி என்ற வகையில் ஐம்பத்தேழு ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது. இதை கணிசமான அளவு உயர்த்துவது அவசியமாகும்."

"கட்கில் நெறிமுறைகளை நடைமுறைப்படுத்துகிற போது தென் மாநிலங்கள் மீண்டும் ஒருமுறை பாதிக்கப் படப் போவதில்லை. அவை ஏற்கனவே பாதிப்புக்குள் ளாகியுள்ளன.

நமக்கு முன்னால் ஐந்து மாற்று வழிமுறைகள் உள்ளன. அந்தத் திட்டங்களில் ஓர் எச்சரிக்கைக் குறிப்பை நான் கண்டேன். 7 விழுக்காடு அளவுக்குள் அம்மாறு பாடுகள் இருக்க வேண்டும் என்ற வரையறை உள்ளது.

ஒன்பதாவது நிதிக்குழு திட்டமிட்டுள்ள உபரி நிதி எதுவும் கண்ணுக்குத் தென்படவில்லை. பல மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்படும் நிலையிலேயே விடப்பட்டுள் ளன. இப்போது முன்மொழியப்பட்டுள்ள பல மாற்று ஏற்பாடுகளெல்லாம் ஏதோ ஒரு சில மாநிலங்களுக்கு மட்டுமே பயனளிப்பதாகக் காணப்படுகிறது. ஒருசில மாநிலங்கள் பயனடைவதற்காகச் சில அடிப்படையான கொள்கைகளை மாற்ற வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

நிலப்பரப்பு அடிப்படையில் 5 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்யலாம் என மாற்றுத் திட்டங்களில் ஒன்று பரிந்துரை செய்கிறது. அதிகமான மக்கள் தொகை உள்ள மாநிலங்களில் நிலப்பரப்பு குறைவாக உள்ளது. மக்கள் தொகை நெருக்கத்தின் காரணமாக சராசரி தனி மனி தனுக்கான நிலப்பரப்பின் அளவு குறைவாக உள்ளது. இதன் காரணமாக வளர்ச்சிக்கு அவசியமான வருவாய்க் கான அடிப்படை ஆதாரங்களை அந்த மாநிலம் இழக்க நேர்கிறது. நிலப்பரப்பு அடிப்படையில் தனியான ஒதுக் கீடுகள் எதுவும் கூடாது என்று நான் உறுதியாகக்கருது கிறேன்.

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு அடிப்படையில் 60 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு வந்தது. அம்முறை அப்படியே தொடர்ந்து நீடிக்க வேண்டும். குறைந்த நிலப்பரப்பில் அதிகமான அளவு மக்கள் வாழ்வார்களேயானால் அந்த அடிப்படையில் 5 விழுக்காடு சிறப்பு ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்கிற கோரிக்கை உண்மையிலேயே வலிமை வாய்ந்த ஒன்றாகும்.

முன்வைக்கப்பட்டுள்ள பல் மாற்று வழிமுறைத் திட்டங்களில் வரி மூலமான வருவாய் அடிப்படையில் 10 விழுக்காடு ஒதுக்கீடு என்பதைப் புதிய வருவாய் நிர்வாக வழிகாட்டுதல்களின் அடிப்படைக்கு மாற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதுவும் மேம்போக் காகக் கூறப்பட்டுள்ளது. புதிய நிதி வருவாய் நிர்வாக வழிமுறைகளைக் கணக்கிடுவதற்கான விவரங்கள் எதுவும் தரப்படவில்லை. வரி வசூல் அடிப்படை என்பதற்குப் பதிலாக இதைக் கொண்டு வரும் பட்சத்தில் இது மிக பலவீனமான மாற்றாக உள்ளது.

ஆய்ந்தறியாத திட்டச் செலவின் அடிப்படையில் நிதி வருவாய் நிர்வாக வழிகாட்டுதல்கள் என்ற இம்முயற்சியை அரசு கைவிட்டுவிட வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். இம்முயற்சிக்குப் பதிலாக வரி வசூல் அடிப்படையிலும், மக்கள்தொகை அடிப்படையிலும்

ஆன ஒதுக்கீடுகள் என்ற முறை தொடர்ந்து பயன்படுத்தப் பட வேண்டும்.

வரி வசூல் அடிப்படையிலான ஒதுக்கீட்டை 5 விழுக்காடாகக் குறைத்து மற்றொரு 5 விழுக்காட்டை சமூக ரீதியான அடிப்படையில் மாற்றுவது குறித்து எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. சமூக ரீதியான அடிப்படை என்று கூறும்போது அதற்குரிய முக்கியத்துவம் தரப்பட வேண்டும். குழந்தைகள் மரண விகிதக் குறைப்புக் குறியீட்டை ஏற்கனவே எட்டிவிட்ட சாதனைகளைச் செய்துள்ள மாநில அரசுகளுக்குக் குறைந்தபட்சம் 50 விழுக்காடு தரப்பட வேண்டும். அப்போதுதான் அந்த மாநிலங்கள் குழந்தைகள் மரண விகிதத்தைத் குறைக்கிற முயற்சியில் சாதனையளவை எட்ட முடியும். அந்த மாநிலங்களுக்கு இச்சலுகைகளைத் தராமல் அவற்றின் சாதனைகளுக்காக அவைகள் தண்டிக்கப்படக் கூடாது.

தேசிய சராசரிக்குக் குறைவாகத் தனிநபர் வருமானம் இருப்பின் 20 விழுக்காடு ஒதுக்கீடு என்று இருப்பதை தனிநபர் வருமானத்தின் வேறுபாடுகள் அடிப்படையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு என்று மாற்ற வேண்டும்.

தேசிய சராசரிக்குக் குறைவான தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் திட்ட வருவாய் மானியங்கள் 20 விழுக்காட்டிற்கு மேலாக ஒதுக்கப்பட்டு வருகிறது. கட்கில் நெறிமுறைகளின்கீழ் தனிநபர் வருவாய் வேறுபாட்டின் அடிப்படையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்வதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. ஒன்பதாவது நிதிக் குழு பரிந்துரைகள் உட்பட திட்டங்களுக்கான மத்திய நிதியுதவிகள் மற்றும் அனைத்து நிதி ஒதுக்கீடு திட்டங்கள் குறித்து ஓர் ஒருமித்த கண்ணோட்டத்தின் கருத்தையும் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்திக் கூறுகிறேன்.

தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் 20விழுக்காடு ஒதுக்கீடு என்ற விஷயத்தில் தமிழ்நாட்டின் தனித்த ஒரு நிலையை விரிவாகக் கூற விரும்புகிறேன். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்ட போது தமிழ்நாடு தேசிய சராசரிக்கும் சற்றுக் குறைவாக இருந்தது. எது எப்படியிருப்பினும் தமிழ்நாட்டுக்குரிய 20 விழுக்காட்டு ஒதுக்கீடு மறுக்கப்பட்டது. மீண்டும் அதே நிலைதான்.

மத்திய புள்ளிவிவர அமைப்பு 1986-87-க்கான புள்ளிவிவரங்களைத் தந்தது. அப்புள்ளிவிவரங்கள் முழுமையானவை அல்ல. அரைகுறையானது என்று அவ்வமைப்பே ஏற்றுக்கொண்டுள்ளது. அந்தப் புள்ளி விவரங்களின்படி தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் தேசிய சராசரிக்கு சிறு அளவே கூடுதலாக இருந்தது. எங்கள் மாநில அதிகாரிகள், மத்திய புள்ளிவிவர அமைப்பின் இப்புள்ளிவிவரங்கள் குறித்து பல்வேறு மறுப்புகளையும், பிரச்சினைகளையும் எழுப்பினார்கள்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட ஆண்டுக்கான விவரங்கள் எதுவும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை நான் இங்கே மீண்டும் நினைவுபடுத்துகிறேன். எனவே இதுகுறித்த பிரச்சினை தீரும் வரையில் ஒன்பதாவது நிதிக்குழு 1982-85 ஆண்டுகளுக்காக எடுத்துக்கொண்ட புள்ளிவிவரங்கள் அடிப்படையே பின்பற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுக்கான உரிய பங்குகள் இதுபோன்ற புரியாத, பொருந்தாத கணக்குகளைச் சார்ந்திருக்கக் கூடாது.

இந்த நேரத்தில் நான் ஒரு தனித்தன்மை வாய்ந்த உறுதிமொழியைப் பெற விரும்புகிறேன். நடைமுறை சாத்தியமற்ற கோட்பாடுகளின் அடிப்படையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்வது என்ற கணக்கீடு கூடாது.

தமிழ்நாடும் மற்றும் சில மாநிலங்களும் தேசிய சராசரிக்கு ஒரு சில ரூபாய்கள் கூடுதலான தனிநபர் வருவாய் பெறும் நிலையில் உள்ளன. இந்த மாநிலங்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

சிறப்பான மேம்பாட்டிற்கு உரிய 10 விழுக்காடு ஒதுக்கீடு என்பது கீழ்க்கண்ட வரிசையிலான பிரச்சினைகளின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

அ. நகர்ப்புறக் குடிசைப் பகுதிகள்
ஆ. மலைப்பகுதி மேம்பாடு போன்ற சிறப்பான மேம்பாட்டுத் திட்டங்கள்
இ. கடற்கரையோரப் பகுதிகளின் பிரச்சினைகள்.
ஈ. மற்றும் தனித்தன்மை வாய்ந்த ஏனைய பிரச்சினைகள்.

அணைக்கட்டுகள், தொழிற்சாலைகள், மின்நிலையங்கள் போன்ற எல்லா திட்டங்களுக்காகவும் பெறப்படுகிற 100 விழுக்காடு உதவித் தொகையும் மாநிலங்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்று ஒன்பதாவது நிதிக் குழு பரிந்துரை செய்கிறது. மேலும் தற்போது நடைமுறையிலுள்ள விதிமுறைகளை எளிதாக்க வேண்டும். இவைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

சிறப்பு அந்தஸ்து பெறாத மாநிலங்களுக்கான மூல ஒதுக்கீடு 30 விழுக்காடாகவே நீடிக்கின்றது என்ற கருத்து இன்றைய விவாதத்திற்குரிய விஷயங்களின் பட்டியலில் காணப்படுகிறது. இது மூன்று முக்கிய விஷயங்களைக் கருத்தில் கொள்ளாமல் கூறப்பட்டுள்ளது.

முதலாவதாக ஒன்பதாவது நிதிக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட திட்ட வருவாய் மானியங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், அனைத்து மானியங்களையும் சேர்த்து 50 விழுக்காட்டிற்கு மேல் பெறும் நிலை சில மாநிலங்களைப் பொறுத்தவரை உள்ளது. இரண்டாவதாக மாநிலங்களின் கடன் சுமைகள் வேகமாக உயர்ந்துகொண்டே போகின்றன. மூன்றாவதாக ஒரே இடத்தில் அனைத்தையும் குவிக்காமல் பரவலாக்கப்பட வேண்டுமென்ற கொள்கை வலியுறுத்தப்படுவதன் விளைவாக எல்லா மாநிலங்களுக்கும் திருத்திய கூடுதலான வருவாய்த் திட்டங்கள் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, சிறப்பு அந்தஸ்து பெறாத மாநிலங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ள எல்லா மாநிலங்களுக்கும் உரிய மானியங்கள் குறைந்தபட்சம் 40 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டும். திட்ட வருவாய் மானியங்களுக்கான கணிப்புக்களும், இதற்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டுமெனப் பரிந்துரைக்கிறேன். இங்கு வைக்கப்பட்டுள்ள பட்டியலில் துரதிர்ஷ்டவசமாக மத்திய அரசு சார்பான திட்டங்களுக்கான நிதியாதாரங்கள் மாநிலங்களுக்கு எந்த வழிமுறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதற்கு எந்தவிதமான தெளிவான குறிப்பும் காணப்படவில்லை. மிகச் சில திட்டங்கள், நான்கு அல்லது ஐந்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் மட்டுமே மத்திய அரசு சார்பான திட்டங்களாக தொடர்ந்து நீடிக்க வேண்டும். மற்ற எல்லா திட்டங்களுக்கும் உரிய வருவாய் ஆதாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க அடிப்படையான வழிமுறையாக இறுதியாகப் பின்பற்றப்பட்ட கட்கில் நெறிமுறைகளே பின்பற்றப்பட வேண்டும். இதுவும் நூறு சதவிகித மானியம் என்ற அடிப்படையிலேயே வழங்கப்பட வேண்டும்.''

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

# சிறு சேமிப்புத் துறை

''எய்ப்பில்வைப் பாக வருவாம் ஐந்தொன்றை
மெய்ப்பிணி செய்வரைவிற் கூட்டிடுக - கைப்பொருள்வாய்
இட்டிலுய் வாயிடுக்க வீங்க விழையற்க
வட்டன் மனைக்கிழவன் மாண்பு.

- இன்னிலை

''பொய்கையார்''

பொருளைத் திரட்டுவதே மனைக்குரிய தலைவன் செயலாகும். வருவாய் குறைந்தால் செலவைக் குறைக்க வேண்டும். தனக்கு வரும் வருவாயில் ஐந்தில் ஒரு பங்கை வயதான காலத்தில் நுகர்வதற்குரிய சேமநிதியாக வைத்திருக்க வேண்டும். மேலும் அப்பொருள் உடற்பிணி போக்குவதற்கும் மக்கட்கு மணம் செய்வதற்கும் பயன்படும்.

---

★ தேசிய சேமிப்புப் பத்திரம் 8 ஆம் வெளியீடு
★ தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு 1987
★ பொது சேமநலநிதி
★ மாதாந்திர வருமானத் திட்டம்
★ விவசாயிகள் சேமிப்புப் பத்திரம்
இந்திரா சேமிப்புப் பத்திரம்
★ அஞ்சலகக் குறித்தகால வெளியீடு
அஞ்சலகத் தொடர்வைப்புத்திட்டம்/
வளரும் மாத சேமிப்புத் திட்டம்

---

## மாவட்ட சிறுசேமிப்பு பரிசுக்கூப்பன் திட்டம் - 90

- ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு பரிசுக்கூப்பன்
- 1.6.90 முதல் 31.12.90 வரை தனிநபர்கள் மட்டுமே முதலீடு செய்து மாருதி கார் முதல் 262 பரிசுகளில் ஒன்றை வென்றிடுங்கள். (தமிழகத்தில் முதலீடு செய்பவர்களுக்கு மட்டுமே)
- ஒவ்வொரு ஒரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.
- சென்னை நகரில் ஒவ்வொரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு சிறுசேமிப்பு இயக்குநர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.

---

● தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு - 87ல் (NSS-87) முதலீடு செய்து 100% வருமான வரிவிலக்கு ரூ.40,000/- வரை பெற்றிடுங்கள்.
● தேசிய சேமிப்புப் பத்திரம் 8ஆம் வெளியீடு/15 ஆண்டு பொது சேமநலநிதியில் முதலீடு செய்து வருமான வரிச்சட்டம் 88 பிரிவின்படி ரூ.50,000/- வரை 20% வரிச்சலுகை பெறுங்கள்.
● மத்திய அரசுக்கு இணையாகச் சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத்தொகை
● ரூ.1000/-ம் அதற்கு மேலும் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களுக்கு
★ இக்குறியிட்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் 1% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

**சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும்**

**பரிசுக்கூப்பன்கள்**
**மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் கிடைக்கும்**

இயக்குநர்
**சிறுசேமிப்புத்துறை**
143, அண்ணா சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

## டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்

# முதல் பட்டமளிப்பு விழா

மாண்புமிகு தமிழக முதல்வர்-முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் 14.10.90 அன்று கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

இந்தப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா இது. இதற்காகப் பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றக் குழு, தீர்மானம் நிறைவேற்றியது.

இப்பல்கலைக்கழகத்தின் வேந்தரும், மேதகு தமிழக ஆளுநரு மான திரு பர்னாலா அவர்கள் தலைமையில், சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற இவ்விழாவில்- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும், இப்பல்கலைக்கழகத்தின் இணைவேந்தருமான டாக்டர் பொன்முடி வரவேற்புரையாற்றி னார். கல்வித்துறைச் செயலாளர் திரு. சங்கர சுப்பையன் இ.ஆ.ப., அவர்களும் கலந்துகொண்டார்.

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் தகுதியுரை ஆற்றினார். அதன்பின், பல்கலைக்கழக வேந்தர் மேதகு தமிழக ஆளுநர் பர்னாலா அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குப் பல்கலைக்கழகத்தின் சார்பில் டாக்டர் பட்டம் அளித்துப் பாராட்டினார்.

எம்.டி., எம்.எஸ்., எம்.டி.எஸ்., உட்படப் பல்வேறு பிரிவு களில் மொத்தம் 326 பேருக்கு இவ்விழாவில் பட்டமளிக்கப் பட்டது. இதில் 138 பேர் நேரடியாக விழாவில் பங்கேற்றுப் பட்டம் பெற்றனர். மேதகு தமிழக ஆளுநர் திரு. பர்னாலா அவர்கள் இப்பட்டங்களை வழங்கி உறுதி மொழியும் எடுக்கச் செய்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அச்சொற்பொழிவு விவரம் வருமாறு:

**முதல் அட்டை சொல்லும் செய்தி**

தமிழக ஆளுநர் - இப்பல்கலைக்கழக வேந்தர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களே!

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் - இப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர் மாண்புமிகு பொன்முடி அவர்களே!

இப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்களே!

ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களே!

ஆசிரியப் பெருமக்களே!

மருத்துவத் துறை நண்பர்களே!

மாணவ மணிகளாம் என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே!

என் நாற்பதாண்டுக் கால நண்பரின் பெயரால் அமைந் துள்ள இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தைக் கடந்த ஆண்டு இந்தியக் குடியரசுத் தலைவரை அழைத்துத் தொடங்கி வைத்ததிலும் - இந்த ஆண்டு இந்தப் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவதிலும் மெத்தவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் நமது வேந்தராம் ஆளுநர் அவர்களும், துணைவேந்தரும், ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்களும் எனக்குமோர் பட்டம் வழங்குவது, என்னை அழைத்தபோது எனக்குத் தெரியாது. முடிவு எடுத்த பிறகு அவர்தம் உணர்வுகளை மறுத்திட வழியின்றி, நண்பர் பெயரால் அமைந்த பல்கலைக் கழகமன்றோ; அதனை எண்ணிப் பூரிப்பு கொண்டு நன்றியும் தெரிவித்துக் கொள் கிறேன்.

மருந்து என ஒரு தனி அதிகாரமே எழுதிய திருவள்ளுவப் பெருமான்;

**''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்''**

என்றும்,

**''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்''**

என்றும், கூறியதோடு அல்லாமல்-

**''உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று அப்பால்நாற் கூற்றே மருந்து''**

நோயுற்றவன், நோய்தீர்க்கும் மருத்துவன், நோய்க்கேற்ற மருந்து, அருகிருந்து மருந்தளிக்கும் செவிலியர் என நான்கு வகைப்பாடு உடையது மருத்துவத் துறை என்பதை இரண் டாயிரம் ஆண்டுகட்கு முன்பே வரையறுத்துள்ளார்.

அகத்தியர், திருமூலர், தேரையர், புலிப்பாணி போகர் எனப் பழம்பெரும் ஆன்றோர்கள், பல்லாண்டுகளுக்கு முன்பே- இன்று நாட்டு வைத்தியம் என அலட்சியப்படுத்தப் படும் பச்சிலை மூலிகை மற்றும் பல்வேறு மருந்துகளைப் பற்றி விளக்கிச் சொல்லி புகழ்நாட்டும் வைத்தியத்தை வையத்திற்கு வழங்கிச் சென்றுள்ளார்கள்.

விஞ்ஞான வளர்ச்சியினூடே புதிய புதிய கண்டு பிடிப்புகள், ஆய்வுகள், நாளும் பெருகி வரும் இக்காலத் திலும்கூட நாட்டு வைத்தியத்திற்கும் நவீன மருத்துவத்திற்கும் இணைப்புப் பாலம் ஒன்று இல்லாமற் போகவில்லை. எடுத்துக்காட்டாக, காமாலை நோய்க்குக் கீழாநெல்லி வேரை முன்பு அப்படியே அரைத்துக் கொடுத்தோம்! இன்று அதனைப் பக்குவப்படுத்தி, அளவிற் சிறிதாக்கி - ஆனால் அதன் சக்தி குறையாமல், நவீனக் குப்பிகளில் அடைத்துப் பயன்படுத்து கிறோம்!

இப்படிப் பழைய வைத்தியம்; இன்றைய பல நவீன முறைகள் எனும் மாடமாளிகை கூட கோபுரங்கள் எழுந்திட- அடித்தளமாய் விளங்குவதை நாம் மறந்திடலாகாது!

தமிழகத்தில் முறையான மருத்துவக் கல்வி தொடங்கி, இன்றைக்கு 155 ஆண்டுகள் ஆகின்றன. முதன் முதலாகச் சென்னை மருத்துவக் கல்லூரி, 1835-ஆம் ஆண்டு உதய மாயிற்று. இரண்டாவதாக ஸ்டான்லி மருத்துவப் பள்ளி 1938-ஆம் ஆண்டு நிறுவப் பெற்றது. மேலை நாடுகளின்

## ஈடிணையற்ற உன்னத முயற்சி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களையும்' கண்புரை நோயற்றோர், ஒளியமைந்த கண்ணாளர் உலவும் மாவட்டங்களாக மாற்றும் அரிய நோக்கோடு பெரிய முயற்சியுடன் மருத்துவத்துறை செயல்படுகிறது. சென்னைக்கு வருகை தந்த மேற்கு செருமானிய நாட்டுக் கண்நோய்ச் சிகிச்சை வல்லுநர் டாக்டர் சிடாட்சுவெர்க் ஏழை, எளிய மக்களின் கண்ணொளியைக் காப்பதில் தமிழ்நாடு மேற்கொண்ட நடவடிக்கைகள் உலகிலேயே ஈடிணையற்ற உன்னத முயற்சி என்று உளமார்ப் பாராட்டி யுள்ளார். —டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் ஆற்றிய தகுதியுரையிலிருந்து. *(14.10.90)*

மருத்துவக் கல்வி வளர்ச்சி, புதிய புதிய கண்டுபிடிப்புகள், விஞ்ஞானப் பொறி இயல் வளர்ச்சி போன்றவை இடை விடாது நமது மருத்துவக் கல்வியை விரிவுபடுத்தப் பெருந் துணையாக அமைந்துள்ளன. ஒரு நாட்டின் செழிப்பும் அமைதியும் நிலைபெற, அந்த நாட்டின் ஆரோக்கியமான மக்களும் பெருங்காரணமென்பேன்.

தமிழக அரசு இன்று பத்து மருத்துவக் கல்லூரிகளையும், ஒரு பல் மருத்துவக் கல்லூரியையும், இரண்டு செயற்கை அவயவம் பொருத்தி மறுவாழ்வு தரும் கல்லூரிகளையும் நடத்தி வருகிறது.

திறமைசாலிகளான மருத்துவர்கள்; தேவைக்கேற்ற மருத்துவமனைகள் மட்டுமிருப்பின் போதாது! அந்தத் திறமைசாலிகள் மனிதநேயமுடையவர்களாகவும், மருத்துவ மனைகள் மக்களின் உயிர் காக்கும் கடமையுணர்வு மிக்கோர் இருந்திடும் புனித நிலையங்களாகவும் திகழ்ந்திடல் வேண்டும்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் முடிவுகாண இயலாத பல பெருங்கோரிக்கைகளைச் சமாளிப்பதற்காக நாம் போராட வேண்டியிருந்தது. சாதாரண மனிதனுக்குரிய பாதிப்புகளும், உடல் நலக் குறைவுகளும் என்னையும் பாதித்தது உண்டு என்பதால், தமிழ்நாட்டிலுள்ள எந்த ஒரு ஏழைக்கும் போதிய மருத்துவ வசதி இன்மையால், சிகிச்சை

## அரசின் அறிவிப்புகள்
## ஆக்கப் பணிகள்

★ தஞ்சை மாவட்டத்திலுள்ள கிராமப்புற வளர்ச்சிக்கு மட்டும் ரூ.1.65 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் தஞ்சையில் அறிவித்தார் (25.8.90).

★ வேளாண்மைக் கடன் நிவாரணத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ரூ.478 கோடி நிவாரணம் அளிக்கப்பட்டு, 17 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது (4.9.90).

பெற இயலவில்லை என்ற நிலை ஏற்படக் கூடாதென்பதில் நான் மிகவும் கவனமாயிருந்து வருகிறேன்.

இம்மாநிலத்தில், நவீன மருத்துவ வசதி கிடைக்கவில்லையென்று எந்த ஒரு நோயாளியும் வேதனைப்படக் கூடாது என்பதும், எல்லா மருத்துவ வசதிகளும் இம்மாநிலத்தில் கிடைப்பதற்கான வழி செய்வதும், தொழில் நுட்பப் பணியாளர்கள், மருத்துவர்கள், மருத்துவ துணைப் பணியாளர்கள் ஆகிய அனைவரும் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டியதும் மிகவும் இன்றியமையாதவையாகும்.

கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக, மக்கள் நல்வாழ்வுப் பணிக்கென பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்துவதால் ஏற்படக் கூடிய நன்மை தீமை குறித்து, மருத்துவத் துறையினர் கூடி விவாதம் நடத்தி வந்துள்ளனர். இந்த விவாதம், டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் காலத்திலேயே தொடங்கி வைக்கப்பட்டது. பல்கலைக் கழகங்களில், துறை நிலையில் இருந்த வேளாண்மைக் கல்வி, தனித்தனி துறைகளில் சிறப்பு நிலை பெறுவது என்ற கோட்பாடு உருவாகியதன் விளைவாக இந்நாட்டில் பல வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் மலர்ந்தன. இந்த வளர்ச்சியானது பசுமைப் புரட்சிக்கும் பால் வளப் பெருக்கத்திற்கும் வித்திட்டது. கல்வியானது, இன்றைய நிலையில் விரிந்து, பரந்து, பல துறைகளாகப் பல்கியுள்ளது. அத்துறைகளின் தரமும் மேம்பாடும் குறையாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது கொள்கை வகுப்போரின் பொறுப்பாகும். இம்மாநிலம் தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்துவது குறித்து, அடுத்து கவனம் செலுத்தியது. இதனால், தொழில் நுட்பத் துறை வளர்ச்சி பெற்று, ஆராய்ச்சிக்கான வளவாயில்கள் பெருகி, தொழில் நுட்பக் கல்வியாளர்கள் தொழில் துறையில் அதிக நாட்டம் செலுத்தத் தக்க சூழ்நிலை உருவாகி, மக்களின் கனவு நனவாகி வருகிறது. மருத்துவப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவதால் மருத்துவக் கல்வியின் தரமும் மருத்துவ முறையும் பொதுச் சுகாதார நிலையும் மேம்பாடடைய வழி வகுக்கும்.

மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கும் ஏனைய பல்கலைக் கழகத்திற்குமிடையே கொள்கை அளவிலும், கல்வி அளவிலும் பல வேறுபாடுகள் இருப்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால், நிர்வாக நடைமுறைகளில் இவற்றுக்கிடையே வேறுபாடுகள் இருப்பது பற்றி ஒருசிலர் மட்டுமே அறிவர். இதில் எத்தகைய இடர்ப்பாடு இருந்தாலும் இம்மாநிலத்தில் மருத்துவப் பட்டதாரிகளுக்கு அளிக்கும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதன் அவசியத்திற்கு எதிரான மாற்றுக் கருத்து ஏதுமில்லை. இக்காலம் எல்லா நிலைகளிலும் சிறப்பு நிலைப் பயிற்சி தேவைப்படுகின்ற காலமாகும். அறிவியல் துறையில் ஏற்படும் முன்னேற்றங்கள் உலகம் முழுவதும் மிக விரைந்து பரவி வருகின்றன. இம்முன்னேற்றத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில், ஒவ்வொரு துறையிலும் மென்மேலும் சிறப்பு நிலைப் பயிற்சி மிகவும் இன்றியமையாததாக உள்ளது. உலக மருத்துவ அறிஞர்களோடு ஒப்பிட்டு நோக்கும் அளவிற்கும், ஒருங்கு வைத்து எண்ணத்தக்க அளவிற்கும், தமிழக மருத்துவப் பட்டதாரிகளும் முதுநிலைப் பட்டதாரிகளும் தகுதியும், சிறப்பான பயிற்சியும் பெற்றுள்ளனர் என்பது அனைவரும் நன்கறிந்த ஒன்றாகும்.

பல்லாண்டுக் காலமாகவே தமிழக அரசு, பிற்படுத்தப் பட்டவர்களுக்கும் ஒடுக்கப்பட்ட பிரிவினர்களுக்கும், குறிப்பிட்ட அளவு இட ஒதுக்கீடு செய்யும் கொள்கையைப் பின்

பற்றி வருகிறது. இதனால், மருத்துவப் பணிகளின் தரத்தில் எந்தவிதச் சீர்குலைவும் ஏற்படவில்லை. அன்றியும், நம் மருத்துவர்கள் திறமை குறைந்தவர்கள் என்ற புகார்களும் இதுவரையில் எழுந்ததில்லை. வளர்ச்சியடைந்த நாடுகள், செல்வம் கொழிக்கும் வளைகுடா நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள் உட்பட, உலகெங்கிலுமுள்ள பல்வேறு நாடு களிலும் நம் நாட்டு மருத்துவப் பட்டதாரிகளை விரும்பி அழைக்கும் நிலையுள்ளது. எனினும் நாம் வளர்ச்சியடைந்த நாடுகளைப் போல அறிவியல் ஆராய்ச்சி சாதனைகளில் மன நிறைவளிக்கத் தக்க முன்னேற்றத்தை அடையவில்லை என்ற கருத்து பரவலாக உள்ளது. ஆராய்ச்சி நெறிமுறை களில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளா நிலை, பயிற்சியில்லாமை, அடிப்படை வசதியில்லாமை, நிதி நெருக்கடி ஆகிய காரணங்களால் நாம் இச்சாதனை களை எய்த முடிய வில்லை. நூலகங்களை அமைத்தல், ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்துதல், ஆகியவை தொடர் பாக நம்முடைய மருத்துவப் பல்கலைக் கழகம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் நம்முடைய அரசு இந்நிலையைப் போக்க பெருமுயற்சி மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் ''தாமரை'' என்ற பெயரில் கடந்த ஆண்டு அமைந்துள்ள முதுநிலை மருத்துவக் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் கணிசமான நிதி உதவி அளிக்கத் தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது.

தொழில் நுட்பவியல், சட்டம், அறிவியல், கலைகள், மொழிகள் ஆகிய கல்வித் துறைகள், மத்திய, மாநில அரசு களின் கல்வி அமைச்சகங்களின் கீழ் வருகின்றன. இவை, மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் தன்னாட்சி அமைப்பாகச் செயல்படும் பல்கலைக்கழக மானியக் குழுவின் மூலம் மத்திய நிதி உதவியை ஓரளவிற்குப் பெறுகின்றன. ஆனால், மருத்துவக் கல்வித் துறை, நல்வாழ்வுத்துறை அமைச்சகத் தின் கீழ் வருகிறது. அனைத்திந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் போன்ற மத்திய அரசு நிறுவனங்களுக்கு மத்திய அரசு முழு அளவில் நிதியுதவி அளிக்கிறது. அது, இந் நாட்டின் ஒரு சிறு பகுதியின் தேவைகளை மட்டுமே நிறைவு

**அரசின் அறிவிப்புகள்**
**ஆக்கப் பணிகள்**

★ எழும்பூர் துணை மின்நிலையத்தின் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், எழும்பூர், சேத்துப்பட்டு, கீழ்ப்பாக்கம், தூளை உட்பட பல பகுதிகளில் உள்ள 1.5 இலட்சம் வீடுகளுக்கும் அலுவலகங்களுக்கும் தடங்கல் இன்றி மின்சாரம் கிடைக்கும் என்று தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்துள்ளது (2.9.90).

★ சுயதொழில் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 108 நகரங்களுக்கு ரூ.6.5 கோடி மானியம் வழங்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் தஞ்சையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் (3.9.90).

செய்கின்றது. இந்நாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் பெரும்பாலானவை, அந்தந்த மாநில அரசுகளால் நடத்தப் படுகின்றன. இவற்றிற்கு மாநில அரசுகளே முழு அளவில் நிதி உதவி அளிக்கின்றன. தற்போது, பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு இணையாகக் கருதக் கூடிய அளவில் நல்வாழ்வுத் துறை அமைச்சகத்தின் கீழ் எந்த அமைப்பும் இல்லை.

மருத்துவப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட வேண்டு மென்ற எண்ணம் டாக்டர் ஏ.எல். முதலியார் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்த போதே உருவான போதிலும், மத்திய அரசின் மானியங்கள் இல்லாத காரணமாக, இது செயல்வடிவம் பெறவில்லை. டாக்டர் ஏ.எல். முதலியார் அவர்கள், சேப்பாக்கத்திலுள்ள கலை - அறிவியல் வளாகம், கிண்டியிலுள்ள தொழில் நுட்பவியல்-அறிவியல் வளாகம், தரமணியிலுள்ள மருத்துவ அறிவியல் வளாகம் ஆகிய மூன்று அமைப்புகளை உருவாக் கினார். இந்தத தொழில் நுட்பவியல் வளாகம் பின்னர் தொழில் - நுட்பப் பல்கலைக் கழக வளாகமாக உருவா கியது. இதற்கு மாநில அரசிடமிருந்தும் பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்தும் ஒருசேர நிதி உதவி பெற்று விரைவாக வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புள்ளது.

இப்போது தனியே மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்று

## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ போக்குவரத்துத் தொழிலாளர்களின் வார விடுமுறை நாட்கள் தேசிய விடுமுறை நாட்களில் வந்தால், அந்த விடுமுறை நாட்களுக்குப் பதிலாக வேறு நாட்களில் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் என்ற புதிய சலுகையை தமிழ்நாடு அரசு அறிவித் துள்ளது (28.8.90).

★ மதுரையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க 3 அடுக்கு மேம்பாலம் ஒன்று கட்டபொம்மன் சிலையிலிருந்து எல்லிஸ் நகரம் வரை வளை வில்லாமல் கட்டப்பட உள்ளதாக மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ்.தங்கவேலு அவர்கள் அறிவித்தார் (2.9.90).

உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தையும், இதன் வளாகத்தையும் மேம்பாடடையச் செய்ய மாநில அரசு நிதி திரட்ட வேண்டியுள்ளது. இப்பல்கலைக் கழகம், மருத்துவச் சிகிச்சை ஆய்வில் ஈடுபட்டு நோய் தீர்க்கும் வழிமுறைகளைக் கண்டறிவதில் பெருநாட்டம் கொண் டுள்ளது என்பதை நான் நன்கறிவேன். மக்கள் நல்வாழ்வுக் காக ஆய்வு செய்ய வேண்டிய துறைகள் இன்னும் பல உள்ளன. தமிழ்நாட்டில் மருந்து தயாரிக்கும் தொழிலை மேம்படுத்த வேண்டும் என்ற நமது விருப்பத்திற்கு, மருந் தாக்கியல் ஆராய்ச்சிப் பிரிவு உறுதுணையாக இருக்க வேண்டியது அவசியமாகும். பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்களின் தேவை அதிகமாகவும், ஆனால் அவர் களின் எண்ணிக்கை குறைவாகவும் இருப்பதாலும், இதற் கிடையேயுள்ள இடைவெளியை நிரப்பும் பொருட்டு மருத் துவத் துணைப் பணியாளர்களுக்குப் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு பயிற்சிக்குரிய வசதிகளை மேம்படுத்த வேண்டி யது அவசியமாகும்.

நமது மக்களின் உடல்நலத்தை மேம்படுத்துவதற்குப் பொது மருத்துவத் துறையிலும், கொள்ளை நோயியலிலும் ஆய்வு மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். தொன்றுதொட்டு வரும் பண்டைய மருத்துவ முறைகள் குறித்துக் குறிப்பாக இம்மாநிலத்தில் வழிவழியாக வரும் சித்த மருத்துவ முறை குறித்து ஆய்வு மேற்கொண்டு அம்மருத்துவ முறையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; இப்பணிகளைச் செய்து முடிக்க அதிக அளவு நிதி ஆதாரம் தேவைப்படுகிறது. இந்நோக்கங்களை எய்துவதற்காகவென்றே இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தைத் தற்போது அரசு பயன்படுத்த எண்ணியுள்ளது. இப்பல்கலைக் கழக வாயிலாகக் கிடைக்கப் பெறும் வசதிகளைப் பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட மருத்துவ ஆய்வுகள் குறித்த கொள்கைகளை நடைமுறைப்படுத்த அரசு தன்னாலியன்ற அனைத்து உதவிகளையும் செய்யும்.

நமது நாட்டில் நவீன மருத்துவக் கல்வி குறித்து, வளர்ச் சியடைந்த நாடுகளில் பின்பற்றப்படும் நோய் தீர்க்கும் முறைகளைப் பின்பற்றுகிறதேயன்றி, இந்தியக் கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டியங்கவில்லை என்ற குற்றச்சாட்டு அடிக்கடி தெரி விக்கப்படுகிறது. இந்தியக் கிராம மக்களிடையே மருத்துவத் துறையினர் நெருங்கிய தொடர்பு கொள்ள, மருத்துவப் பணியின் நேரடி நடவடிக்கைகளுக்கும் பல்வேறு மருத்துவ அமைப்புகளுக்குமிடையே இப்பல்கலைக் கழகம் தொடர்பை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யும் என்று நம்புகிறேன்.

முதுநிலைப் பட்டதாரிகளான உங்களில் பெரும்பாலோர் அரசுப் பணியில் இருக்கின்றீர்கள். சிலர் தனியார் துறை யில் பணி புரிகின்றீர்கள். நீங்கள் எங்கு பணிக்கு அமர்த்தப் பட்டுள்ள போதிலும், உங்களுடைய தலையாய நோக்கம் சமுதாயத்திற்குப் பணிபுரிவதாகவே இருக்க வேண்டும்.

இன்றைய உலகியல் வாழ்வு பணத்தின் மூலம் வரும் மரி யாதையையும் செல்வாக்கையுமே முக்கியமானதாகக் கருதும் பண்பாட்டுச் சூழலைக் கொண்டுள்ளது. மருத்துவர்கள் மட்டும் இத்தகைய பொதுவான போக்கிலிருந்து விலகி, தனித்து இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பது பொருத்த மற்றதாக இருக்கும் என நான் கருதுகிறேன். ஆயினும், பணம் சம்பாதிப்பது என்பது தொண்டு புரிவதன் வாயி லாகப் பெயரையும் புகழையும் ஈட்டுவதற்கு எதிரானதல்ல. அறிவை வளர்த்துக் கொள்ளுவதில் நாட்டம், தொண் டாற்றுவதில் ஈடுபாடு, புகழடைய வேண்டும் என்ற குறிக்

கோள், செல்வத்தைச் சேர்ப்பது ஆகியவை ஒன்றுக்கொன்று இணைந்து பிணைந்து செல்லத் தக்கவையாகும். தொண்டாற்றுவதன் மூலமாகவும், நேர்மையாக நடப்பதன் வாயிலாகவும் நல்ல பெயரையும் அதன் பயனாக அதிகமான வாடிக்கையாளர்களையும், வசதியான நிலையான வாழ்க்கையையும் அடையலாம்.

இன்று, நமது பல்கலைக் கழக வேந்தரின் பெருமைக்குரிய சீர்மிகு கைகளிலிருந்து முதுநிலைப் பட்டத்திற்குரிய சான்றிதழைப் பெறவிருக்கும் நீங்கள் அனைவரும், உங்களுடைய தொழிலில் நேர்மையைக் கடைப்பிடித்துத் திறமையை நிலைநாட்ட வேண்டுமென்றும், வாழ்நாள் முழுவதிலும் மென்மேலும் மருத்துவ அறிவை வளர்த்துக் கொள்வதில் நீங்கள் நாட்டம் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். நோயென்று வருகின்ற ஒருவருக்கு மருத்துவர் காட்டும் இன்முக வரவேற்பே நோய் தீர்க்கும் முதல் சிகிச்சையாகிறது. மருத்துவரின் நம்பிக்கையூட்டும் பேச்சே அந்த நோயாளியின் இதயத்துக்கு வலிவூட்டுகிறது. என்னதான் சகலகலா வல்லவரான மருத்துவராயிருந்தாலும் கடுமொழி கூறுபவராகவும், காசு ஒன்றிலே மட்டும் குறியானவராகவும், மறந்தும் புன்னகை புரியாதவராகவும் இருப்பாரேயானால், அரிது அரிது அவரிடம் சிக்கியவரின் நோய் தீருவது அரிதேயாகும், என்பதை மருத்துவத்துறை நண்பர்கள் உணர்ந்து, மக்கள்பணியாற்றிட வேண்டுமென அழைக்கிறேன்.

மருத்துவப் பணியாளர்களுக்குத் தேவையான மருத்துவக் கல்வியைத் தொடர்ந்து அளிப்பதற்கான அனைத்து வசதிகளையும் இப்பல்கலைக்கழகம் செய்து கொடுக்க வேண்டும். அத்தகைய முயற்சிகள் அனைத்திற்கும் அரசு அதன் முழு ஆதரவையும் அளிக்கும்.

பல் மருத்துவம், செவிலியர் மருந்தாக்கியல் போன்ற தொடர்புடைய துறைகளில் முதுநிலைப் பட்டங்களைப் பெறுபவர்களும் பன்னலமும் பெற முயன்று உழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் அனைத்து நற்பேறுகளையும் பெற வேண்டுமென வாழ்த்துகிறேன். நீங்கள் அனைவரும் அயராது உழைத்து, உங்களுக்குக் கிட்டும் அனைத்து வாய்ப்புக்களையும் நல்ல முறையில் பயன்படுத்தி, நம்முடைய நாட்டின், நீங்கள் கல்வி பயின்ற பல்கலைக் கழகத்தின், உங்கள் கல்லூரியின், உங்கள் குடும்பத்தினரின் உயர்ந்த நோக்கங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றுவீர்கள் என நான் நம்புகிறேன். உங்களுடைய நேர்மையான முயற்சிகள் அனைத்திலும் உங்களுக்கு வெற்றி கிட்ட வேண்டுமென்று நான் மனமார வாழ்த்துகிறேன்.

## ஏழை எளிய மக்களிடம் பரிவு

தொழுநோயாளர், பிச்சைக்காரர் ஆகியோருக்கு மறுவாழ்வு இல்லங்கள், ஆதரவற்றோர்களுக்குக் கருணை இல்லங்கள், 3.6.1972 முதல் கண்ணொளி வழங்கும் திட்டத்திற்காக இலவசக் கண்சிகிச்சை இயக்கங்கள் ஆகியவற்றிற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏழை எளிய மக்கள்பால் அவர்தம் நலவாழ்வில் முதல்வர் கலைஞர் காட்டும் ஆர்வத்தையும், பரிவையும் எடுத்துக் காட்டுகின்றன.

சென்னைப் பொது மருத்துவமனையில் நா-செவித்திறன் மருத்துவப் பிரிவு, வாய் பேசாத-காது கேளாத சிறுவர்களின் மறுவாழ்வுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளில் குவிந்த நிதியிலிருந்தே இந்த மருத்துவப் பிரிவு உருவாயிற்று. இருதய நோய் சிகிச்சைப் பிரிவிலும், மாற்று சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவிலும் நவீன சிறப்புக் கருவிகளை நிறுவி, எல்லா வகையான சிகிச்சை முறைகளையும் மேற்கொள்வதற்காக சென்னை பொது மருத்துவமனையில் இந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளாகவே 2.5 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட நிதியுதவி முதலமைச்சர் நிதியிலிருந்து வழங்கப்பட்டிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

—டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் ஆற்றிய தகுதியுரையிலிருந்து. *(14.10.90)*

# 'சிடா' சமூகக்காடு திட்டப் பணியில்
# ஒரு திருப்பு முனை

**''என்னதான் அரசு பல திட்டங்களை நிறைவேற்றினாலும் அந்தத் திட்டங்கள் கீழ் மட்டத்திலே இருக்கின்ற மக்களைப் போய்த் தொட வேண்டுமானால் அதனைச் செவ்வனே செய்யக்கூடிய அமைப்புகளாக ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் இவைகள் தான் இருக்கின்றன என்பதை மறந்து விடக் கூடாது.**

**—டாக்டர் கலைஞர்**

நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும், முதல் அரசு நிகழ்ச்சியாகப் பங்கு கொண்டு சிறப்பித்த ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர்கள் மாநாட்டில்-சென்னையில் 7.2.1989-இல் நடைபெற்ற போது-கூறிய அறிவுரைதான் மேலே குறிப்பிட்டுள்ள செய்தியாகும்.

அவர்களது அயராத உழைப்பும், ஆதரவும் அரவணைப்பினால் தான் ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் பொலிவோடும் வலிவோடும் மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்றன. பதவிக் காலத்தை மூன்று ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டிற்கு உயர்த்தி உத்திரவிட்டுள்ளார். பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் வழங்கி அடித்தள அமைப்புகளான ஊராட்சிகள் ஒன்றியங்கள் ஜனநாயக முறைப்படி செயல்பட செய்தார். பொதுச் சுகாதார பணியாளர்களை மீண்டும் ஒன்றிய நிர்வாகக் கட்டுப்பாட்டில் கொண்டுவர உத்தர விட்டார். விவசாயத்துறைப் பணியாளர்களையும் ஒன்றியத் தலைவர்கள் கட்டுப்பாட்டில் பணியாற்றிடச் செய்தார். அதுமட்டுமல்ல, சத்துணவுக்கூடம் சம்பந்தமாக அனைத்துப் பணிகளையும் ஒன்றியத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் கொண்டு வர ஆணை பிறப்பித்தார். மைய அரசுத் திட்டங்கள் செயல்படுத்துவதில் குறிப்பாக ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டப் பணிகளைத் தாங்களாகவே திட்டமிட்டுச் செயல் படுத்த ஊராட்சிகளுக்கு முழு அதிகாரம் வழங்கி அவர்களைச் சுயமாக இயங்கிட செய்தார்.

ஒவ்வொரு ஊராட்சியும் சுயமாகத் திட்டமிட்டு தங்கள் பகுதிக்குத் தேவையானவற்றை நிறைவேற்றிட தேவையான நிதி உதவிகளை அளித்து ஊரக வளர்ச்சித் திட்டங்கள் சிறப்பாக நடைபெற செய்துள்ளார். ஆதிதிராவிடர்களுக்குக் கட்டப்படும் தொகுப்பு வீடுகளில் தற்போது தமிழக அரசு நிதியாக ரூ.4,000 ஒவ்வொரு வீட்டிற்கும் தந்துதவி அதன் மூலம் 'காங்கிரிட்' தளம் போட்ட வீடுகளை 1989-90-இல் 43,000 கட்டி முடித்து சாதனை புரிந்தது தமிழகம் தான்.

இந்த ஆண்டும் 45,000 வீடுகள் கட்டத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தற்போது பணிகள் முனைப்புடன் நடந்து வருகின்றன. மீனவர்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டிட வழிவகை கண்டவர் நமது தமிழக முதல்வர் தான்.

**ரெ. ஆறுமுகம் இ.ஆ.ப.**
**ஊரக வளர்ச்சி இயக்குநர்**

மண்சாலைகளைச் சரளைக்கல் பரப்பிய சாலையாகவும், சரளைக் கல் சாலைகளைத் தார்ச் சாலையாகவும் மாற்றி அமைத்திட சிறப்பு நிதி உதவி அளித்துள்ளார். ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டு திண்ணையில் இருந்த ஊராட்சி மன்ற அலுவலகத்தை, சிறப்பாகச் செயலாற்றிட ஒவ்வொரு ஊராட்சிக்கும் சொந்தக் கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிய பள்ளிக் கட்டடம் கட்ட திட்டம் தீட்டிச் செயலாக்கி வருகிறோம்.

தொலைதூர கிராமங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட - 2000 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கிட ஆணை பிறப்பித்து தற்போது வழங்கப்பட்டு வருகிறது. கிராமக் குடிநீர்த் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்திட ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் கூடுதல் இயக்குநர் (குடிநீர் விநியோகம்) என்ற பதவி தோற்றுவிக்கப்பட்டு அதன்மூலம் சிறப்பு கவனம் செலுத்தி குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளித்து வருகிறோம்.

நல்வாழ்வுத் திட்டங்களை முதல் அமைச்சர் அறிவித்துள்ள டாக்டர் முத்துலட்சுமி மகளிர் உதவித் திட்டம், இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் போன்றவைகளை மிகச் சிறப்பாக ஒன்றியப் பகுதியில் நிறைவேற்றி வருகிறோம்.

அடுக்கடுக்கான நல்வாழ்வுத் திட்டங்களை நாளும் அறிவித்து அதனை ஊர்ப் புறங்களில் நிறைவேற்றிட உற்சாகம் ஊட்டிச் செயல்படுத்தி வரும் நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிதி ஆதாரங்களை வகைபடுத்தி தொகைபடுத்தி விரிவாக்கவும், அதன் மூலம் ஊர்ப்புற மக்களுக்கு உதவிடும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை விரைவுபடுத்தி நடத்திடவும் ''ஊராட்சி நிதி ஆய்வுக்குழு'' ஒன்றினை ஏற்படுத்தினார். திருவாளர் ஏ.ஆர். தாமோதரன் அவர்களைக் கொண்ட அந்தக் குழு பல்வேறு மாவட்டங்களில் சென்று ஊராட்சி, ஒன்றியத் தலைவர்கள் கருத்துக்களைக் கேட்டுப் பதிவு செய்துள்ளது. மேலும் அரசின்



**இந்திய நாட்டில் தற்போது 1 கோடி வேப்ப மரங்கள் உள்ளன. வேப்ப மரப் பொருள்களிலிருந்து உரங்கள் தயாரிக்க முடியும். வேப்ப எண்ணெய் பல்வேறு தொழில்களில் பயன்படுத்தப் படுகிறது. வேப்ப மரப் பொருள்கள் அனைத்தும் இன்னும் மக்களால் முழுமை யாகப் பயன் படுத்தப்படவில்லை. வேப்ப மரங்கள் வளர ஊக்குவிக்கும் திட்டம் ஒன்றினை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் மேற்கொள்ளவிருக்கின்றது.**

பல்வேறு துறைத் தலைவர்களையும் கண்டு கலந்துரையாடியுள்ளார். இதன் அறிக்கை விரைவில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இவ்வாறு ஊரக வளர்ச்சியில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்தி, பாடுபட்டு வரும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் மேலும் ஒருபடி முன்னேறி ஊராட்சிகளுக்கு நிரந்தரமாக வருவாய் தரும் ''சிடா'' சமூகக் காடுகள் திட்டம் மூலம் ஏற்படுத்தப் பட்ட காடுகளைச் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடம் ஒப்படைத்து, அதன் மூலம் அவர்கள் அந்த காடுகளைக் காத்து அதன் மூலம் நல்ல வருவாய் பெற வழிவகை செய்தும் உத்தர விட்டுள்ளார்! என்பது, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். நல்ல உள்ளம் கொண்ட நாட்டிலுள்ளோர் நாளெல்லாம் பாராட்டிப் போற்றி டுவர். இது உண்மை. இதனால் ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் சுமார் ரூ.50,000 முதல் ரூ.1 இலட்சம் வரை வருவாய் வர வாய்ப்பு உள்ளது. இதற்கான ஆணை அண்மையில் அரசு வெளியிட்டுள்ளது. (அரசு ஆணை எண்.600 ஊரக வளர்ச்சித்துறை நாள் 23.7.90) முதல் கட்டமாக 360 காடுகளை ஊராட்சிப் பொறுப்பில் தொடர்ப் பராமரிப்புப் பணி செய்திடவும், அதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு ஏற்கெனவே தயாரிக்கப் பட்டுள்ள மேலாண்மைச் செயலாக்கத் திட்டத்தின்படி, (Management Plan) திட்டங்களை நிறைவேற்றிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளன. இதற்காக சென்னை கிருஷ்ணமூர்த்தி பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிறுவனம் நடவடிக்கை எடுத்து ஒவ்வொரு ஊராட்சிக்கும் தனியாக 'மேனேஜ்மெண்ட் பிளான்' தயாரிக்கும் பணி முடியும் தருவாயிலுள்ளது. இம்மாதிரியான பணிகளை ஆய்வு செய்ய ஒரு ''செயல்திறன் குழு'' அமைக்கப்பட்டு அது அடிக்கடி கூடி பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தும் வருகிறது.

முதல் கட்டமாக அரசு ஆணையில் அறிவித்த 360 காடுகள் 15.8.90 அன்று சுதந்திரத் திருநாளில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இது நிச்சயமாக நமது நிர்வாகத்தில் ஒரு திருப்புமுனைதான். உண்மையான அதிகார மாற்றம் என்று இதனைக் குறிப்பிடலாம். சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர்களுக்குச் சமூகக் காடுகள் திட்டம் குறித்து 3 நாட்கள் பயிற்சி எல்லா மாவட்டங்களிலும் வழங்கப்பட்டுள்ளது. இதில் வனத்துறை அலுவலர்கள், வளர்ச்சித் துறை அலுவலர்கள், வேளாண்மைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். இவ்வாறு வனத்துறை நிர்வாகத்திலிருந்து 360 காடுகள் பகுதி ஊரக வளர்ச்சி துறையைச் சேர்ந்த ஊராட்சி நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது குறித்து எண்ணும்போது இதன் பின்னணியில் நடந்தவைகளை நினைவு கூர்வது பொருத்தமாகும்.

''சிடா'' சமூகக்காடுகள் திட்டம்'' சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் தமிழகத்தில் 1980 ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. அதன் வளர்ச்சி பற்றிய ஆய்வுக் கூட்டம் ஸ்டாக்ஹோமில் நடைபெற்றது. அதில் இத்துறைச் செயலர் டாக்டர் எஸ்.நாராயண், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு ஊராட்சிகள் பொறுப்பில் தொடர் பராமரிப்பு செய்வது பற்றியும் ஒப்படைப்பது பற்றிய திட்டங்களைச் சம்பந்தப்பட்டவர்களுடன் விவாதித்தார். அதன் பயனாக ஒரு குழு ஸ்வீடன் நாட்டிலிருந்து தமிழகம் வந்து 7.2.90 முதல் 11.2.90 வரை தமிழகக் கிராமங்களில் சுற்றுப்பயணம் செய்து ஊராட்சிகளின் தலைவர்கள் பொது மக்கள் கருத்துகளைக் கேட்டறிந்தது.

எல்லோரும் ஊராட்சிகளிடம் ஒப்படைத்து தொடர் பராமரிப்பு செய்யலாம் என ஒருமித்து கருத்து தெரிவித்தனர். நானும், திருச்சி மாவட்டம் ''குளக்குடி கிராமத்திற்குச் சென்று அதன் ஊராட்சித் தலைவரைச் சந்தித்து அவரது கருத்து கேட்டேன். அவரது ஆழ்ந்த பற்றும், நம்பிக்கையும், செயல்திறனும் என்னை மேலும் முனைப்புடன் செயல்படத் தூண்டியது.

மரம் வளர்ப்பு மூலம் ஏலம் போட்டு, அரசு நிதி உதவி இல்லாமல் தெருவுக்கு ஒரு தொலைக் காட்சிப் பெட்டி என எல்லாத் தெருக்களிலும் 12 தொலைக்காட்சிப் பெட்டி நிறுவி மக்களின் ஆசையை நிறைவேற்றியுள்ள செயல் என்னைச் சிந்தித்து செயலாற்றத் தூண்டியது. பல்வேறு நிலைக் கூட்டங்கள் – ஆய்வுகள் – கருத்து பரிமாற்றம் – பிறகு தான் இந்த சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த திருப்பு முனையாகச் சாதனை புரிய முடிந்தது.

நிச்சயமாக ஊராட்சிகளின் எதிர்காலம் ஒளி மிகுந்ததாக இருக்கும் என திடமாக நம்புகிறேன். பேரறிஞர் அண்ணா அடிக்கடி சொல்வார், 'மக்களிடம் சென்று அவர்களுடன் கலந்து, அவர்களுக்குத் தேவையான வற்றை அவர்களிடம் உள்ளவற்றைக் கொண்டு செயலாற்று. நிச்சயம் வெற்றி கிட்டும்' என்பார். அதைத் தான் தமிழக அரசு செயலாற்றி வருகிறது.



# நலம் பயக்கும் சமூக நலத் திட்டங்கள்

மாண்புமிகு சமூக நலம் மற்றும்
ஊரகத் தொழில் அமைச்சர்

**திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன்**

**ஏ**ழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதற்கு இணங்க பல்வேறு சமூக நலத் திட்டப் பணிகள் ஏழை எளியோர் வாழ்வில் மகிழ்ச்சியைப் பெருக்கத் தக்க வகையில் தமிழக அரசால் நிறைவேற்றப்படுகின்றன. நலம் பயக்கும் அத்தகைய பணிகளால் பயன் பெறுவோர் எண்ணிக்கை நாள்தோறும் பெருகி வருகிறது.

### தமிழ்நாடு அரசு சத்துணவுத்திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 85 இலட்சம் குழந்தைகள் மற்றும் மாணவர்கள் பயன் பெறுகிறார்கள். இவற்றில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சேர்ந்த குழந்தைகள் 23.74 இலட்சம் ஆவர். மேலும் 2.01 இலட்சம் முதியோர் உதவித்தொகை பெறும் முதியோர்கள் பயன் பெறுகின்றனர். இத்திட்டத்தின் கீழ் 67,997 சத்துணவுக் கூடங்கள் இயங்குகின்றன. இவற்றில் 28,890 மையங்கள் 2-4 வயதுள்ள முன் பருவக்கல்வி பெறுகின்ற குழந்தைகள் நல மையங்கள் (Child Welfare Centres including ICDS & MUDP Centres) ஆக விளங்குகின்றன. 5-9 வயதினைச் சேர்ந்த (அதாவது 1-ஆம் வகுப்பிலிருந்து 5-ஆம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகள்) 10-15 வயது வரையுள்ள குழந்தைகள் (அதாவது 6-ஆம் வகுப்பிலிருந்து 8-ஆம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகள்). 9-ஆம் வகுப்பிலிருந்து 10-ஆம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகள் ஆகியவர்களுக்கு சத்துணவு அளிக்கின்ற மையங்களின் எண்ணிக்கை 39,729 ஆகும்.

சத்துணவு மையங்களில் 2,01,923 பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். இதுவரை தற்காலிகமாக இருந்து வந்த சத்துணவு ஊழியர்களை நிரந்தர பகுதி நேர ஊழியர்களாக ஆக்கிப் பணிப்பாதுகாப்பு தரப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் மூலம், 85 இலட்சம் குழந்தைகள் மற்றும் மாணவர்கள் பயன் பெறுகிறார்கள்.
- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், இதுவரை 8,311 மகளிர் சுயவேலைவாய்ப்புக்கு உதவி புரிந்து உள்ளது.
- தமிழ்நாட்டிலுள்ள மகளிர் வழிகாட்டி மையங்களின் செலவுக்காக, 1990-91-ஆம் ஆண்டுக்கு ரூ.14.01 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களைத் தனியாகக் கவனித்துச் சீரமைக்கும் பொருட்டு, பள்ளிக் கல்வித் துறையிடமிருந்து ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் மாற்றி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதற்கேற்ப, இம்மையங்களை ஊரக வளர்ச்சித் துறை கண்காணித்து வருகிறது.

சத்துணவுத் திட்டத்தில் பயன் பெறும் மாணவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு 3-6-89 முதல் 2 வாரங்களுக்கு ஒரு முறை முட்டை வழங்கப்படுகிறது. முட்டை வழங்கும் திட்டத்தினால் 82.50 இலட்சம் நபர்கள் பயனடைகிறார்கள்.

சத்துணவு மற்றும் முட்டை வாங்குதல் ஆகியவற்றிற்கு 1990-91-க்கு நிதி ஒதுக்கீடு ரூ.173 கோடியிலிருந்து ரூ.195 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

சத்துணவுத் திட்டத்தினால் பயன்பெறும் 3 வயது முதல் 6 வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்கு வருடத்திற்கு 2 முறை ''வைட்டமின் ஏ'' காப்சூல் அளிக்க அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தினால் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 30 இலட்சம் ஆகும்.

முட்டைகளை உண்ணாத சைவக் குழந்தைகள் ஏறத்தாழ 4.50 இலட்சம் பேருக்கு சத்து உருண்டை வழங்குவதற்கான உத்திரவை முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்துள்ளார். இதனால் அரசுக்குக் கூடுதலாக சுமார் ரூ.50 இலட்சம் செலவாகும்.

### தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 1989-90-இல் 2,569 கிராமப்புற மகளிருக்கு ஆடு வளர்த்தல், கறவை மாடு வளர்த்தல், கூட்டுறவு நெசவுத் தொழிலில் ஈடுபடுதல், கிராமப்புறத் தொழில்களிலே ஈடுபடுதல், கிராமப்புறச் சிறு கைத் தொழில் ஆகியவற்றின் மூலமாக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை கழகம் 8,311 மகளிர் சுயவேலை வாய்ப்புத் தொடங்குவதற்கான உதவியைப் புரிந்துள்ளது. சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள், பன்னாட்டு வளர்ச்சிக்கான நார்வே நாட்டு நிதியுதவி, மத்திய அரசின் வேலை வாய்ப்பினை வளர்க்கும் (ஸ்டெப்) திட்டம் மற்றும் சிறப்பு நிதியுதவித் திட்டம் இவற்றின் மூலம் உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இக்கழகம் விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதியுதவியுடன் 45.92 கோடி ரூபாய் செலவில் தர்மபுரி, சேலம் மற்றும் தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் 1989-90-ம் ஆண்டில் தொடங்கி 7 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் ஒரு பெரிய அளவிலான மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் வழங்கப்படும் மானிய மற்றும் கடன் அடிப்படையில் நிதியுதவி வழங்கப்படும். இதில் சுமார் 40,320 மகளிர் பயன் அடைவர். இத்திட்டத்தின் கீழ் விவசாயம் தொழில் சார்ந்த நிலமேம்பாட்டுத் திட்டம், பழத் தோட்டங்கள் வளர்த்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், ஆடு, கறவை மாடு வளர்த்தல் மற்றும் சிறு தொழில்கள் மேற்கொள்ளுதல் ஆகிய தொழில்களை மகளிர் மேற்கொள்வர். 1989-90-ஆம் ஆண்டு சுமார் 60 இலட்சம் செலவில் 536 மகளிர் பயன்பெற்றுள்ளனர்.

1990-91 நடப்பாண்டில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலை மேற்கொள்ளுதல், கன்று வளர்ப்புத் திட்டம், கைத்தறித் துணி உற்பத்தி, தீப்பெட்டி உற்பத்தி, செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் போன்ற தொழில்களுக்கான பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் சுமார் ரூ.3.25 கோடி செலவில் 3,800 பெண்கள் பயன்பெறுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

### பெண்களுக்குச் சுயவேலை வாய்ப்பு

பெண்களுக்குச்சுயவேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், வருகிற ஐந்தாண்டுகளில் சுமார் 50,000 கிராமப்புற மகளிர் பயன்பெறுகின்ற வகையில் ரூ.124 கோடி செலவில் விவசாய வளர்ச்சி பன்னாட்டு நிதியுதவியை அணுகி இந்த நிதியைப் பெற்று, இத்திட்டத்தை, நாம் ஏற்கனவே பெற்றிருக்கின்ற அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு மற்றைய மாவட்டங்களிலும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது இக்கழகம், விவசாய வளர்ச்சி பன்னாட்டு நிதியுதவியுடன் தர்மபுரி, சேலம் மற்றும் தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தி வருகின்ற இத்திட்டத்தை மதுரை மாவட்டம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் ஆகிய இரு மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துவதற்கு விவசாய வளர்ச்சி பன்னாட்டு நிதி நிறுவனத்திடம் நிதியுதவி வழங்குமாறு கேட்டுக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம்.

கல்வி கற்ற பெண் குழந்தைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஏழைப் பெண்கள் திருமண உதவியாக ரூ.5000/- அளிக்கப்படும் ஏற்றமிகு திட்டத்தின் கீழ் 1989-90-இல், 14,800 பெண்கள் பயன்பெற்றுள்ளனர். இதற்காக ரூ.740 இலட்சம் செலவிடப்பட்டது. 1990-91-இல் ஆகஸ்ட் வரை 11,747 பெண்கள் பயன் பெற்றனர். ரூ.587.35 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1990-91-இல் இத்திட்டத்திற்காக ரூ.8 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யுமாறு சமூகநலத்துறை இயக்குநர் கேட்டுள்ளார்.

### டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், உழைக்கும் கருவுற்ற மகளிர்க்கு மகப்பேறுக்கு முன்னும் பின்னும் உடல் நலக் குறைவினை ஈடுசெய்வதற்காகப்

## சென்னை மாநகராட்சிப் பள்ளியில் கம்ப்யூட்டர் மையம்

**புரசைவாக்கம் கங்காதரேஸ்வரர் கோயில் தெரு, சென்னை மாநகராட்சி ஆண்கள் மேனிலைப் பள்ளியில் கணிப்பொறி மையத்தை (கம்ப்யூட்டர் மையம்) 12.10.90 அன்று, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் திறந்து வைத்தார். ரூ.34 இலட்சம் செலவில், பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகமும், வட்டார அரிமா சங்கமும் நன்கொடையாக இந்தக் கம்ப்யூட்டர் கருவிகளை வழங்கியுள்ளன.**

**இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய மாநகராட்சித் தனி அலுவலர் திரு. வீ. மணிவண்ணன் அவர்கள் ''படிப்படியாக நிதி வசதிகளைப் பொறுத்து மாநகராட்சிப் பள்ளிகளுக்குத் தேவையான வசதிகளை மாநகராட்சி செய்து கொடுக்கும் என்றும், தனியார் கட்டடங்களில் இயங்கும் 9 மாநகராட்சிப் பள்ளிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும்'' என்றும் கூறினார்.**

**மாநகராட்சி ஆணையாளர் திரு. மு. அபுல்ஹஸன் அவர்கள் பேசுகையில், மாநகராட்சி 360 தொடக்க நடுநிலைப் பள்ளிகளையும், 23 உயர்நிலைப் பள்ளிகளையும், 13 மேனிலைப் பள்ளிகளையும் நடத்தி வருகிறதென்றும், ஓலைக் கூரைகளை அகற்றி அவற்றிற்குப் பதிலாக தீப்பிடிக்காத ஆஸ்பஸ்டாஸ் கூரைகளை 11 பள்ளிகளில் மாநகராட்சி அமைத்துக் கொடுத்துள்ளது என்றும், வரவு செலவுத் திட்டத்தில் ரூ.40 இலட்சம் பள்ளிக் கட்டடப் பராமரிப்புப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.**

**விழாவில் டாக்டர் அம்பேத்கர் படத்தை குடிசை மாற்றுவாரிய உறுப்பினர் திரு. சா.முத்து திறந்து வைத்துப் பேசினார். ஆட்சி மொழி ஆணைய உறுப்பினர் திரு. அ.ரா.சனகன் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். சைதை சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எஸ்.ஸ்ரீதர் மற்றும் திரு. சோ.மா.ராமச்சந்திரன் வாழ்த்துரை வழங்கினர். பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. சி.ர.மணி அறிக்கை படித்தார். முதன்மைக் கல்வி அலுவலர் திரு. மு. இராசாராம் பரிசுகள் அளித்தார். மாநகராட்சி கல்வி அலுவலர் பொறுப்பு வகிக்கும் திரு. ஜே.டி.கோயில் பிள்ளை நன்றி கூறினார்.**

பிரசவத்திற்கு முன் இரண்டு மாதமும் பின் 2 மாதமும் மாதமொன்றுக்கு ரூ.50/- வீதம், ரூ.200/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இதனால் 1989-90-இல் 1,83,918 பெண்கள் பயனடைந்தனர். அதற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ.367.84 இலட்சம். 1990-91-இல் ஆகஸ்டு வரை, 1,03,707 பெண்கள் பயன் பெற்றுள்ளனர். ரூ.2074.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் மொத்த ஒதுக்கீடு ரூ.4 கோடி ஆகும்.

**ஏழை விதவைகளின் மகள் திருமண உதவித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், ஏழை விதவைகளின் மகள் திருமணம் நடத்த ரூ.2000 நிதியுதவி வழங்கப்படுகிறது. 1989-90-இல் 1044 பெண்கள் பயனடைந்தனர். ரூ.10.44 இலட்சம் செலவிடப்பட்டது. 1990-91-இல் ஆகஸ்ட் வரை 507 பெண்கள் பயன் பெற்றுள்ளனர். ரூ.10.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான ஒதுக்கீடு ரூ.20.30 இலட்சம் ஆகும்.

**ஏழை விதவைகள் பள்ளிசெல்லும் குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம்**

ஏழை விதவைகளுக்கு உதவுவதற்காக 1 முதல் 5 வகுப்பு பயிலும் குழந்தைகளுக்குக் குறிப்பேடுகள் ரூ.15/- வீதமும், 6 முதல் 8-ஆம் வகுப்பில் பயிலும் குழந்தைகளுக்கு குறிப்பேடுகள் ரூ.30/- வீதமும், 9 முதல் 10-ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வாங்க ரூ.90/- வீதமும், ப்ளஸ் 1 மற்றும் 2 மாணவ மாணவியருக்கு பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் ரூ.190/- வீதமும் உதவி வழங்கப்பட்டது. 1989-90-இல் இத்திட்டத்தினால் 3907 பெண்கள் பயன் பெற்றுள்ளனர். அதற்காக ஆன செலவு ரூ.0.83 இலட்சம் ஆகும். 1990-91-இல் 4000 பெண்கள் பயன் அடைந்துள்ளனர். 1990-91-ஆம் ஆண்டிற்காக ரூ.1.91 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதரவற்ற மகளிர் திருமண உதவித்திட்டம்**

ஆதரவற்ற ஏழை மகளிர் திருமணத்திற்கு ரூ.1000 நிதி உதவி

**பாவேந்தர் நூற்றாண்டு**



**அச்சம் தவிர்ந்தது வாழ்வு - நல்**
**அன்பில் விளைவது வாழ்வு**
**மச்சினில் வாழ்பவ ரேனும் - அவர்**
**மானத்தில் வாழ்வது வாழ்வு!**

**— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்**

அளிக்கப்படுகிறது. 1989-90-இல் 158 பெண்கள் பயன்பெற்றனர். ரூ.1.58 இலட்சம் செலவிடப்பட்டது.

**டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் விதவைகளது மறுவாழ்விற்காக விதவை மறுமணம் புரிந்து கொண்ட தம்பதியர் இருவர் பெயரிலும், ரூ.5000/. பெறுமானமுள்ள 6 ஆண்டிற்கான தேசிய சேமிப்புப் பத்திரம் பரிசளிக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் 1989-90-ஆம் ஆண்டில் 178 நபர்கள் பயன் அடைந்தனர். அதற்காக ரூ.8.90 இலட்சம் செலவிடப்பட்டது. 1990-91-ஆம் ஆண்டில் ஆகஸ்ட் வரை 134 நபர்கள் பயன் அடைந்துள்ளனர். அதற்காக ரூ.6.70 இலட்சம் செலவிடப்பட்டது. இந்த ஆண்டின் ஒதுக்கீடு ரூ.10 இலட்சம் ஆகும்.

**சேவை இல்லங்கள்**

தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்கள், அரசு மானியம் பெற்று, ஆதரவற்ற பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்குக் குறுகிய காலக் கல்வி அளித்து அவர்களை வேலை வாய்ப்பிற்குத் தகுதியுடையவர்களாக ஆக்குகின்றன.

தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம், காரைக்குடி ஆகிய இடங்களில் செயல்படும் சேவை இல்லங்களில் கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைகள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு மேல்நிலை வகுப்பு வரை கல்வியறிவு அளிக்கப்படுகிறது. தொழிற்கல்வியாக, தையல்/தட்டச்சுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மொத்தம் 1,125 பெண்கள் பயன் அடைகிறார்கள். இதற்காக 1990-91-ஆம் ஆண்டில் ரூ.39.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1990 ஆகஸ்டு வரை ரூ.18 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

சமூகநலத் துறையினரால் நடத்தப்படும் சேவை இல்லங்களில் +2 தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, அவர்களுக்கு இலவச உணவு, உறைவிட வசதி தந்து, இரண்டாண்டுப் பயிற்சி நடத்தி, அரசுத் தேர்விற்கு அனுப்பும் பணியை பல்லாவரம் இடைநிலை ஆசிரியை பயிற்சிப் பள்ளி ஆற்றி வருகிறது. 1990-91-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.3.10 இலட்சம் ஆகும். இதனால் 100 பெண்கள் பயனடைகிறார்கள்.

**தங்கும் விடுதிகள்:**

குடும்பத்தை விட்டுப் பிற இடங்களில் பணிக்குச் செல்லும் பெண்கள் தங்கியிருக்க வசதி செய்து தரும் வகையில் சென்னை, கடலூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, ஒசூர், தூத்துக்குடி ஆகிய இடங்களில் பணிபுரியும் பெண்கள் விடுதிகள் செயல்படுகின்றன. இவற்றால் 340 பெண்கள் பயனடைகிறார்கள். இதற்காக 1990-91-ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு ரூ.6.13 இலட்சம் ஆகும்.

ஊரக மகளிருக்கு குடும்ப நலம், சிறு சேமிப்பு, குழந்தை வளர்ப்பு, சத்துணவு தயாரித்தல் போன்றவைகளில் அறிவுரை மற்றும் செயல்முறை விளக்கம் அளிக்கும் பணியை சென்னை தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலும் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் மகளிர் மன்றங்கள் கவனிக்கின்றன. மாநிலம் முழுவதிலும் மொத்தம் 11,520 மகளிர் மன்றங்கள் உள்ளன. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கு 30 மையங்கள்

## தமிழகத்தில்

## நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ்

## மிகை நில விநியோகம்

**தமிழ்நாட்டில் நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் 1-7-90 வரை விநியோகம் செய்யப்பட்ட நிலத்தின் பரப்பளவு 1,37,928 ஏக்கர் ஆகும். பயனடைந்த ஆதி திராவிடர் எண்ணிக்கை 51,939 நபர்கள்; அட்டவணையிடப்பட்ட பழங்குடியினர் 97 நபர்கள்; மற்றவர்கள் 61,369 நபர்கள்.**

**ஆக மொத்தம் 1,13,405 நபர்கள் நில விநியோகத்தால் பயன் அடைந்துள்ளனர்.**

உள்ளன. மன்ற அமைப்பாளருக்குக் காலாண்டுக்கு ரூ.90 கவுரவத் தொகையாகக் கொடுக்கப்படுகிறது. சிறப்பாகச் செயல்படும் மகளிர் மன்றங்களுக்கு ஆண்டுதோறும் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இதற்காக இந்த ஆண்டு 1990-91-க்கு ஒதுக்கீடு ரூ.0.51 இலட்சம்.

### மகளிருக்கு வழிகாட்டி மையங்கள்

சமுதாயத்தில் நலிவுற்ற மகளிருக்கு விதவை, ஆதரவற்றோர், மணமுறிவு பெற்றோர், பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு - தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் சிறு தொழில் செய்யக் கடனுதவி, சுய வேலை வாய்ப்பு, கல்வி, தொழிற் கல்வி மற்றும் சட்ட உதவி ஆகியவற்றுக்கான ஆலோசனை வழங்குதல்- ஆதரவற்ற குழந்தைகளைப் பள்ளிகள் மற்றும் இல்லங்களில் சேர்த்தல் - முதியோர் மற்றும் விதவைகளுக்கு ஆட்சியர் அலுவலகம் மூலம் ஓய்வூதியம் பெறச் செய்தல் போன்ற உதவி பெற மகளிருக்கு வழிகாட்ட வழிகாட்டி மையங்கள் சென்னை உட்பட எல்லா மாவட்டங்களிலும் செயல்படுகின்றன. இவற்றின் செலவுக்காக 1990-91-ஆம் ஆண்டுக்கு ரூ.14.01 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### இலவசத் தையல் இயந்திரங்கள்

ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், சமூக மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள், உடல் ஊனமுற்ற ஆண்கள் மற்றும் பெண்கள், சுயவேலை வாய்ப்பின் மூலம் பொருளாதார உதவி பெற்று மறுவாழ்வு பெறச் செய்வதற்காக இலவசத் தையல் இயந்திரங்கள் அரசால் வழங்கப்படுகின்றன அதற்காக 1989-90-இல் ரூ.24.01 இலட்சம் செலவிடப்பட்டது. 1899 நபர்கள் பயன் பெற்றனர். 1990-91-இல் 896 நபர்கள் பயன் பெறுகின்றனர். அதற்கான ஒதுக்கீடு ரூ.10 இலட்சம் ஆகும்.

அலுவலகங்களுக்குச் செல்லும் பெண்கள் தங்குவதற்காக மத்திய அரசு மானிய உதவியுடன் தனியார் நிறுவனங்களால் கட்டப்பட்டு நடத்தப்பட்டு வரும் குழந்தைகள் பாதுகாப்பு இல்லங்களுடன் கூடிய பணி புரியும் பெண்கள் விடுதிகளுக்கு, மத்திய அரசு உதவியுடன் மாநில அரசு மானியமும் வழங்கப்படுகிறது.

### மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மகளிருக்கு (குறிப்பாக தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு) வேலை வாய்ப்பு அளிப்பதற்காக மாநிலம் முழுவதிலும் பல்வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் தமிழ்நாடு சத்துணவுத் திட்டம் மூலம் பயனடையும் பள்ளிக் குழந்தைகளுக்கான சீருடைகள் தைத்துக் கொடுக்க 75 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

1989-90-இல் இந்த சங்கங்களும் சில சேவை நிறுவனங்களும் தைத்துக் கொடுத்த சீருடைகளின் எண்ணிக்கை- ரூ.64 இலட்சம் ஜோடிகள்.

வேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை 20,000

மாத வருமானம் ஏறக்குறைய ரூபாய் 400, 500 வரை கிடைக்கிறது.

1989-90-இல் வழங்கப்பட்ட கூலி ரூ.3.75 கோடி.

மாநிலத்தில் மகளிர் எழுது பொருள் உற்பத்தித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 32 செயல்படுகின்றன. அவற்றால் 700 பெண்கள் பயனடைகிறார்கள். தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டங்களுக்கு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவைப்படும் பதிவேடுகளைத் தயாரித்து அளிப்பதன் மூலம், பாடநூல் நிறுவனத்திற்குத் தேவைப்படும் நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பதன் மூலம் வேலை வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

மகளிர் சத்துணவுத் தயாரிப்புத் தொழில் கூட்டுறவு சங்கங்கள் 20 செயல்படுகின்றன. இச்சங்கங்கள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றுக்குத் தேவையான ஊட்டச் சத்து, மாவு தயாரித்தல் மூலம் மகளிருக்கு வேலை வாய்ப்பை அளிக்கின்றன.

மாதமொன்றுக்கு 200 மெ.டன் முதல் 400 மெ.டன் ஒவ்வொரு சங்கமும் சத்து மாவை உற்பத்தி செய்கின்றது. ஆண்டுக்கு தற்போது நமக்குத் தேவைப்படும் சத்து மாவு (மெ.டன்னில்) - 12,000 டன்கள். கர்நாடக மாநிலத்திலிருந்து (Agro Corn Products Ltd, Bangalore) ஆண்டுக்கு சுமார் 5,000 டன் வாங்கி வருகிறோம். முழு உற்பத்தித் திறனை அடைந்தால் நம்முடைய முழுத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலும்.

காஞ்சிபுரத்தில் திரவ சோப்பு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவு சங்கம் மகளிரால் செயல்படுத்தப் படுகிறது. அரசு மற்றும் அரசுத் துறையைச் சார்ந்த நிறுவனங்களுக்குத் தேவையான திரவ சோப்புகளைத் தயாரிப்பதன் மூலம் மகளிர் வேலை வாய்ப்பு பெறுகின்றனர்.



## அம்பேத்கர் நூற்றாண்டு

★ ஒவ்வொரு மனிதனும் பண்பாடுள்ள பிரஜையாக வேண்டும் என்று நாம் விரும்பினால் அனைத்து மனிதரும் பகுத்தறிவாளராவது எப்படி என்று சிந்திப்பதுதான் சமுதாயத்தின் தலையாய சிந்தனையாய் இருக்கவேண்டுமேயொழிய வெறும் சோறு பற்றிச் சிந்திப்பதில் அல்ல.

மகளிர் சாக்குக்கட்டி உற்பத்தித் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் 21 இயங்குகின்றன. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஆரம்பப்பள்ளிகள், சிறப்புப்பள்ளிகள், அனைத்துக் கல்லூரிகள் ஆகியவற்றிற்கு சமூகநலத் துறையின் கீழ் இயங்கும் சாக்குக் கட்டி உற்பத்தி நிலையங்கள் மூலம் தான் தேவைப்படும் சாக்குக் கட்டிகள் வாங்க வேண்டும் என அரசு உத்திரவிட்டுள்ளதால் மேற்படி கல்வி நிறுவனங்கள் மூலம் வரப்பெறும் ஆர்டர்களுக்கு சாக்குக்கட்டிகள் வழங்குவதன் மூலம் மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதனால் 1200 மகளிர் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.

தஞ்சாவூர் மாவட்டம், நல்லூரில் கயிறு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், செயல்படுகிறது. இதனால் 75 மகளிர் பயன் பெறுகின்றனர்.

மகளிர் காலணி தயாரிப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 39 செயல்படுகின்றன.

சத்துணவு வழங்கப்படும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இலவசமாகக் காலணி தயாரித்து அளிக்கும் திட்டத்தின்கீழ் இச்சங்கங்கள் வேலை வாய்ப்பைப் பெறுகின்றன.

1989-90-இல் மாணவர்களுக்கு காலணி வழங்கும் திட்டத்தில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டவை - 6 இலட்சம் ஜோடி. வழங்கப்பட்ட கூலி சுமார் ரூ.12 இலட்சம்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மகளிருக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து முறையே 10 மற்றும் 12 மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக மாநிலத்தில் 36 பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள் செயல்படுகின்றன. தையல், பாய்முடைதல், கம்பளி நெய்தல், ஆயத்த ஆடைகள் செய்தல் போன்ற பல்வேறு வேலை வாய்ப்புகளில் மகளிருக்கு ஓராண்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தின்போது மாதம் ஒன்றுக்கு உதவித் தொகை ரூ.50/- வழங்கப்படுகிறது. ஆண்டு தோறும் 900 மகளிர் பயிற்சி பெறுகிறார்கள்.

**ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லம்**

அனாதைக் குழந்தைகளுக்கு ஆதரவளித்து மேல்நிலை வகுப்பு வரை இலவசக் கல்வி புகட்டுவதற்காக 22 ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் செயல்படுகின்றன. 5,200 குழந்தைகள் பயனடைகிறார்கள். 1990-91-இல் ஒதுக்கீடு ரூ.113.95 இலட்சம் ஆகும்.

**ஆதரவற்ற குழந்தைகளுக்குக் குடில் திட்டம்**

ஆதரவற்ற குழந்தைகளுக்கு அரவணைப்பும் பாதுகாப்பும் வழங்கி அவர்கள் பிற்காலத்தில் சுயமாகக் காலூன்றி நிற்க கல்வி வழங்கி அவர்களுக்கு வாழ்வளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். உணவு, உறைவிடம் மற்றும் கல்வி மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. ஒரு குழந்தைக்கு ரூ.150/- வீதம் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. அதில் 45% மத்திய அரசும், 45% மாநில அரசும், 10% தொண்டு நிறுவனங்களும் செலவினத்தை ஏற்கின்றன. 12 முதல் 18 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு தொழிற் கல்விப் பயிற்சியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. 6 முதல் 18 வயது வரையுள்ள தாய் தந்தையற்ற குழந்தைகள் அல்லது தாயோ தந்தையோ இருந்து பெற்றோரால் கைவிடப்பட்டோ, நீண்ட கால நோயினால் பீடிக்கப்பட்டோ, சிறையிலடைக்கப்பட்டோ உள்ள பெற்றோரின் அரவணைப்பு கிடைக்காத குழந்தைகள் மற்றும் உறைவிடம்-நிலையான வருவாய் எதுவுமே இல்லாத பெற்றோரின் குழந்தைகள் இந்த உதவியைப் பெறத் தகுதி உடையவர்கள் ஆவர். இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் திட்டமாகும். தமிழ் நாடெங்கிலும் மொத்தம் 161 இல்லங்கள் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம்**

2 முதல் 4 வயது முடிய உள்ள குழந்தைகளுக்கு மன வளர்ச்சி, உடல் வளர்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்க ஊட்டச்சத்து, கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு வழங்க வகை செய்யும் வகையில் தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

சூடான சத்துணவு, அரிசி - 80 கிராம், பருப்பு - 10 கிராம், எண்ணெய் - 3 கிராம், காய்கறி மற்றும் தாளிதம் - 50 கிராம் ஆகிய அளவுப் பொருட்களைக் கொண்டு ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப் படுகிறது.

சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை தலா ஒரு கோழிமுட்டை 1989-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் தேதி முதல் வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து மையங்களும் நர்சரிப் பள்ளிகளாக மாற்றப்பட்டு முன் பருவக் கல்வி வழங்கப்படுகிறது. ரூ.1500/- மதிப்புள்ள கல்வி உபகரணங்கள், விளையாட்டு சாமான்கள் மற்றும் மேஜைகள் அளிக்கப்படுகின்றன.

பொது சுகாதாரத் துறையினால் மருத்துவப் பரிசோதனை மற்றும் தடுப்பூசி மூலம் குழந்தைகள் உடல் நலம் பேணப்படுகிறது.

இதனால் 36,641 பெண்கள், குழந்தை நல அமைப்பாளர்களாகவும், 52,919 பெண்கள், குழந்தை நல உதவியாளர்களாகவும் வேலை வாய்ப்புப் பெற்றார்கள்.

கிராமப்புறங்களில் குழந்தை நல மையங்கள் 23,483, நகர்ப்புறங்களில் குழந்தை நல மையங்கள் 4,840 செயல்பட்டு வருகின்றன. 18.5 இலட்சம் குழந்தைகள் பயன் பெறுகின்றனர். 1990-91-ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.36.51 கோடி ஆகும்.

( 33,-ஆம் பக்கம் பார்க்க )



# குற்றாலத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்

**எஸ்.இராசரெத்தினம்,** இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்

**மே**ற்குத் தொடர்ச்சி மலையில் இயற்கைச் சூழலில் பொங்கி வழிந்தோடும் பல்வேறு அருவிகளால் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணியரை ஆண்டுதோறும் ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரை ஈர்த்து, புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாக விளங்குவதுதான் குற்றாலம் ஆகும்.

இங்குள்ள முக்கிய அருவிகள் பெரிய அருவி, சிற்றருவி, ஐந்தருவி, புலி அருவி, செண்பக அருவி, தேனருவி, பழத்தோட்டம், சாமியார் அருவி ஆகியவை ஆகும். இவை நம் நாட்டவரை மட்டுமல்ல, மேலை நாட்டினரையும் வெகுவாகக் கவர்ந்து வருகின்றன.

எழில் கொழிக்கும் குற்றாலத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இன்றியமையாத வசதிகளைச் செய்து தருவது மிகவும் அவசியமாகும்.

ஏற்கெனவே குற்றால நகரியக் குழுவால் தங்கும் குடில்கள், அறைகள், பொதுக் கழிப்பிடங்கள், கட்டணக் கழிப்பிடங்கள், பேருந்து, சிற்றுந்து நிறுத்துமிடங்கள், அருவிக் கரைகளில் உடைமாற்றும் அறைகள், இரவு நேரங்களில் மின் ஒளி ஏற்பாடுகள், பொருட்களை ஒப்படைத்துப் பெறுவதற்கான பாதுகாப்பு அறைகள், பொழுதுபோக்குப் பூங்கா, பாம்புப் பண்ணை, சாலை வசதிகள் போன்றவை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

> **‘‘சீசனில் மட்டுமல்ல; ஆண்டு முழுவதுமே சுற்றுலாப் பயணிகள் கண்டுமகிழும் விதத்தில் குற்றாலம், குண்டாறு அணைப் பகுதி, முண்டந்துறை வனவிலங்குச் சரணாலயம், மாஞ்சோலை எஸ்டேட் போன்ற பகுதிகள் மேம்படுத்தப் படும்’’ என்கிறார், மாவட்ட ஆட்சித் தலைவர்.**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினரால் கடந்த ஆண்டு முதல் சிற்றுண்டி மற்றும் உணவு வழங்கும் நிலையமும், அதையொட்டி உல்லாசப் பொழுதுபோக்குக்கென ஒரு படகுத்துறையும் இயற்கைச்சூழலில் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

இவை மேலும் சிறப்பாகவும், சீராகவும் அமைந்திடத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவற்றில், முக்கியமாக - ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட முன்னேற்றப் பணிகளாவன:

நகரியப்பயணியர் விடுதி, செங்கோட்டைச்சாலை விடுதி, தென்காசிச் சாலை விடுதி, பெரிய அருவிச்சாலைக் குடில்கள், சத்திரம் புதுப்பித்தலும் சீரமைப்பும் ஆகிய தங்குமிட வசதிகளுக்கு ரூ.32.14 இலட்சமும், சிற்றருவி மற்றும் பழைய குற்றால அருவிப் பகுதியில் புதிய கழிப்பறைகள் கட்டவும், பெரிய அருவி, ஐந்தருவி, புலி அருவிப் பகுதி, அண்ணா சிலைப் பகுதி, குற்றாலம் பேருந்து நிலையப் பகுதிகளில் உள்ள கழிப்பறைகளைச் சீரமைக்கவும் ரூ.7.45 இலட்சமும், பெரிய அருவி, ஐந்

தருவி, புலி அருவி, சிற்றருவி, பழைய குற்றால அருவிப் பகுதிகளில் உடை மாற்றும் அறைகள் புதிதாகக் கட்ட, பெரிய அருவி, ஐந்தருவிப் பகுதிகளில் உள்ள உடைமாற்றும் அறை மற்றும் பொருள் பாதுகாப்பு அறைகள் சீரமைக்க ரூ.9.41 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

இவை தவிர, குற்றால சீசன் மற்றும் இதரக் காலங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கும் மற்றும் குற்றாலப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கும் பயன் தரத்தக்க வகையில் ராம வர்மபுரம் சாலை சீரமைத்து ஒரு வழிப் பாதையாகப் பயன்படுத்தல், குறிஞ்சி இல்லத்திற்கு அருகில் ஒரு திறந்த வெளிக் கிணறு அமைத்து ஏற்கெனவே உள்ள கலைவாணர் அரங்க மேல்நிலைத் தொட்டி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஆவன செய்தல் ஆகிய இரு பணிகளுக்கும் முறையே ரூ.1.52 இலட்சம் மற்றும் ரூ.3.38 இலட்சம் மாவட்ட மாநிலத் திட்டக்குழு மூலம் சிறப்புப் பணிகளாக அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் ராமவர்மபுரம் சாலை அமைப்புப்பணி இவ்வாண்டிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசு ஆணை பெறப்பட்டவுடன் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும். இதர மேம்பாட்டுப் பணிகளை அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவை தனி முயற்சிகள் மூலம் செயல்படுத்த வேண்டி, அவற்றின் விளம்பரம் மற்றும் பொதுமக்கள் வசதி நோக்கில் அவர்களை அழைத்துக் கலந்துரையாடி விருப்பத்திற்கேற்ப கீழ்க்கண்ட பணிகள் இவ்வாண்டில் ஒதுக்கப்பட்டு முடித்தும், முடிக்கும் தருவாயிலும் உள்ளன.

1. சன் பேப்பர் மில்ஸ் நிறுவனத்தாரால், பேருந்து நிலையத்திற்குத் தெற்கிலுள்ள மேட்டுப் பூங்காவினை வண்ணமயமாகச் சீரமைத்தல்.

2. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினரால், பெரிய அருவிச் சாலையில் குடில்களின் எதிரில் உள்ள சாலைப்பூங்காவினை விரிவுறச் செய்து சிறப்பு மேம்பாட்டுடன் அழகுறச் செய்தல்.

3. இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தாரால், ஐந்தருவி பேருந்து

◎ எந்த மனிதனும் எனக்குக் கீழானவன் அல்ல; அதுபோலவே எவனும் எனக்கு மேலானவனும் அல்ல. ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் இருக்க வேண்டும் என்பதே இதன் பொருள். இந்த நிலை ஏற்படச் சாதி ஒழிய வேண்டும்.

— தந்தை பெரியார்



நிலையப் பகுதிச் சாலையை விரிவாக்கித்தளமிட்டுச்சீரமைத்தல், கழிவறைகள் நவீனப்படுத்துதல்.

4. ஸ்பிக் நிறுவனத்தாரால், ஐந்தருவி ஆலயம் முன் பகுதியில் ஆற்றின் கரையில் நவீன வசதிகளுடன் கூடிய மகளிருக்கான உடை மாற்றும் அறைகள் கட்டுதல், பெண்கள் பகுதி— அருவியினின்றும் தனிப்பாதை அமைத்தல், ஐந்தருவி குளியல் பகுதிச் சீரமைப்பு.

5. மதராஸ் சிமெண்ட்ஸ் நிறுவனத்தாரால், முதன்மைப் பூங்காவினுள் உணவருந்தும் அறைகள்,



தண்ணீர் கழிவுத் தொட்டி வசதிகளுடன் அமைத்தல்.

6. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் உதவியால், சாலைச் சந்திப்புத் தீவுகள் கட்டி அழகுறப் பேணுதல்.

7. ஆர்.எம்.கே.வி.சன்ஸ் நிறுவனத்தாரால், பெரிய அருவிப் பகுதியில் முக்கோண மண்டப இலவச உடைமாற்றும் அறைகள் நவீனமயமாக்கி அமைத்தல்.

8. அண்ணாமலை பைனான்ஸ் நிறுவனத்தாரால், பெரிய அருவிப் பகுதியில் பொருள் பாதுகாப்பு அறைகள் அமைத்துக் கொடுத்தல்.

9. மதுரா கோட்ஸ் நிறுவனத்தாரால், மின் ஒளி பெரிய அருவி ஐந்தருவிப் பகுதிகளில் அமைத்துக் கொடுத்தல்.

10. திருக்குற்றால நாத சுவாமி தேவஸ்தானத்தால், மண்டபங்கள் அழகுறச் செய்து உடைமாற்றும் அறைகள் சீர்படுத்தி ஆற்றங்கரை மண்டபங்களை அசுத்தப்படுத்தாமல் தடுத்து, பாதுகாப்பு அமைப்புகள் செய்தல்.

11. நகரியத்தால் குடில்கள், மற்றும் தங்கும் அறைகளில் சீரமைப்புப் பணிகள் மேற்கொண்டு ஒதுக்கீடு வரன்முறைப்படுத்திப் பேணுதல், பொதுக் கழிப்பிடங்கள் சீரமைத்து வசதிகளுடன் பேணுதல், தளவாய் கட்டடம் முதல் அண்ணா சிலை வரை சாலை விரிவு படுத்தும் பணி, அருவிக் கரைகள் விரிவாக்கம், மலைவழிப்பாதை வேலிகட்டிப் பாதுகாத்தல் மற்றும் இதரப் பொது வசதிப் பணிகள்.

மேற்குறித்த பணிகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பெரு முயற்சியாலும் மனமுவந்த ஒத்துழைப்பாலும் சிறப்பாக நடப்பு ஆண்டிலேயே பாராட்டத்தக்க வகையில் முடிக்கப்பட்டும், முடியும் தருவாயிலும் உள்ளன.

தொடரும் பணிகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம், சாலைப் பராமரிப்பு விரிவாக்கத் திட்டம், மின்விளக்கு மற்றும் சாலைச் சந்திப்புத் தீவுகள் அழகுற அமைத்தல், இலஞ்சி-ஐந்தருவி சாலைச் சீரமைப்பு மற்றும் இதரக் கட்டுமானப் பணிகள், உல்லாசப் படகு நிலையம் ஆழப்படுத்தி கரை பலப்படுத்தி தீவினை அழகு படுத்தும் திட்டம் ஆகியவையாகும்.

குற்றாலத்திற்குச் சீசன் சமயத்தில் மட்டும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். குற்றாலத்தின் மலை மற்றும் இயற்கை எழிலினை ஆண்டு முழுவதும் கண்டு அனுபவிக்க ஏதுவாக, குற்றாலத்தினை மையமாகக் கொண்டு அருகிலுள்ள குண்டாறு அணைக்கட்டுப் பகுதி மற்றும் முண்டந்துறை வனவிலங்குச் சரணாலயம், மாஞ்சோலை எஸ்டேட் போன்ற எழிலார்ந்த இடங்களையும் இணைத்து, இப்பகுதியினைச் சிறந்த சுற்றுலா மையமாக உருவாக்கும் தொலைநோக்குத் திட்டம் ஒன்றும் அரசின் பரிசீல்னையில் உள்ளது.


ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல?
தமிழ்நாடு முழுவதும் கிராமப் புறங்களில், ஆதி திராவிடர்களுக்கு 42 ஆயிரம் தீப்பிடிக்காத வீடுகளும், நகரங்களில் 5 ஆயிரம் வீடுகளும் கட்டித் தருவதற்கு அரசு திட்டமிட்டு வருகிறது.
இனி குடிசையில கிடந்து அல்லல் படவேண்டாம். பாதுகாப்பான வீடு அரசே கட்டித் தந்துது!
நம் நலிவு நீங்க வாரி வழங்கும் கருணை மனம் வாழ்க! வாழ்க!!
ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்
நலிவுற்று வறுமையில் வாடும் தமிழ்நாட்டிலுள்ள ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்பட்டுவந்த மாத ஓய்வூதியம் ரூ.250/- லிருந்து ரூ.400/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
தோல் தொழிற்சாலைகளின் கழிவுப் பொருள்களை நீக்கி ஆவியாக்கும் நிலையங்கள் ரூ.50 லட்சம் செலவில் தமிழ்நாட்டில் 6 இடங்களில் அமைக்கப்படுகின்றன.
தோல் தொழிற்சாலை


முதலாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ - மாணவியர் அனைவருக்கும் வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் சென்றுவர அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவச பாஸ் வழங்கப்படுகிறது!
தொழில் வளர்ச்சியில் 3 ஆம் இடத்திலிருந்த தமிழகம் இடைக்காலத்தில் 13 ஆம் இடத்துக்குப் போய்விட்டது. அதனை முதலிடத்துக்குக் கொண்டு வருவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது!
முதலிடம் பெற்றே ஆகவேண்டும்!
தமிழகம் தொழில் வளர்ச்சி நிலை
88-89, 1989-90, 1990-91
அரசுக்கு நன்றி சொல்லணும்! நம் நிலை உணர்ந்து செய்யும் உதவியல்லவா இது!
ஓய்வூதியம் வழங்கும் பிரிவு
அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போலவே, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கும் மருத்துவப் படியாக மாதந்தோறும் ரூ. 15 அவர்களது ஓய்வூதியத் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது!

# நூல்நயம்

## நேரமே நமது செல்வம்

**ஆசிரியர்:** டாக்டர் இல. செ. கந்தசாமி
**வெளியீடு:** கலைச்செல்வம் பதிப்பகம்,
16, சாஸ்திரி தெரு,
பி.என். புதூர், கோயமுத்தூர்-641041

பக்கம்:120 விலை:ரூ.10

'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என்று கூறினார் திருவள்ளுவர். நேரமும் அதற்கிணையான சிறப்புக் கொண்டது என்பதை நூலாசிரியர் நன்கு நிறுவியுள்ளார்.

கடந்து போன நேரம் திரும்ப வராது என்பதையும், சில நிமிட தாமதத்தால் தேர்வில் தோல்வியைச் சந்திக்க நேருகிறது- ரயிலைக் கோட்டை விட நேருகிறது என்பதையும் தக்க வகையில் எடுத்துரைத்துள்ளார். வெட்டிப் பேச்சில் நேரத்தை வீணாக்கக் கூடாது என்று கூறியிருப்பது நியாயமானதே. பல்வேறு அறிவுரைகளை இந்நூலில் எடுத்துரைத்து நமது நேரத்தைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கு வழி வகுத்துள்ளது பாராட்டுக்குரியது.

— தமிழ்ப்பித்தன்

## பச்சை நிறப் பூக்கள்

**ஆசிரியர்:** பா. அமிழ்தன்
**வெளியீடு:**
மதி வெளியீடு
5/43, பூஞ்சோலைத் தெரு,
கள்ளிக்குளம் 627113.

விலை:ரூ.12 பக்கம்:124

மரபுக் கவிதையும், புதுக் கவிதையும் இணைந்த தொகுப்பு இது.

மறுமலர்ச்சி எழுத்தாளர் வ.ரா. அவர்களைப் பற்றிக் கூறும்போது,

அவர் ஆரவார
அலைகள் இல்லாத
அறிவுக் கடல்;
தென் பாரதத்தின்
ராஜாராம் மோகன்ராய்;
தாடியில்லாத
கர்வெ மகரிஷி.

என்று அழகாய்க் குறிப்பிடுகிறார். நூலில் தென்றலும் தவழ்கிறது; புயலும் வீசுகிறது. கற்பனையும், கருத்துரைகளும் கை கோக்கின்றன.

## வானில் கோடி சூரியன்

**ஆசிரியர்:** ஆனைவாரி ஆனந்தன்
**வெளியீடு:**
பூரம் பதிப்பகம்
59, ராஜு நாயக்கர் தெரு,
மேற்கு மாம்பலம் சென்னை-600 017.

விலை:ரூ.15 பக்கம்:63

இது அறிவியல் உலகம். இந்த அற்புத உலகத்தைக் குழந்தைகளுக்கும் நாம் காட்ட வேண்டும். அந்த வகையில் எழுந்ததே இந்த நூல். இந்நூலில் 29 குழந்தைப் பாடல்கள் உள்ளன. வானில் கோடி சூரியன், சூரிய மண்டலம், கோள்கள் தோற்றம், உயிர்கள் தோற்றம், உலகத் தோற்றம் என்று அறிவியலை அழகாய்க் கூறுகிறார் ஆசிரியர்.

இதேபோல, நமது இந்தியா, வேற்றுமையில் ஒற்றுமை ஆகிய பாடல்களும் இதயத்தைத் தொடுகின்றன. தமிழகம், தமிழ்மொழி - பாடல்களும் கருத்தாய் அமைந்துள்ளன. பொதுவாகக் குழந்தைகள் ஆடிப்பாடவும், படித்து மகிழவும் இந்தப் பாடல்கள் உதவும். பக்கத்துக்குப் பக்கம் முழுப் பக்க வண்ணப் படங்கள் இருப்பது இந்நூலின் தனிச் சிறப்பு.

-பி.வி.கிரி

## டாக்டர் அம்பேத்கர்

**ஆசிரியர்:** எம். நாராயணன்
**வெளியீடு:**
அன்பு பதிப்பகம்,
6, அம்மையப்பன் தெரு,
சென்னை-600014.

விலை:ரூ.10 பக்கம்:95

தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய டாக்டர் அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கிறது இந்நூல். அத்துடன் அவரின் பொன்மொழிகளும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

## புரட்சிக் குயில் பாரதிதாசன்

**ஆசிரியர்:** பூவை அமுதன்
**வெளியீடு:**
மயிலவன் பதிப்பகம்
17 கங்கை அம்மன் கோவில் தெரு
வடபழனி, சென்னை-600 026.

விலை:ரூ.12 பக்கம்:128

பாவேந்தரின் வாழ்க்கை வரலாறோடு, அவரது பாவளம், சுவையான சில நிகழ்ச்சிகள், முக்கியக் குறிப்புகள், அவர்தம் புனை பெயர்கள், அவருக்கான நினைவுச் சின்னங்கள் பற்றிய குறிப்புகளும் உண்டு.

ஆனால் நூலின் முகப்பில் யாரோ ஒருவரை ஓவியமாக வரைந்து புரட்சிக் குயில் பாரதிதாசன் என்று எழுதி இருப்பது தான் நன்றாக இல்லை.

-என். குமாரசாமி

## இந்திய நிலமானிய முறை

**ஆசிரியர்:** ராம் சரண் சர்மா
**வெளியீடு :**
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 41-பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்: 416 விலை ரூ.55/-

கி.பி. 400 முதல் கி.பி. 1200 வரை இடைப்பட்ட காலத்தில் வட இந்தியாவில், வழக்கிலிருந்த நிலமானிய முறை, ஆட்சியமைப்பு, நிலமானியமுறைப் பொருளாதாரம் ஆகியவைபற்றி விளக்குகிறது இந்த நூல். முக்கியமாக - யார் யாருக்கெல்லாம் எவ்வாறெல்லாம் நிலமானியங்கள் அந்நாளில் அளிக்கப்பட்டன; அதைப் பெற்றுக் கொண்ட அவர்கள் அவற்றை எந்த முறைகளிலெல்லாம் அனுபவித்தார்கள் என்பவைகளைப் பற்றியெல்லாம் இதில் மிகத் துல்லியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாட்னா பல்கலைக் கழகப் பேராசிரியரான ராம்சரண் சர்மா ஆற்றிய ஆறு உரைகளின் தொகுப்பான இதனை, திரு. மு.ரா. பெருமாள் முதலியார் அவர்கள் அழகு தமிழாக்கி நமக்கு அளித்திருக்கிறார்.

## கோலார் தங்கவயல் தங்கச் சுரங்கத் தொழில்முறைகளும் ஆரம்பகாலத் தொழிற் சங்க வரலாறும்

**ஆசிரியர்:** திரு. கே. எஸ். சீதாராமன்
**வெளியிட்டோர்:**
இலூஷன் எலக்ட்ரானிக்ஸ் பப்ளிகேஷன்ஸ்,
டாக்டர் ஒடானெல் சாலை,
ஆண்டர்சன்பேட்டை,
கோலார் தங்க வயல்,
கர்நாடக மாநிலம்-563 113.

பக்கம்: 80 விலை ரூ.6/-

இந்தியா 1947ல் சுதந்திரம் பெற்றாலும், 1956ல் தான் கோலார் தங்கவயல் தேசியமயமாக்கப்பட்டு, கடைசி வெள்ளையன் வெளியேறினான். அப்படிப்பட்ட கோலார் தங்க வயலில் காலூன்றி வளர்ந்த தொழிற் சங்க வரலாறை இந் நூல் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

சுரங்கத் தொழில் முறைகள், பழங்கால உலக வரலாற்றில் தங்கம், தங்கத்தின் சிறப்பு, தொழிற்சங்க இயக்கம், கோலார் தங்கவயல் வரைபடம்-எல்லாம் இதில் இருக்கின்றன. இதில் காணப்படும் விஷயங்களைச் சேகரிக்க ஆசிரியர் எவ்வளவு பாடுபட்டிருப்பார் என்பதை நம்மால் உணரமுடிகிறது!

—முடிகொண்டான்

**கைத்தறித் தொழில் என்றாலே நமக்கு நினைவு வருவது துணி நெசவுதான்; சணல் உற்பத்தியும், அதன் மூலமான பொருட்கள் தயாரிப்பும்கூட கைத்தறிதான்! அந்த வகையில், பெரியார் மாவட்டம் பெற்றுவரும் வளர்ச்சியை விவரிக்கும் கட்டுரை இது!**

அவர்கள்தான் காரணமாவார்கள். கைத்தறி மூலம் சென்னிமலையின் பெருமையை உலகறியச் செய்தவர் அவர்.

''வட இந்தியாவில் சணல் மூலம் பலவித பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு அதன் மூலம் சணல் விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். சணல் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தென்னிந்திய மக்களுக்கு அறிமுகம் செய்யப்பட வேண்டும். நூல் விலையைக் குறைக்க வேண்டும் என்று இங்கு பேசிய

# கைத்தறித் தொழிலில் சணல் உற்பத்தி

தமிழகக் கைத்தறித் துறையில் பெரியார் மாவட்டத்திலுள்ள சென்னிமலைக்கு முதன்மைப்பங்கு உண்டு. இங்கு மக்கள் தொகை 13,717. கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணிக்கை 10,000. இது சுமார் 73 சதவீதமாகும். தற்போது இங்கு 40 கூட்டுறவு நெசவுச் சங்கங்களில் 7,500 உறுப்பினர்கள் உள்ளனர். மொத்த அளவில் உள்ள கைத்தறி நெசவாளர்களில், கூட்டுறவுத் துறையில் உள்ள்வர்கள் கணிசமாக 75 சதவீதம் இங்கு உள்ளனர்.

உலகக் கைத்தறி அரங்கில் சென்னிமலை படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் மற்றும் இதர வகைகள் ஒரு உன்னதமான நிலையினை வகிக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. இதை நிரூபிக்கும் வகையில் முதன் முறையாக, கைத்தறியின் வரலாற்றிலேயே சென்னிமலை படுக்கை விரிப்புகள் இந்திய அரசின் ஐ.எஸ்.ஐ. விருது பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மாநில, மத்திய அரசுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்குச் சென்னிமலை நெசவாளர்கள் எப்போதும் முன்னோடியாக இருப்பார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்த வகையிலேயேதான், மத்திய அரசின் சணல் துணி உற்பத்தித் திட்டத்திலும், தறிகளை இவர்கள் இணைத்துக் கொண்டுள்ளார்கள். சணல் நூலைப் பயன்படுத்தும் திட்டத்திற்கு இங்கேயுள்ள கைத்தறி நெசவாளர்கள் தங்களின் முழு ஒத்துழைப்பை நல்கி வருகிறார்கள்.

பல அரிய பரிசோதனைக்குப் பின்னர், மாநில கைத்தறித் துறை மற்றும் மத்திய அரசின் சென்னை நெசவாளர் சேவை மையத்தினர் ஆகியோரின் உறுதுணையுடன் ஒரு சில ரகங்களை (Jute Products) உற்பத்தி செய்யும் நோக்குடன் சணல் ஜமக்காளம், தரை விரிப்புகள் மற்றும் குவியல் தரை விரிப்பு (Jute Pile Carpets) முதலானவற்றைத் தயாரித்துள்ளனர்.

பெரியார் மாவட்டம் சென்னிமலையில் சணல் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் கண்காட்சியை, மாண்புமிகு மத்திய துணி நூல் துறை அமைச்சர் திரு.சரத் யாதவ் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சர் திரு. எஸ்.தங்கவேலு அவர்கள் தலைமையில் திறந்து வைத்தார்.

அகில இந்திய அளவிலான ''கைத்தறித் தொழிலில் சணல்'' என்பது குறித்த கருத்தரங்கம் ஒன்றும் நடைபெற்றது. இக்கருத்தரங்கினைத் தொடக்கிவைத்து மாண்புமிகு மத்திய துணிநூல் துறை அமைச்சர் திரு.சரத் யாதவ் அவர்கள் பேசும்போது, ''அகில இந்திய அளவிலான தேசிய கருத்தரங்கம் சென்னிமலையில் நடைபெறுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். சென்னிமலையில் இப்படியொரு வியக்கத்தக்க அளவில் கருத்தரங்கம் நடப்பதற்கு, திரு.நாச்சிமுத்து தமிழகக் கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டுள்ளார்கள். பருத்தியிலிருந்து அனைத்து வகைத்துணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு மாறாக இங்கே சணலையும் அறிமுகப்படுத்தி, அதன் மூலம் பல்வேறு விதமான பொருட்கள் தயாரிக்க நாம் முயற்சி எடுத்துக் கொண்டால், சணலின் பயன் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். இதன் மூலம் நூலுக்கு உள்ள கிராக்கி குறைந்து, நூல் தாராளமாகவும், குறைந்த விலையிலும் கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படும். இதன் காரணமாக நெசவாளர்கள் நல்ல பயன்பெற முடியும்.

''இங்கு நடைபெறும் இக்கருத்தரங்கம் இன்று ஒருநாள் நடத்தினால் மட்டும் போதாது. இப்படிப்பட்ட கருத்தரங்கினை நிரந்தரமாக நடத்த ஏற்பாடு செய்யப்படும். சென்னிமலையில் சணல் மூலம் பொருட்களை உற்பத்தி செய்ய நிரந்தரப் பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்படும். துணி நூல் உற்பத்தித் தொழில் தொன்மையானது. இதற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தவுள்ளது'' என்றார்.

கருத்தரங்கத்திற்குத் தலைமை வகித்து மாண்புமிகு கைத்தறி, துணிநூல் மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்

**○ வாழ்க்கைத் தரம் மட்டமாக இருக்கும் சமூகத்தில் ஒய்வு கிடைத்துப் பயனில்லை; பொருளும் இல்லை. வேகாத பண்டத்தை வெள்ளித் தட்டில் வைத்துத் தருவது வீண் வேலையாகும்!**

**— அறிஞர் அண்ணா**



## படமும் செய்தியும்



**மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் வடசென்னையிலுள்ள நியாயவிலைக் கடைகளில் திடீர் சோதனையிட்டார். (20.10.90)**

---

திரு. எஸ். தங்கவேலு அவர்கள் உரையாற்றும்போது, ''ஈரோட்டில் நெசவாளர்கள் பெரும்பாலும் ஜமக்காள உற்பத்தியாளர்கள்தான் அதிகம் உள்ளனர். எனவே, சணல் மூலம் பொருட்களை உற்பத்தி செய்ய இம்மாவட்டத்தில் சணல் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதற்கு மத்திய, மாநில அரசுகள் முக்கியப் பங்காற்றும்.

''சணலைக் கொள்முதல் செய்து நெசவாளர்களுக்கு வழங்கப்படும்போது, தரமான சணல் வழங்கப்படும். இதன் மூலம் சுவர் அலங்காரம், தரை விரிப்புகள், திரைச் சீலைகள் முதலியன உற்பத்தி செய்ய முடியும். இந்தச் சணலை மானிய விலையில் வழங்க வேண்டும். நெசவாளர்களுக்குப் பயிற்சி முகாம்கள் நடத்த வேண்டும். வடமாநிலங்களுக்கு நெசவாளர்கள் நேரில் சென்று பார்த்து வர ஏற்பாடு செய்வதோடு சலவைச் சாலையையும் அதற்குரிய சாயத்தையும் மானிய விலையில் வழங்கவேண்டும். மானியம் வழங்கினால் பலர் இந்தத் தொழிலை செய்ய ஆர்வத்தோடு முன் வருவார்கள். அத்துடன் பொருட்களை விற்பனை செய்ய உத்தரவாதமும் வழங்க வேண்டும்.

''தமிழகத்தைப் பொறுத்தவரையில் நெசவாளர்களுக்குப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மத்திய அரசு வேளாண்மைக் கடனை ரத்து செய்தது போல, நெசவாளர்களுக்கும் அத்திட்டம் பொருந்தும் என்று அரசு அறிவித்துள்ளது. நெசவாளர்களின் கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். நூல் விலையைக் கட்டுப்படுத்த மாநில அரசுக்கு அதிகாரம் வழங்க வேண்டும். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நெசவாளர்களுக்குப் பல்வேறு சலுகைகள் செய்யப்பட்டுள்ளன. 2-க்கு 17 நூல் தட்டுப்பாடு இருந்து வருகிறது. முறுக்கு நூல் உற்பத்தி செய்ய ரூ.20 இலட்சம் செலவில் டபுளிங் நூல் மில் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. மீண்டும் 90 நாட்கள் கைத்தறி நூலுக்குத் தள்ளுபடி நாட்களாகக் கொடுத்தது தமிழக அரசு தான். நெசவாளர்களுக்கு 2 தறிக்கூடம் உள்ள கான்கிரீட் வீடுகள் 2 ஆயிரம் வீடுகள் கட்டப்படும். 15 ஆயிரம் கைத்தறியாளர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவர உள்ளோம். காப்பீட்டுத் தொகை ரூ.10 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. 58 வயதுடையவர்களும் காப்பீட்டுத் தொகை பெறலாம் என்ற சலுகை வழங்கப்பட்டுள்ளது'' என்று கூறினார்.

பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வி.கே.சுப்புராஜ், இ.ஆ.ப., கைத்தறித் துறை இயக்குநர் திரு.எம்.இராமன், இ.ஆ.ப., சணல் ஆராய்ச்சித்துறை இயக்குநர் திரு.சப்தரிஷி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.அ.கணேசமூர்த்தி, டாக்டர் டி.சாந்தகுமாரி, திரு.ஜி.ஜி.குருமூர்த்தி, பொன் விஜயராகவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். திரு.எஸ்.ஆர். ரங்கநாதன் நன்றி கூறினார்.

**எஸ். நாகராசன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெரியார் மாவட்டம்**

# சிப்காட்டின் சீரிய பணிகள்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்கும், விரிவாக்கத்திற்கும் ஒரு தூண்டுகோலாகவும், இம்மாநிலத்தில் பின்தங்கிய மற்றும் தொழில் வளர்ச்சியடையாத பகுதிகளில் விரைந்து தொழில்மயமாக்குவதற்கு உதவியாகவும் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் பல தொடங்குவதற்குப் பல உதவிகளும் மற்றும் நிதி உதவிகளும் செய்வதே சிப்காட்டின் செயலாகும்.

இந்தியத் தொழில் வங்கியின் மறு நிதித் திட்டத்தின்கீழ் நடுத்தர மற்றும் பெருந்தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளித்தல்; தொழில் வளர்ச்சிக்காகப் பல்வேறு ஊக்கத் திட்டங்களை நிறைவேற்றுதல்; தொழில் வளர்ச்சிக்கு உகந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து, பல அடிப்படை வசதிகளைச் செய்து, தொழிற்சாலைகள் தொடங்க மனைகளைக் குறைந்த விலையில் தொழில் முனைவோர்களுக்கு அளித்தல்; மற்றும் தொழில் முனைவோர்க்குத் தொழிற்சாலை அமைக்கத் தகுந்த ஆலோசனைகளும் துணைப் பணிகளையும் செய்தல் ஆகியவை, இந்நிறுவனத்தின் வளர்ச்சி நடவடிக்கைகள் ஆகும்.

கடந்த 18 ஆண்டுகளில், 'சிப்காட்' தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப பல திட்டங்களைத் தமிழக அரசு மற்றும் இந்தியத் தொழில் வங்கியின் ஆதரவுடன் ஏற்படுத்திச் செயலாக்கி வருகிறது. 1976-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்தியத் தொழில் வங்கியின் மறு உதவித் திட்டத்தின்கீழ் 'சிப்காட்' மறு உதவி வாங்க அனுமதி அளிக்கபட்டது. இந்த உதவி சிப்காட்டின் தவணைக் கடன் உதவித் திட்டத்திற்கு ஒரு பெரிய ஊக்கம் அளித்தது.

சிப்காட்' தொடக்கத்திலிருந்து 1990 ஜூன் மாதம் வரை 710 தொழில் திட்டங்களுக்குமேல் ரூ. 312.82 கோடிக்குத் தவணைக்கடன் அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்புதல் அளித்துள்ள ரூ. 312.82 கோடியில் ரூ. 272.93 கோடி தவணைக் கடன்களாக வழங்கியுள்ளது.

தவணைக் கடன் திட்டத்தின்கீழ், 'சிப்காட்' புதிய தொழிற்சாலை மற்றும் தொழிற்சாலைகளின் விரிவாக்கும் திட்டம், நவீனமாக்கும் திட்டம், இயந்திரங்களை வாங்குவதற்கும் தவணைக் கடன் அளித்து வருகிறது. பொதுவாக, தொழிற்சாலைகள் குறிப்பாக துணிவகைத்தொழிற்சாலைகள் சிப்காட்டின் தொழில் நவீனமாக்கும் திட்டத்தின்கீழ் தவணைக் கடன் வாங்க பெருவாரியாக வரவேற்பு அளித்துள்ளார்கள். தவணைக் கடன் உதவி தவிர 'சிப்காட்' ஆரம்ப மூலதன நிதி உதவி இந்தியத் தொழில் வங்கியின் ஆரம்ப மூலதனத் திட்டத்தின்கீழ், புதிய தொழில் முனைவோர்களுக்கு அளித்தல் மற்றும் சில தகுந்த திட்டங்களின் பங்குகளில் பொது விநியோகத்திற்கு உத்தரவாதம் அளித்தல் போன்ற உதவிகளைச் செய்து வருகிறது. தொழிற்சாலைகளில் நலிவு பரவி வருவதைத் தடுத்து, மறுமலர்ச்சிக்கு உகந்த பல உதவிகளைச்

---

**தொழில் வளர்ச்சியில் தமிழகம் சிறந்து விளங்கிட, அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகின்றது. 'மாதம் ஒரு தொழிற்சாலை' என்கிற நோக்கில் தமிழகம் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே வளர்ந்த, வளர்ந்துவரும் தொழிற்சாலைகளை அறிமுகப்படுத்தும் வகையில், 'சிப்காட்' என்னும் சிறுதொழில் முன்னேற்ற நிறுவனம் பற்றிய கட்டுரை இப்பகுதியில் இடம் பெறுகிறது.**

---

செய்து கொடுப்பதற்காக 'சிப்காட்', நலிவு பெற்ற தொழிலகங்களின் மறுமலர்ச்சிக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அக்குழு மறுமலர்ச்சிக்கு ஏற்ப பல் உதவிகளையும், நிதி உதவியும் நலிவு பெற்ற தொழிலகங்களுக்கு அளித்து வந்து, இதுவரை 32 நலிவு பெற்ற தொழிற்சாலைகளை மறுமலர்ச்சி பெறச்செய்துள்ளது.

'சிப்காட்' தமிழக அரசின் வட்டியில்லாத விற்பனை வரிக் கடன்/விற்பனை வரி ஒதுக்கி வைத்தல், மாநில அரசின் மானியத் திட்டம் போன்ற பல ஊக்கத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

வட்டியில்லாத விற்பனை வரிக்கடன் திட்டத்தின்கீழ் 'சிப்காட்' இதுவரை (30.6.1990 முடிய) ரூ.70 கோடி கடன் அளிக்க ஒப்புதலும், ரூ.63.06

## முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி

ஏழை, எளிய மக்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்கும், சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்துகொள்வதற்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இருதய அறுவைச் சிகிச்சைக்காக 1989-ஆம் ஆண்டிலிருந்து 31.8.90 வரை 117 பேருக்கு ரூ.5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து சிறுநீரக அறுவைச் சிகிச்சைக்கென 1989-ஆம் ஆண்டிலிருந்து 31.8.90 வரை 27 பேருக்கு ரூ.1 இலட்சத்து 29 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

கோடி வழங்கியும் உள்ளது். விற்பனை வரிக்கடன் ஒதுக்கி வைக்கும் திட்டத்தின்கீழ் ரூ.16.70 கோடி 'ஒதுக்கப்பட்டுள்ளன. ரூ.15.69 கோடி மாநில மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

'சிப்காட்' மத்திய அரசால் அளிக்கப்பட்ட மத்திய மானியத் திட்டத்தைச் செயல்படுத்தி வந்தது. அத்திட்டம் 30.9.1988க்கு மேல் மத்திய அரசால் நீடிக்கப்படவில்லை. அத்திட்டத்தின்கீழ் 'சிப்காட்' வழங்கிய மானியத் தொகை ரூ.41.86 கோடியாகும்.

தொழிற்சாலைகளைப்பின் தங்கிய இடங்களில் ஏற்படுத்துவதே, இந்தத் தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் முக்கிய பணியாகும். இந்நோக்கத்துடன் சிப்காட் பின் தங்கிய இடங்களில் வளர்ச்சிக்கு உகந்த இடங்களைத்தேர்ந்தெடுத்து அவைகளை மேம்பாடு செய்து, வேண்டிய ஊககத் தொகைகள் மற்றும் நிதி உதவிகளை அளித்து பின்தங்கிய இடங்களின் முன்னேற்றத்திற்கான திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.

இந்தக் கொள்கை வெற்றி அடைந்துள்ளதை ஒசூர், இராணிப்பேட்டை, கும்முடிப்பூண்டி முதலிய இடங்களில் உள்ள தொழில் இணையங்களின் வளர்ச்சி குறிக்கிறது. பல மத்திய மற்றும் பெருந் தொழிற்சாலைகள் இந்த இணையங்களில் தொடங்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் உள்ள பெருந் தொழில் அதிபர்களும் இந்த இணையங்களில் தொழில் தொடங்க வந்துள்ளார்கள். தொழில் முனைவோர்கள் இந்த இணையங்களில் தொழில் தொடங்க, காட்டிய ஆர்வத்தினால் 'சிப்காட்' மேலும் பின்தங்கிய இடங்களான மானாமதுரை, புதுக்கோட்டை/ மேலும் தொழில் வளர்ச்சிக்கு உகந்த தூத்துக்குடி ஆகிய இடங்களில் தொழில் இணையங்களைஅமைத்துள்ளது.

பெரும் இரசாயனம், பதப்படுத்தும் தொழில்களை அமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கடலூர் தொழில் இணையம் வெற்றியடைந்துள்ளது. இதன் அடிப்படையில் 'சிப்காட்' தற்போது மின் அணுத் தொழிற்சாலைகள் அமைப்பதற்காக ஒசூர் இரண்டாவது இணையத்தை அமைப்பதற்கும், தோல் பொருள்சம்பந்தமான தொழிற்சாலைகளைத்தகுந்த இடத்தில் அமைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

'சிப்காட்' தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டங்களைத் தேர்ந்தெடுக்க தேவையான வசதிகளைச் செய்து வருகிறது. மேலும், 'சிப்காட்' தொழில் திட்டக் குறிப்பேடு தயாரிக்கவும், தொழில் சாத்தியமான திட்டங்கள் ஆய்வறிக்கையைத் தயாரித்துத்தரவும் உதவி செய்கிறது. தொழில் முனைவோர்களின் தொழில் உரிமங்களுக்கான மனுக்களைப் பரிசீலித்துப்பரிந்துரைத்தல் மேலும் தொழில் முனைவோர்கள் தொழில் துவங்குவதற்கு வேண்டிய உள்துறை நகராட்சி மற்றும் பஞ்சாயத்து அலுவலக அனுமதி, மாசுக் கட்டுப்பாட்டுத் துறையின் அனுமதி, சுகாதாரத் துறையின் (தொழிற்சாலைகள் சட்டப்படி) அனுமதி, உயர் மின் அனுமதி போன்ற பல அனுமதிகளையும், ஊக்கத் தொகை, தவணைக் கடன் முதலிய நிதி உதவிகளையும் பெற வழிகாட்டுதல் ஆகிய பணிகள் செய்வதற்காக ஒரு பிரத்தியேகக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் முனைவோர் நடுத்தர, பெருந்தொழில்களைத் திட்டமிடுகையில் ஏற்படும் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசு உடன் பணிமுடிப்பு அமைப்பு ஒன்று உள்ளது. அது தமிழகத் தொழில் துறையின் ஆணையர் மற்றும் செயலாளர் தலைமையில் தேவையானபொழுது, கூடிப் பிரச்சினைகளை விவாதித்து வேண்டிய உதவிகளை உடனுக்குடன் செய்து வருகிறது.

அயல்நாடுகளில் உள்ள இந்தியர்களின் முதலீட்டை ஊக்குவிப்பதற்காக, சிப்காட்டில் ஒரு தனி அயல்நாட்டு இந்தியர்க்கான குழு அயல்நாட்டு இந்தியர்கள் தகுந்த தொழில் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் அவைகளைச் செவ்வனே நடத்துவதற்கும் உதவி செய்து வருகிறது. இக்குழு இதுவரை அமெரிக்க ஐரோப்பிய நாடுகள், மேற்கு ஆசிய நாடுகள் மற்றும் பல நாடுகளிலிருந்தும் 1,200-க்கு மேல் வந்துள்ள பொது விசாரணைகளைப் பரிசீலித்து வந்துள்ளது.

தொழில்துறையின் ஆணையாளர் மற்றும் செயலர் தலைமையில் உள்ள ஒரு குழு தமிழ் நாட்டில் அயல்நாட்டு இந்தியர்களின் முதலீட்டின் வளர்ச்சியைப் பரிசீலித்து வருகிறது. 56 தொழில் திட்டங்கள் மொத்த ரூ.88 கோடி செலவில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 20 அயல் நாட்டு இந்தியரின் தொழில் திட்டங்கள் சுமார் ரூ.70 கோடி செலவில் அமுலாக்கப்படுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.



தெரிந்து கொள்ளுங்கள்

# சேலம் ஒரு பார்வை

தி. வெங்கடாசலம்,
உதவி ஆணையர் (பொறுப்பு),
மாவட்ட ஆவணக் காப்பகம்,
சேலம்.

**கி.பி.** 1860 முதல் சேலத்தைத் தலைநகராகக் கொண்டது சேலம் மாவட்டம். ''சேலம்'' என்றால் குன்றுகள் என்று பொருள். நாற்புறமும் குன்றுகளால் சூழப்பட்டிருப்பதால் குன்று சூழ் நகர் எனவும் படும். எனவே, சேலம் என்பது சிறப்புக் காரணப் பெயராகும். இவ்வூர் திருமணி முத்தாற்றங்கரையில் அமைந்துள்ளது. காவிரி இம்மாவட்டத்திற்கும் திருச்சி, பெரியார் மாவட்டங்களுக்கும்எல்லையாகப் பாய்ந்து ஓடுகிறது. இம்மாவட்டத்தில் மேட்டூர் அணை உள்ளது. ஏர்க்காடு சேலத்தின் மலைத்தலம்.

சேலம் என்றாலே அனைவரின் நினைவிற்கும் வருவது மாங்கனியாகும். சுவைமிகுந்த மாங்கனிகள் இம்மாவட்டத்தில் உற்பத்தியாகின்றன. நூல் மற்றும் பட்டு, கைத்தறித் துணிகள், இரும்பு பாக்சைட், ஜவ்வரிசி மற்ற முக்கிய உற்பத்திகளாகும். வில்லேந்தி வீரம் விளைவித்த வல்வில் ஓரி வாழ்ந்த பகுதி கொல்லி மலையாகும். தமிழகத்தின் முதலாவது அரசவைக் கவிஞர் திரு. இராமலிங்கனார் நாமக்கல்லைச் சேர்ந்தவர்.

சிக்கனந்தூரிலிருந்து கரிச்சிபாளையம் செல்லும் வழியில் காந்தி ஆசிரமம் உள்ளது. இவ்வாசிரமம் காந்தியடிகளின் கொள்கைகளைப் பரப்ப ஏற்பட்டதாகும். தொலைக்காட்சி ஒளிபரப்பு மையம் ஏர்க்காட்டில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இம்மாவட்டத்தில் சராசரி 860 மி.மி. மழை பெய்கிறது. 10,96,952 ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்படுகிறது. அதில் 3,79,769 ஏக்கர் நீர்பாயும் பரப்பாகும். காவிரிக்கரை ஊர்கள் ஜேடர்பாளையம் முதல் மோகனூர் வரை வளம் மிக்க பூமிகள்; இங்கு விளையும் வெற்றிலை தரம் மிக்கவை. 10 நாட்கள் வரை கெடாமலிருக்கும். பம்பாய்க்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றது. ஆத்தூர்ப் பகுதி வெற்றிலை சுமார் 3 நாட்கள் கெடாமலிருக்கும். இவை சென்னைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆத்தூர், கிச்சடி அரிசிக்குப் பெயர் பெற்றதாகும். பனமரத்துப்பட்டியில் மல்லிகை, ரோஜா உற்பத்தி அதிகம். இவ்வூர்ப் பூக்கள், வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. நாள் ஒன்றுக்கு 5,37,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. ராசிபுரம் நெய் பெயர் பெற்றது. சந்தன மரம் நல்ல வருவாயைக் கொடுக்கிறது. சேலம் - நாமக்கல் சாலையில் பொய்மான் கரடு உள்ளது.

சேலம் இரும்பாலையில் எவர் சில்வர் தகடுகள் தயாரிக்கிறார்கள். தளவாய்ப்பட்டியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. கைத்தறி (பட்டு நூல்) தயாரிக்க 170 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. ஜவ்வரிசி தயாரிக்க 500 சிறு நிறுவனங்கள் உள்ளன. பள்ளிப்பாளையத்தில் உள்ள சேசசாயி காகித ஆலை தமிழக உற்பத்தியில் 70 சதவிகித காகிதத்தைத் தயாரிக்கிறது. குமாரபாளையம் ஜமக்காள உற்பத்திக்குப் பெயர் பெற்றது. மோகனூரில் சர்க்கரை ஆலை உள்ளது. சங்ககிரியில் சிமெண்ட் ஆலை உள்ளது. மேட்டூரில் அனல் மற்றும் புனல் மின் திட்டங்கள் உள்ளன. அலுமினியம் முலாம் பூசும் தொழில் மற்றும் இரசாயனம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. இங்கு கிடைக்கும் கருங்கற்கள், ஜப்பான் நாட்டிற்கு அதிக அளவில் ஏற்றுமதியாகின்றன. இங்கு கிடைக்கும் மீன்கள் வங்காளத்துக்கு அனுப்பப்படுகின்றன.

தாரமங்கலத்தில் புகழ் பெற்ற கைலாசநாதர் ஆலயம் உள்ளது. இவ்வாலயத்திலுள்ள கற்சங்கிலி, கற்கிளிகள், யாளி வாயில் உருளும் கற்பந்து ஆகிய சிற்பங்கள் உயர்தரமானவை.



வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்
VIJAY
COMPLEX
N P K
19-19-19
VIJAY
COMPLEX
N P K
17-17-17
VIJAY
UREA-N46%
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
VIJAY
HTA 7343



**அம்பேத்கர் நூற்றாண்டு**

★ வேதனைப்படும் மனநிலை, நம்பிக்கையற்ற உள்ளம், கொத்தடிமைத்தனம் - இப்படிப்பட்ட இழிநிலைகளில் ஊறிக்கொண்டு வாழ்வதைவிடப் பிறவாமல் இருந் திருப்பதே மேல். மனத்தில் உறுதியுடன், உள்ளத்தில் நம்பிக்கையுடன் கொடுமைகளைக் களைய ஒன்று படுங்கள்,

21 ஆம் பக்கத் தொடர்ச்சி

**தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்.**

6 முதல் 36 மாதக் குழந்தை களுக்கிடையே ஏற்படும் இறப்பு விகிதத்தைக் குறைத்தல், ஊட்டச் சத்து பற்றாக்குறை ஏற்படாமல் தடுத்தல்.

ஊட்டச்சத்து நிலையை மேம் படுத்துதல்.

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்.

மக்களிடையே உள்ள உணவுப் பழக்கங்களை மாற்றியமைத்தல்.

சத்துணவு உட்கொள்ளப் பயிற்று வித்தல் போன்ற நோக்கங்களுக் காகத் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 6 மாதம் 36 மாதக் குழந்தைகளுக்கு மாதா மாதம் எடை எடுக்கப்படுகிறது.

எடை எடுக்கப்பட்டு வயதுக் கேற்ப எடையில்லாத குழந்தைகளுக் குப் போதுமான எடைத்தகுதி பெறும் வரை 4 மாதங்களுக்கு ஒரு முறை வயிற்றுப்பூச்சி நீக்க மருந்து கொடுக் கப்படுகிறது.

6 மாதங்களுக்கு ஒரு முறை வைட்டமின் 'அ' திரவம் வழங்கப் படுகிறது.

கக்குவான், ரணஜன்னி, டிப் தீரியா போன்ற கொடிய நோய் களிலிருந்து குழந்தைகளுக்குப் பாது காப்பு அளிக்கும் பொருட்டு மூன்று முறை தடுப்பூசிகள் பலநோக்கு சுகா தாரப் பணியாளர்களால் போடப் படுகின்றன.

ஷயரோகம், போலியோ போன்ற வைகளுக்குத் தடுப்பூசியும் சொட்டு மருந்தும் வழங்கப்படுகின்றன.

மேலும், மெராஸ்மஸ் குவாய்னி யாக்கர் போன்ற நோய்கள் உள்ள குழந்தைகளுக்கு தனி கவனிப்பு வழங்கப்படுகிறது.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு டெட்டனஸ் தடுப்பூசி இருமுறை போடப்படுகிறது.

நலிவுற்ற கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கரு வுற்ற 7-வது மாதத்திலிருந்து பிரசவ மான பின்பு நான்கு மாதங்கள் வரை இணை உணவு வழங்கப் படுகிறது.

வயிற்றுப் போக்கினால் 10 முதல் 36 மாதக் குழந்தைகள் அதிக மாகப் பாதிக்கப்பட்டு மரணமடை வதைத் தவிர்க்க ''நீரிழப்பைச் சரி செய்யும் பவுடர்'' ஊட்டச்சத்து பணியாளர்கள் மூலம், பாதிக்கப் பட்ட குழந்தைகளுக்கும் பெரியோர் களுக்கும் வழங்கப்படுகிறது.

தொடர்புப் பிரிவு மூலமாக, முனைப்பு இயக்கங்கள்; திரைப் படங்கள், சுவரொட்டிகள், சமையல் செயல்முறை விளக்கங்கள் ஆகிய வைகள் மூலமாக கருத்து விளக்கம் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் செயல்படும் மையங்களின் எண்ணிக்கை 7,555 ஆகும். பயனடையும் குழந்தைகளின் எண்ணிக்கை 5.97 இலட்சம். 1990-91-ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ.7.64 கோடி ஆகும். இணை உணவு பெறும் குழந்தை களின் எண்ணிக்கை 1.38 இலட்சம் ஆகும். இணை உணவு பெறும் கர்ப் பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய் மார்களின் எண்ணிக்கை 42,380 ஆகும்.

**மத்திய அரசின் உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்:**

பொருளாதார நிலையில் பின் தங்கிய தாய்மார்களுக்கும், 0-6 வயது வரை உள்ள குழந்தைகளுக் கும், கர்ப்பிணிகள் போன்றோர் களுக்கும் உணவு, மருத்துவ உதவி ஆகிய அடிப்படைத் தேவைகளை ஒருங்கிணைந்த முறையில் அளித்தல் இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் ஆறு பணிகள் நடைபெறுகின்றன.

சத்துணவு அளித்தல்
தடுப்பு மருந்து கொடுத்தல்
மருத்துவ உதவி
மேல் மருத்துவ பரிசோதனை
முன் பருவக் கல்வி
ஊட்டச்சத்து நலக்கல்வி

இத்திட்டத்தின் மூலம் 0-2 வய துள்ள குழந்தைகளுக்கும், கர்ப் பிணிகள் மற்றும் தாய்மார்களுக்கும் சத்து மாவு வழங்கப்படுகிறது.

2 முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக் கப்படுகிறது.

ஒரு வயதுக்குட்பட்ட குழந்தை களுக்கு காசநோய், போலியோ, முத்தடுப்பு ஊசி, தட்டம்மை தடுப் பூசிகள் போடப்படுகின்றன.

பூச்சி நீக்க மருந்தளிக்கப்படு கிறது.

குழந்தைகளுக்கு 6 மாதங்களுக்கு ஒருமுறை வைட்டமின் மாத்திரை கொடுக்கப்படுகிறது.

இரும்புச்சத்து, போலிக் அமில மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன. கர்ப்பிணிகளுக்கு ரணஜன்னி தடுப் பூசி போடப்படுகிறது.

குழந்தைகளை மாதாமாதம் எடை எடுத்து எடை அட்டையில் குறிக்கப்படுகிறது.

மையத்தில் சிறு நோய்களுக்கு மருந்துகள் அளிக்கப்படுகின்றன.

மருத்துவமனை மையங்களில் மருத்துவப் பரிசோதனை செய்யப் படுகிறது.

2-5 வயது வரையுள்ள குழந்தை களுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை கோழி முட்டை வழங்கப்படுகிறது.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

★ உணவு விடுதிகளில் உணவுப் பண்டங்களின் விலை குறைக்கபட்டுள்ளது. உணவு விடுதிகளின் உரிமையாளர்களுடன் உணவுத்துறை அமைச்சரும் அதிகாரிகளும் கலந்து பேசிய பின்னர் இந்த விலை குறைப்பு அமலுக்கு வருகிறது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது (27.8.90).

★ தமிழ்நாடு முழுவதும் 8-ஆம் வகுப்பு வரை படிக்கும் 6.5 இலட்சம் மாணவ மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வசதியும், 8-ஆம் வகுப்புக்கு மேல் படிக்கும் 2 இலட்சம் மாணவ மாணவிகளுக்கு அரைக் கட்டணச் சலுகையும் தரப் பட்டுள்ளன என்று பொள்ளாச்சியில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.மு.கண்ணப்பன் அவர்கள் அறிவித்தார் (27.8.90).

★ பழந்தமிழ்க் கலைகள் அழியாது காக்க, இயல், இசை, நாடக மன்றம் முயற்சிகளை மேற்கொண்டால், அதற்கு வேண்டிய உதவிகளைத் தமிழக அரசு செய்யும் என்று மதுரையில் கிராமியக் கலைவிழா நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார் (31.8.90).

★ தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்யப் புதிய திட்டத்தைத் தமிழக அரசு வகுத்துள்ளது என்றும், சொந்தமாகக் கைத்தறி இல்லாத பெண் நெசவாளர்களுக்குக் கைத்தறி வழங்கப்படும் என்றும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு. எஸ்.தங்கவேலு அவர்கள் திருச்சியில் தெரிவித்தார் (3.9.90).

மொத்தம் 21 மாவட்டங்களில் திருவண்ணாமலை-சம்புவராயர் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக 19 மாவட்டங்களில் இத்திட்டம் செயல் படுகின்றது.

**முதியோர் உதவித்தொகை**

உற்றார், உறவினர், ஆதரவற்றவர், வாழ வழியற்றவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும்பொருட்டு தமிழக அரசால் செயல்படுத்தப் படும் திட்டம் முதியோர் உதவித் தொகைத் திட்டமாகும். இது 5 வகைகளாக உள்ளன. அவைகள் பின்வருமாறு:

(1) முதியோர் உதவித்தொகை (சாதாரண) திட்டம்:

இத்திட்டத்தில் தகுதிபெற குறைந்த பட்சம் வயது வரம்பு 65 ஆக இருத்தல் வேண்டும். தொழுநோய், மனநோய், பாரிசவாயு மற்றும் அவயவம் இழந்து வருவாய் ஈட்ட முடியாமல் ஆதரவற்ற நபர்கள் உதவித்தொகை பெற குறைந்த பட்ச வயது வரம்பு 60 ஆகும்.

(2) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற ஊனமுற்றோர்) திட்டம்

45 வயது நிரம்பிய ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் இத்திட்டத் தின்கீழ் பயன் பெறலாம். கண் பார்வையற்றவர்களுக்கு வயது வரம் பின்றி உதவித்தொகையளிக்கப்படு கிறது. உடல் ஊனம் 50 சதவீதத் துக்கு மேல் இருக்க வேண்டும்.

(3) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற விதவைகள்) திட்டம்:

இத்திட்டத்தின்கீழ், வயது வரம் பின்றி (விதவைகள் 40 வயது என்று இருந்ததை நீக்கி) 1.4.90 முதல் உதவித்தொகை பெறுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. எனவே ஆதரவற்ற விதவைகள் அனைவரும் இவ்வுதவிபெறத் தகுதியுடையவர்கள்.

(4) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம்:

இதற்கு வயது வரம்பு 60 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(5) முதியோர் உதவித்தொகை (கணவரால் கைவிடப்பட்ட/ ஆதரவற்ற பெண்களுக்கு) திட்டம்:

கணவரால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு 30 வயதுக்குட் பட்டவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவித்தொகை வழங்கப்படு கிறது. கணவனைப்பிரிந்து வாழ்க்கையின்றி ஐந்தாண்டுக்குக் குறைவில் லாமல் இருந்தவர்களாக இருத்தல் வேண்டும். திருமணம் சட்டபூர்வ மானதாக இருக்க வேண்டும். மறு மணம் செய்து கொண்டாலும், கணவரிடம் மறுபடியும் சேர்ந்தாலும் அவர்களுக்கு உதவித்தொகை நிறுத்தப் படும். எவ்வித வருமானம் அல்லது வருமானம் ஈட்டமுடியாத ஆதாரம் இல்லாதவரும், 20 அல்லது அதற்கு மேல் வயது நிரம்பிய மகன்/மகளின் மகள் மற்றும் கணவன்/மனைவி ஆகிய உறவினர்கள் இல்லாத நபர் களுக்கு மாதம் ஒன்றுக்கு உதவித் தொகையாக ரூ.50/ வழங்கப்படு கிறது. மேலும் ஆண்டுக்கு இரு முறை பண்டிகை மற்றும் சுதந்திர நாளன்று உதவித்தொகை பெறும் ஆண்களுக்கு நபர் ஒன்றுக்கு ஒரு கைத்தறி ஜனதா வேட்டியும், பெண் களுக்கு ஒரு கைத்தறி ஜனதா வண்ண/ வெள்ளை சேலை இலவசமாக வழங்கப்படுகிறது. நாள்தோறும் மதிய சத்துணவு இலவசமாக வழங் கப்படுகிறது.

1.5.89-க்கு முன்னர் முதியோர் உதவித்தொகை பெறுவதற்கு எண் ணிக்கை உச்ச வரம்பு நிர்ணயிக்கப் பட்டிருந்தது. இப்பொழுது எண் ணிக்கை உச்ச வரம்பு 1.5.89 முதல் முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது. இதன்படி தகுதியுடையவர்கள் அனை வரும் உதவித்தொகை பெறலாம். முதியோர் உதவித்தொகை பெற விண்ணப்பித்துக் காத்திருப்போர் களின் விண்ணப்பங்களை ஆய்வு செய்து அவர்களுக்கு உடனடியாக உதவித்தொகை வழங்கப்பட நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு வரு கின்றன.

இத்திட்டத்தினால் 31.3.89 வரை 3,72,689 நபர்கள் பயனடைந் துள்ளனர். 1.4.89 முதல் 31.3.90 வரை கூடுதலாகப் பயன் பெற்ற வர்கள் 99,535 நபர்கள். 30.6.90 வரை மொத்தம் 4,88,089 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

# மருத்துவ விந்தை




**டாக்டர் லலிதா அனந்தசுப்பிரமணியம்**
மருத்துவக் கல்வித் துறை இயக்குநர், சென்னை




இருதயத்திலிருந்து அறுவைச் சிகிச்சை செய்து எடுக்கப்பட்ட பெரிய கட்டி.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், சென்னை அரசு பொது மருத்துவமனையில், இருதய மாற்று இரத்தக் குழல் அறுவைச் சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்த ஒரு கோடி ரூபாய் முதல்வர் நிவாரண நிதியிலிருந்து வழங்கினார். அதன் பயனாக, ஓர் இளம் பெண்ணின் இருதய மேல் அறையில் இருந்த 700 கிராம் எடையுள்ள கட்டி ஒன்று வெட்டி எடுக்கப்பட்டது. தமிழகத்தில் முதன் முறையாக இப்படிப்பட்ட அபூர்வ கட்டி, அதிசயிக்கத்தக்க வகையில் அகற்றப்பட்டது.**

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சென்னை அரசு பொது மருத்துவமனை இருதய மாற்று இரத்தக் குழல் அறுவைச் சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்த 1 கோடி ரூபாய் முதல்வர் நிவாரண நிதியிலிருந்து அளித்தார். அதன் பயனாக 35 வயதுடைய ஏழைப் பெண்மணியின் இருதய வலது மேல் அறையிலிருந்து ஓர் அபூர்வ கட்டி அதிசயிக்கத் தக்க வகையில் அகற்றப் பட்டது.

ஆந்திர மாநிலம், நெல்லூர் மாவட்டம், நாயுடுப்பேட்டையைச் சார்ந்த 35 வயதுடைய ராதா என்ற பெண்மணி, உடலின் மேற்பாகம் அனைத்தும் வீங்கி, மூச்சுவிடத் திணறிக் கொண்டு, சிகிச்சைக்காக 2.8.90 அன்று சென்னை அரசினர் பொது மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். நோய் கண்டறிய பல சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார். நோயின் காரணம் தெளிவாகவில்லை. பின் அவர் மருத்துவ இயக்குநர் மற்றும் பேராசிரியர் டாக்டர். ஜி.அனந்த சுப்பிரமணியம் அவர்களிடம் சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். இவர் நோயாளியின் வலது மேல் அறையில் ஓர் கட்டி இருக்கக் கூடுமெனக் கூறினார். இதனைத் தெளிவாக்க சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில், உடல் முழுவதும் கதிர் ஊடுருவி நோய் கண்டறியும் கருவியின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டார். இந்த ஆய்வு மருத்துவப் பேராசிரியரின் கருத்தை உறுதிப்படுத்தியது.

இருதய அறுவைச் சிகிச்சைக் கூடம் மாற்றியமைப்பு நடந்து கொண்டிருக்கிறது. இதனால் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து வாங்கிய கருவிகள் அனைத்தும் பொது அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்குக் கொண்டுவரச் செய்து, அறுவைச் சிகிச்சை தொடங்கப்பட்டது.

18.9.90 அன்று இருதய அறுவைச்சிகிச்சைத் துறைத் தலைவர் டாக்டர். எஸ். வாசுதேவன் அவர்கள் தலைமையிலும், மயக்க மருந்தளிக்கும் பேராசிரியர் எஸ்.கே.இராஜேந்திரன் அவர்கள் தலைமையிலும் திறந்த இருதய அறுவைச் சிகிச்சை தொடங்கப்பட்டது.

பேராசிரியர் டாக்டர் எஸ்.வாசுதேவனின் பெருமுயற்சியால் இரத்த

## அடவி நயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்டம்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் செங்கோட்டை வட்டம் மேக்கரை கிராமத்தில் அனுமான் நதியின் குறுக்கே மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ரூ.37.69 கோடி செலவில் பொதுப் பணித்துறையினரால் அடவி நயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்டம் அமைக்கப்படுகிறது.

வெள்ளக் காலங்களில் வெள்ளம் அனுமன் நதியின் குறுக்கே உள்ள 14 அணைக்கட்டுகளையும், குளங்களையும் நிரப்பி சிற்றாற்றில் கலந்து வீணாகிறது. ஆகவே, இந்த இடத்தில் அடவி நயினார் நீர்த்தேக்கத் திட்டம் அவசியமானது என உணரப்பட்டு இத்திட்டத்தைச் செயலாக்க தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது. 680 மீட்டர் நீளத்தில் 43.70 மீட்டர் உயரத்தில் 174 மி.கன அடி கொள்ளளவில் இவ்வணை கட்டப்படவுள்ளது.

பொதுமக்களின் நெடுநாளைய கோரிக்கையினை ஏற்று இத்திட்டம் செயல்படும்பொழுது வடகரை கீழ்பிடாகை, தென்கரை கீழ்பிடாகை, பன்பொழி, இலத்தூர், அச்சம்புதூர், நெடுவயல், கொடிகுறிச்சி, நயினார் நகரம் ஆகிய 8 கிராமங்கள் மிகுந்த பயனை அடைய உள்ளன.

7.9.90 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், இத்திட்டத்திற்கு கடையநல்லூரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் அடிக்கல் நாட்டினார்.

எஸ்.எம். பஷீர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி

## மூளையின் செல் வளர்ப்பு

### முதல் தடவையாக

மனித மூளையின் செல்களை, ஆய்வுக்கூடத்திலே வளர்த்து, விஞ்ஞானிகள் அபார சாதனை படைத்துள்ளனர். வலிப்பு நோய், 'ஆல்ஷைமர் நோய்' எனப்படும் மூப்புநோய் போன்ற நரம்பியல் கோளாறுகளைக் குணப்படுத்துவதற்கு இந்தப் புதிய சாதனை வழி வகுக்கும் என்று நம்பப்படுகிறது. இவ்வாறு மூளையின் செல் வளர்க்கப்பட்டுள்ளது இதுவே முதல் தடவையாகும்.

அமெரிக்க விஞ்ஞானிகள் புரிந்துள்ள இந்தச் சாதனை மனித மூளை பற்றிய ஆராய்ச்சியில் முக்கிய திருப்புமுனை ஆகும்.

''நாம் அறிந்தவரையில், இதுவரையில் மூளையிலிருந்து 'நியூரான்களை' யாரும் வளர்த்ததே இல்லை. விலங்குகளின் மூளை செல்களே வளர்க்கப்பட்டதில்லை என்னும்போது, மனித மூளை செல் வளர்ப்பு பற்றிக் கேட்கவே வேண்டாம்'' என்று அந்தத் துறையின் இயக்குநரான டாக்டர் சாலமன் சிண்டர் தெரிவித்தார்.

மனித உடலின் முக்கிய நரம்பு மண்டலமான தண்டுவடம், மூளை ஆகியவற்றின் செல்கள் 'நியூரான்கள்' என்று அழைக்கப்படுகின்றன. உடலின் இதர பகுதிகள் எப்படி இயங்க வேண்டும் என்று கட்டளையிடும் இரசாயனச் செய்திகளைப் பரிமாற்றம் செய்து கொள்வது இந்த நியூரான்கள் தாம். எடுத்துக்காட்டாகத் தசைகளின் சுருக்கத்தையும் விரிவையும் கட்டுப்படுத்துபவை ''மோட்டார் நியூரான்கள்'' எனப்படும் செல்களேயாகும். நியூரான்கள் உடலின் இதர செல்களினின்றும் வேறுபட்டவை. அவை பிரிக்கப்பட முடியாதவை.

சுழற்சி இருதய நுரையீரல் தானியங்கி கருவிக்கு மாற்றப்பட்டது. இருதயக் கட்டியினால் இதைப் பொதுவான முறைப்படி அமைக்க முடியவில்லை. அறுவைச் சிகிச்சை தொடருமா என்ற நிலையை மாற்றி மிகுந்த எச்சரிக்கையுடன் பல மருத்துவர்களின் உதவியுடன் அறுவைச் சிகிச்சை நடந்தது.

இருதய வலது மேலறையில் சுமார் 700 கிராம் எடையுள்ள கட்டி வலது மேலறையின் பெரும் பகுதியுடன் தொடர்பு கொண்டிருந்தது. இதை வெட்டி எடுக்க வேண்டியதாயிற்று.

சிதைந்து போன இருதய வலது மேலறை மீண்டும் இருதய மேலுறைத் திசுக்களைக் கொண்டு சரி செய்யப்பட்டது. இரத்த சுழற்சி மீண்டும் இருதயத்திற்கு மாற்றப்பட்டது. அறுவைச் சிகிச்சை சிறப்பாக முடிந்து, நோயாளி விரைவாக முன்னேறி வருகிறார்.

இருதயத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கட்டியை ஆய்வுக்கு உட்படுத்தியதில், அக்கட்டி ஓர் பயங்கரமான புற்று நோய்க் கட்டி என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நோயாளிக்கு மருத்துவச் சிகிச்சை அளித்து வரும் பேராசிரியர் டாக்டர் ஜி. அனந்தசுப்பிரமணியம் அவர்கள் நோயாளிக்குத் தீவிரமாகப் புற்றுநோய்ச் சிகிச்சையும் அளிக்கப்படும் என கூறியுள்ளார்.

இந்த அற்புத உயிர்க் காப்பு நிகழ்ச்சியின் முக்கிய காரணமாக விளங்குபவர், நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதில் ஐயமில்லை.

தமிழக முதல்வரின் முற்போக்குத் திட்டங்களுக்கு இது ஓர் மகத்தான வெற்றியாகும். மருத்துவர்களும், தமிழக மக்களும், ஏழை எளிய மக்கள் பயன் பெறும் திட்டங்களை ஏற்படுத்தியமைக்கு, நம் முதல்வருக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

## நான்காம் அட்டை சொல்லும் செய்தி



சென்னை நகரம் 350 ஆண்டு

சென்னை

# உயர்நீதி மன்றக் கட்டடம் உருவான வரலாறு

ரகமி

சென்னை உயர்நீதி மன்றம் முதன்முதலில் துறைமுகத்திற்கு எதிரேயுள்ள ஓர் பழங்கட்டடத்தில் 1862-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி முதல் தொடங்கப்பட்டது. அப்போது தலைமை நீதிபதியாக இருந்தவர் சர்.வால்டர் ஹார்மன் ஸ்காட்லண்ட் என்ற ஆங்கிலேயர். இதற்குப் பின்பு, சுமார் 30 ஆண்டுகள் கழித்து ''பாரீஸ் கார்னர்'' என்றழைக்கும் இடத்திற்கு 1892-ஆம் ஆண்டு ஜூலை 12-இல் புதுக்கட்டடத்திற்குப் புதுமனை புகுந்தது.

சமீபத்தில் சென்னை ஹைகோர்ட் தனது 125-வது ஆண்டினை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது வரலாற்றுச்சிறப்பு மிக்கது! அழகும் அற்புதமுமானசிவப்புச் செங்கற்களால் மிகுந்த வேலைப்பாடுகளுடன் கூடிய இக்கட்டடத்தைக் கட்டியவர் அந்நாளில் பிரபல கட்டடப் பொறியாளரான திவான் பகதூர், ''தாட்டி கொண்ட'' நம்பெருமாள் செட்டி ஆவார்.

ஆரிய வைஸ்ய மரபில் பிறந்த நம்பெருமாள் செட்டி அந்நாளில்



'கட்டட மேதை'
திவான் பகதூர் தாட்டி கொண்ட நம்பெருமாள் செட்டி

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டமும், சமஸ்கிருதத்தில் பட்டமும் பெற்றவர். பொறியியல் கட்டிடக் கலையில் நிபுணரான இவர் அக்காலத்தில் புகழ்மிக்க கட்டடங்களைக் கட்டியது இன்றும் அவரது புகழுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன சென்னையிலுள்ள ''இந்தியன் தேசீய வங்கிக் கட்டடம்''; ''ஜார்ஜ் டவுன் கிறிஸ்துவ இளைஞர் கழகக் கட்டடம், (ஒய்.எம்.சி.ஏ.)-'எழும்பூர் விக்டோரியா நுண்கலைக் கழகக் கட்டடம்'', ''ஜெனரல் போஸ்டாபீஸ்''; ''மெட்ராஸ் மியூசியம்''; ''நேஷனல் ஆர்ட் காலரி'', ''ஜெனரல் ஆஸ்பத்திரியின் ஓர் பகுதி'' எர்ணாகுளத்தில் உள்ள மகாராஜா காலேஜ் முதலியன. தென்னிந்தியாவிலேயே முதன் முதலாக, திருச்சூர் தேக்கு மரவாள் பட்டறை ஆலையைத் தோற்றுவித்த பெருமை இவருக்கே உண்டு.

இக்கட்டடங்களில் பெரும்பாலும் வலுவான சிவப்பு நிற செங்கற்

களால் கட்டப்பட்டுள்ளதை எளிதில் அடையாளம் காணலாம். கட்டடப் பூச்சுக்குத் தேவையான சுண்ணாம் புக் காறையில் கடுக்காய்ப் பொடி, முட்டையின் வெள்ளைக் கரு, வெல்லத் தண்ணீர் இவைகளைப் பதமோடு கலந்து அவைகளைச் சன்ன மாக கல் உரலில் அரைத்து, சாந்து தயாரானதும், அதில் வேப்பெண் ணெய் கசண்ட்டும், இலுப்ப எண் ணெய் கசண்ட்டும் சிறிதளவு சேர்த்து மூடிவைப்பர். இப்படிப்பட்ட சாந்து வைக் கொண்டும் செங்கற்களைப் பூசுவதனால் உறுதியாக இருக்கும் இவைகள் எத்தனை காலங்களா னாலும் பூச்சிகள் சந்துக்களில் அடைய விடுவதில்லையாம்.

நம்பெருமாள் செட்டி எந்த ஒரு கட்டடத்தைக் கட்டுவதானாலும், 'மனை அடி சாஸ்திரம்' நீரோட்டம் கவனித்து அங்கு அதற்கான பூஜை களைச் செய்த பின்பு, முதலில் வைத்துக் கட்டும் ஓர் சிவப்பு செங் கல்லைத் தன் தாயாரிடம் கொடுத்து அவரை வணங்கி ஆசி பெற்ற பின்பே அதனைக் கொண்டு 'கால் கோள்' வேலையைத் தொடங்கு வாராம். நம்பெருமாள் செட்டி அந் நாளிலேயே நூற்றுக்கணக்கான கொத் தனாரைக்கொண்டு சுமார் மூன் றாண்டுகளில் கட்டிமுடித்தாராம். வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் சென்னையில் இவர் கட்டிய கட்ட டங்களைக் கண்டு பிரமித்துப் பாராட்டாதவர்களேஇல்லை எனலாம்.

நம்பெருமாள் செட்டி புதுக் கட்டடங்கள் கட்டுவதில் மட்டும் திறமைசாலியானவரல்ல. பழைய கட்டடங்கள் எதுவாயினும் அதன் சுவர்கள், மற்றும் அதிலுள்ள மரச் சாமான்களைத் தட்டிப்பார்த்து அக் கட்டடம் எப்போது கட்டப்பட்டது? அதன் ஆயுள் எவ்வளவு? என்பதை மிகத் துல்லியமாகக் கணக்கிட்டுக் கூறுவதிலும் அபாரத் திறமைசாலி யாகத் திகழ்ந்தாராம்.



சென்னை எழும்பூரிலுள்ள தேசிய கலைக்கூடம்

மிகுந்த பரோபகாரமான குண முள்ள நம்பெருமாள் செட்டி, உலகப் புகழ் 'கணித மேதை ராமானுஜன்' உடல் நலமின்றி லண்டனிலிருந்து சென்னை திரும்பியதும் அவரை யும் அவரது குடும்பத்தினரையும் தனது சேத்துப்பட்டு ஹாரிங்டன் சாலையிலுள்ள பங்களாக்களில் தங்கச்செய்து ஆதரித்தவர்.

மதராஸ் போர்ட் டிரஸ்ட் அந் நாளைய சேர்மன் ஸர்.பிரான்சிஸ் ஸ்பிரிங் இவரிடம் கட்டட விஷய மாக கலந்தாலோசிப்பார் என்றால், இது நமது நம்பெருமாள் செட்டியின் கட்டடத் திறமைக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும்! இவருக்கு திவான் பகதூர் பட்டம் 1923 நவம்பரில் அப்போது சென்னையில் கலெக்ட ராக இருந்த ஏ.ஆர்.காக்ஸ் ஐ.சி.எஸ். என்பவரால் வழங்கப்பட்டது. இது பற்றி பிரபல ஆங்கில நாளேடான ''இந்து''விலும் செய்தி பிரசுரமாகி யுள்ளது.

திவான்பகதூர் தாட்டி கொண்ட நம்பெருமாள் செட்டியின் பொதுஞானம், சேவை உணர்ச்சி, திறமையைப் பயன்படுத்தும் வகை யில், சென்னையில் முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட சென்னைச் சட்டசபையில் (Legislative Council) அரசினர் அவரை நியமனம் செய்தனர். தவிர பாரத அரசு வங்கியில் ஓர் இயக்குநராகவும் இருந்த முதல் இந்தியர் இவரே!

'கட்டட மேதை' புகழ்கொண்ட 'தாட்டிகொண்ட' நம்பெருமாள் செட்டி 1925-ஆம் ஆண்டு தமது 70-ஆம் வயதில் காலமானார். இவரது குடும்பத்தினர் சென்னை யில் வாழ்ந்து வருகின்றனர்.

---

**மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ்நாள் பணி.**

**— தந்தை பெரியார்**

---

# தமிழ்நாடு மின்சார வாரியம்
## மேட்டூர் அனல்மின்திட்டம், மேட்டூர் அணை - 1.

1.0) கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன.

| வரிசை எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த எண் | ஒப்பந்த பிரதியின் விலை | வைப்புத்தொகை | ஒப்பந்தபுள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும் கடைசி தேதியும் நேரமும் | ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் தேதியும் நேரமும் | ஒப்பந்தத்தின் உத்தேச மதிப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நரிமணம் எரிவாயு மின் நிலையம் கட்டுமான தளத்தைச் சீர்படுத்துதல். (Site grading work in Narimanam Gas Turbine Project in Thanjavur District.) | SEC.II/MTPP 2265 of 1990-91 | தமிழ்நாட்டிற்கு மட்டும், ரூ.300/- வெளிமா நிலங்களுக்கு ரூ.330/- | ரூ.17,500/- | 14.11.'90 நண்பகல் 12.00 மணி (புதன்கிழமை) | 14.11.'90 பிற்பகல் 3.30 மணி (புதன்கிழமை) | ரூ.17,41,300/- |
| 2. | நரிமணம் எரிவாயு மின் நிலையம் முதல் தளத்தில் நிர்வாகப் பிரிவுடன் கூடிய கட்டுப்பாட்டு அறை அடித்தளத்திற்கு மேல் கட்டுதல் | SEC.II/MTPP 2266 of 1990-91. | தமிழ்நாட்டிற்குமட்டும் ரூ.300/- வெளிமா நிலங்களுக்கு ரூ.330/- | ரூ.17,800/- | 21.11.'90 நண்பகல் 12.00 மணி (புதன்கிழமை) | 21.11.'90 பிற்பகல் 3.30 மணி (புதன்கிழமை) | ரூ.17,73,830/- |
| 3. | நரிமணம் எரிவாயு மின் நிலையம்-எரிவாயு அழுத்தி நிலையம் \கட்டுதல் (Gas Compressor Station)தளம் அமைத்தல் (Paving) கம்பி வடம் அகழி (Cable Trenches) அமைத்தல், குழாய் அடுக்கு (Pipe Racks) அமைத்தல் பணிமனை (Workshop) நுழைவாயில் கட்டடம் (Gate houses)கட்டுதல் போன்ற இதர வேலைகள். | SEC.II/MTPP 2267 of 1990-91 | தமிழ்நாட்டிற்கு மட்டும் ரூ.300/- வெளிமாநிலங்களுக்கு ரூ.330/- | ரூ.16,700/- | 28.11.'90 நண்பகல் 12.00 மணி (புதன்கிழமை) | 28.11.'90 பிற்பகல் 3.30 மணி (புதன்கிழமை) | ரூ.16,69,900/- |

2.0) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் மேலே குறிப்பிட்ட தொகையினைப் பதிவு அஞ்சல் மூல மாகவோ அல்லது பணமாகவோ ஒப்பந்த எண்ணைக் குறிப்பிட்டு கணக்கு அதிகாரி (Accounts Officer)

மேட்டூர் அனல்மின்திட்டம், மேட்டூர் மின் அமைப்பு வளாகம், மேட்டூர் அணை-1 அவர்களுக்குச் செலுத்திப்பெறப்பட்ட வாரிய இரசீதை இணைத்து கீழே குறிப்பிட்டுள்ளவரின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துக் கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். தாமதமாகப் பெறப்படும் ஒப்பந்தங் களும், வைப்புத்தொகையின்றிப் பெறப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் நுண் கலை உதவியாளர் (Executive Assistant to Superintending Engineer/Civil.II/Mettur Thermal Power Project) அவர்களால் பெறப்படும், ஒப்பந்தங்கள் Russian Erectors' Quarters-இல் திறக்கப்படும்.

3.0) அஞ்சல் மூலம் அனுப்பும் ஒப்பந்தப் பிரதிகள் காணாமல் போனாலோ அல்லது கால தாமதமானாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

4.0) ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கதல்ல.

5.0) ஒப்பந்தப் பிரதிகளை அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் இருபது சேர்த்து அனுப்ப வேண்டும்.

6.0) ஒப்பந்தப் பிரதிகள் 25.10.'90 முதல் விற்பனைக்குக் கிடைக்கும்.

7.0) குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக்கொள்வதற்கு மின்வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காமல் எல்லா ஒப்பந்தங் களையும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்க இவ்வலுவலகத்திற்கு முழு உரிமை உண்டு, விற்பனைக்குள்ளாகும் ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையும் தேவை எனக் கருதுகின்றபோது தளர்த்தவும் கைவிடவும் உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அல்லது இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளத் தகுதி பெற்ற மின்சார வாரிய அலுவலருக்கு உண்டு.

8.0) ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனை, ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளப்படும் நாளின் முதல் நாள் மாலை 5.00 மணிக்கு நிறுத்தப்படும்.

**தலைமைப் பொறியாளர்**
**மேட்டூர் அனல்மின் திட்டம்.**

DIPR/293/SLM/90/MCS




# உலகு போற்றும் தமிழகச் சிற்பக் கலை!

மண்ணும் மரமும், கல்லும் காகிதமும் மனிதனின் கைவண்ணத்தால், பல்வேறு உருவங்களை அடைகின்றன.

மானாக, மயிலாக, மனங்கவர் கலை நுணுக்கப் பொருள்களாக அவை வடிவம் பெறுகின்றன.

திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வச் சிலைகளாகவும் அவை உருவாகின்றன; குறிப்பாக, இத்தகைய சிலைகளுக்கு உலோகங்களே பெரிதும் உதவுகின்றன.

அதோ.... அந்த இடத்திலிருந்து சிற்றுளியால் சிலை செதுக்கும் ஒலி காற்றில் மெல்ல மிதந்து வருகிறது. ஒலி வரும் திசை நோக்கிச் செல்கிறோம்.

சிலை செய்யும் சிற்பிகள் தம் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்ற காட்சியைப் பார்க்கிறோம்.

சிற்றுளிகளின் ஓசை கவிதைகளில் வரும் ஓசை நயம் போலவே இருக்கின்றது.

அந்தச் சிற்றுளிகள் சொல்லும் கதை, சிந்தைக்கு விருந்தூட்டுவனவாகும்.

பாரம்பரிய மிக்க சிற்பக் கலைக்கு உறைவிடமாகத் தமிழகம் விளங்குகின்றது. உலகில் பண்டைய தமிழகச் சிற்பக் கலை, தலைசிறந்த நாகரிகச் சின்னங்களாகப் போற்றப்பட்டு வருகின்றது.

பல கலைகளை உலகிற்கு அளித்த மாவட்டமான தஞ்சையில் உள்ள சுவாமிமலை உலோகச் சிற்பக் கலைக்குத் தாயகமாக விளங்குகின்றது.

உலகில் நாகரிகங்கள் வளர்ந்தது நதியின் கரையில்தான் என்பது வரலாற்று உண்மை. அதைப்போல, சிற்பக் கலையும் காவிரிக் கரையிலே வளர்ந்து வந்திருக்கிறது என்பதும் வரலாற்று உண்மையாகும்.

இந்திய மண்ணில், பாராம்பரிய, உலோகச் சிற்பக்கலை வளர்ந்து வருவது, சுவாமிமலையில்தான் என்பது வெள்ளிடை மலையாகும்!

இத்திருத்தலத்தில்தான், 40 குடும்பங்கள் பாரம்பரியச் சிற்பிகளாக இன்றளவும் இக்கலையை வளர்த்து வருகின்றனர்.

புகழ்பெற்ற இந்தச் சிற்பக் கலைக் குடும்பத்திலே பிறந்து வளர்ந்து, இன்று இந்திய அளவிலே தேசிய விருது பெற்று, சிற்பக் கலைஞராக விளங்கிவரும் திரு எஸ். தேவசேனாபதி ஸ்தபதி அவர்களைச் சந்திக்கிறோம்....



சிலை செதுக்கும் பணியில் திரு தேவசேனாபதி ஸ்தபதி.

தெய்வச் சிலைகளை வடிக்கும் கலையை தனது தந்தை ஸ்ரீகண்ட ஸ்தபதியிடமிருந்தும், தனது தந்தையின் சகோதரர் அண்ணாசாமி ஸ்தபதியிடமிருந்தும் இளவயதிலேயே இவர் கற்றார். சிற்பம் மற்றும் ஆலயங்கள் அமைப்பது பற்றிய விதிமுறைகளைக் கூறும் ''காஸ்யபசில்ப சாஸ்திரம்'', ''அகஸ்த்ய ஸகலாதிகாரம்'', ''மானஸாரம்'', ''சில்பரத்தினம்'', ஆகிய நாட்டிய முத்திரைகள் விவரிக்கும் நந்திகேஸ்வரரின் ''அபிநய தர்ப்பணம்'' முதலான நூல்களை இவர் கற்றுத் தேர்ந்தார்.

இவரது கைத்திறமையை உள்நாட்டவர் மட்டுமல்ல, வெளிநாட்டவரும் பார்த்து வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

இவர் தம் முன்னோர்களை நினைவுகூர்ந்தபோது, கூறியதாவது:

''செங்கியிலிருந்து தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டுவதற்காக ராஜராஜ சோழனால் அழைத்து வரப்பட்ட ஸ்தபதிகள், தஞ்சைப் பெரியகோவிலின் திருப்பணியை முடித்தபின், 25 கல் தொலைவில் உள்ள, தாராசுரம் கோவிலைக் கட்டுவதற்காக அங்கு சென்றனர். அங்கு அத்திருப்பணி முடிந்ததும் காவிரி வடகரையில் 2½ கல் தொலைவில் உள்ள சுவாமிமலைத் திருக்கோவில் திருப்பணியில் ஈடுபட்டார்கள். பிறகு அவர்கள் அங்கேயே தங்கி விட்டார்களாம்.

''சோழர் காலத்தில் சிற்பிகள் மிகவும் போற்றிப் பாராட்டப்பட்டதாகவும், மன்னர்கள் சிற்பிகளுக்கு மானியம் கொடுத்துச் சிறப்பித்ததாகவும் பல கல்வெட்டுகள் கூறுகின்றன. இன்று விடுதலைக்குப் பின் இந்தச் சிற்பக்கலையை மத்திய, மாநில அரசுகள் ஊக்கம் கொடுத்து வளர்த்து வருகின்றன என்றால் அது மிகையல்ல. குறிப்பாக, மத்திய அரசு அகில இந்தியக் கைவினைப் பொருள்கள் மேம்பாட்டு வாரியம் மூலமாக, சிற்பக் கலைஞர்களுக்கு பல முன்னேற்றத் திட்டங்களை வகுத்து, அவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருகின்றார்கள். இந்த வாரியம் பெரிய நகரங்களில் சந்தையை ஏற்படுத்தி, அதற்குண்டான செலவுகளையும் ஏற்றுக் கொள்கின்றது. மேலும், திறமைமிக்க சிற்பிகளுக்கு, குடியரசுத் தலைவர் விருதினையும் வழங்கிச் சிறப்பிக்கின்றது.

தமிழக அரசு 'பூம்புகார்' கைவினைப் பொருள்கள் அங்காடி மூலமாக, கொள்முதல் குழு ஒன்றை ஏற்படுத்தி - சிற்பிகளால் வடிக்கப்பட்ட சிற்பங்கள், இடைத்தரகர் இடையூறின்றி, நேரடிக் கொள்முதல் செய்து - விற்பனை செய்து வருகின்றது. இத்திட்டத்தினால், பல சிற்பிகள் பயன்பெற்று வருகின்றார்கள்.''

சிற்பக் கலைஞர் திரு தேவசேனாபதி ஸ்தபதி அவர்களின் திறமையைப் பாராட்டி தமிழக அரசு, தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் மேம்பாட்டுக் கழக (பூம்புகார்) இயக்குநராக நியமித்துள்ளது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மனுநீதிச் சோழன் ரதத்துடன் உள்ள அழகிய சிலையை இவர் வடித்துத் தந்துள்ளார். இதற்காக, இவர் திறமையைப் பாராட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1974-இல் மோதிரம் அணிவித்துச் சிறப்பித்தார்.

1984-ஆம் ஆண்டுக்கான தேசிய விருதினை இவர் 1986-இல் அந்நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஜெயில்சிங் அவர்களிடம் பெற்றார். இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களிடமிருந்து விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் நூற்றாண்டு விழா விருதினையும் இவர் 1988-இல் பெற்றார்.

சிற்பக்கலைத் துறையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் இவர், இதுவரை ஆயிரம் ஆலயங்களுக்கு மேல், சோழர்காலப் பாணியில் சிலைகள் வடித்துக் கொடுத்துள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

பிரான்ஸ் நாட்டிற்காக, இயேசு கிறிஸ்துவின் சிலைகளை இவர் வடித்துத் தந்துள்ளார். அதனைப்பாராட்டி, அந்நாடு இவருக்கு 'டிப்ளமோ' வழங்கிச் சிறப்பித்துள்ளது.

இவர் கைவண்ணத்தைக் காட்டும் கலையெழில் மிக்க சிற்பங்கள் பலப்பல. அவற்றுள் சில - வேலூர் ஜலகண்டேசுவரர் கோவிலில் உள்ள நடராஜர், சிவகாமி சிலைகள்; தஞ்சை

அருங்காட்சியகத்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற ரிஷப தேவர், அம்மன் சிலைகளின் மாதிரி வடிவங்கள்; இராமேசுவரம் கோவில் பிச்சாடணர் சிலை; பாண்டிச்சேரி மனக்குள விநாயகர் சிலை; திருச்சி உறையூர் வெக்காளியம்மன் சிலை, புதுடில்லி ஜனகபுரி இராஜ இராஜேசுவரி கோவில் சிலை;

பாரத மாதா சிலைகள்: ஞானரத முருகன் சிலை; நந்தனம் வீட்டு வசதி வாரியக் கட்டடத்தின் முகப்பில் உள்ள 6 அடி உயரமுள்ள நடராசர் சிலை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் மட்டும் அல்லாது சிறப்பாக, வெளிநாடுகளுக்கும் இவர் சிலைகளைச் செய்து தந்துள்ளார். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இலண்டன் முருகன் கோவில் உற்சவர் சிலையும், இலண்டன் லெட்சுமி நாராயணன் கோவில் உற்சவச் சிலையும், இலண்டன் லீவர் பிரதர்ஸ் நிறுவனம் தலைமை அலுவலகத்திற்காக 6 அடி உயரமுள்ள நடராசர் சிலையும், மொரீசியஸ் சொரீ யூனியன், இந்து கோவிலுக்காக அனுப்பப்பட்ட முருகன் சிலையும், அமெரிக்கா, வாஷிங்டன் லெட்சுமி நாராயணன் கோவிலுக்கு அனுப்பிய நடராசர் மற்றும் சிலைகளும், சிங்கப்பூர் வீரமா காளியம்மன் கோவிலுக்கு 4 அடி உயரமுள்ள துர்க்கைச் சிலையும், சிங்கப்பூர் சீனிவாசப் பெருமாள் கோவில் மற்றும் வடபத்திரக் காளியம்மன் கோவில்களுக்கும், மலேசியா படை வெற்றி மாரியம்மன் கோவில், கோலாலம்பூர் ஸ்ரீசக்திவேல் முருகன் கோவில், பிரான்ஸ் நாட்டில் இந்துக்களால் கட்டப்படும் முருகன் கோவில் ஆகியவற்றுக்கான சிலைகளும் குறிப்பிடத் தக்கவை.

தற்போது இவர், அமெரிக்காவிலுள்ள ஹூவாய் இந்து தேவாலயத்திற்கு நடராசரின் 108 திருத்தாண்டவச் சிலைகளை



**தேசிய விருது பெற்ற, பஞ்சலோகத்தாலான மகேஸ்வரி சிலை**

உருவாக்கிக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமன்று, ஆள் உயர மணி ஒன்றையும் அண்மையில் சிங்கப்பூருக்கு அனுப்பியுள்ளார்.

சிலை எவ்வாறு உருவாக்கப்படுகிறது?

முதலில் மெழுகில் சிலை வடிவமைக்கப்படுகிறது. அதன் அளவு உத்தம தச தாளம், மத்திம தச தாளம்- இதுபோன்ற பல தாள பிரமானங்களில் சிற்ப சாஸ்திரப்படி, சிலையின் அளவுகள் தென்னை ஓலையால் பங்கிட்டுக் கொள்ளப்படுகிறது. அதன்படி அளவுகள் வைத்து முகம், மார்பு, கால் அமைத்து மெழுகில் வடிக்கப்படுகிறது. பிறகு ஆற்று வண்டல் மண்ணை அதன்மேல் பூசி 'கரு' (மோல்டு) தயார் செய்யப்படுகிறது. பின்னர் அதனை வெயிலில் காயவைத்து, வறட்டி விறகுகளால் சூடேற்றப்படுகிறது. அப்பொழுது மெழுகு வெளியேற்றப்படுகிறது. பின்பு செம்பு, பித்தளை, ஈயம் ஆகிய உலோகத்தை முறையே 82,15,3 சதவிகிதம் என்ற சதவிகிதத்தில் உருக்கி 'வார்ப்படம்' செய்யப்படுகிறது. அதன் பிறகு பூசிய மண்ணை உடைத்து எடுக்கப்படுகிறது. இப்போது மெழுகில் வடித்த உருவமானது உலோகத்தில் கிடைக்கிறது. அதாவது, உலோகச் சிலை தயார்! இந்த நிலைக்குப் பிறகுதான், அந்தச் சிலைக்கு நிறைய வேலை இருக்கிறது. அதாவது, செதுக்குதல், நகாசு வேலைப்பாடுகள் முதலானவை உள்ளன. பிறகுதான் சிலைகளுக்கு மெருகேற்றப்படுகின்றது. சிலைகள் பழங்காலத்தவை போலக் காட்சியளிக்க, அதற்கேற்றவாறு வண்ணம் பூசப்படுகிறது.

கவிஞன் உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கும் கற்பனை கவிதையாக வெளிப்படுவது போல, ஒரு சிற்பக் கலைஞன் உள்ளத்தில் தோன்றும் கற்பனைகள் சிலைக்குக் கருவாக, உருவாகின்றன.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டும் கலையெழில் மிக்க அந்தச் சிற்பங்கள், காலத்தைக் காட்டும் கண்ணாடியாக மட்டுமல்ல, காலமெல்லாம் கதை சொல்லும் கருப் பொருளாகவும் திகழ்கின்றன.

அந்தக் கலை, தமிழ்நாட்டுக் கைவினைஞர்களின் விரல்களிலே கொஞ்சி விளையாடுகின்றது. வாழையடி வாழையாக வந்த திருக்கூட்டமாக அந்தச் சிற்பக் கலைஞர்கள் விளங்குகிறார்கள்.

ஆலயங்களிலே, கலைக்கூடங்களிலே, எழில்மிகு மாடமாளிகைகளிலே, கூட கோபுரங்களிலே அவர்களது கைவண்ணம் மிளிர்கிறது.

அந்த வகையில், திரு தேவசேனாபதி ஸ்தபதி அவர்கள் மட்டுமல்ல, அவரது மூன்று மகன்களும், மூன்று சகோதரர்களும் சிற்பக்கலைத் துறையிலே முழுமையாக ஈடுபட்டுள்ளார்கள் என்பதைக் கேள்விப்படும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இவரது மகன்கள் திரு ராதாகிருஷ்ண ஸ்தபதி, கட்டடக் கலையை முறையாகப் பயின்றவர்; திரு ஸ்ரீகண்ட ஸ்தபதி, பி.காம் பட்டதாரி; மூன்றாமவர் திரு சுவாமிநாத ஸ்தபதி ஆகிய மூவருமே தம் தந்தைக்கு உதவியாக மட்டுமல்ல, அந்தப் பரம்பரைத் தொழிலுக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு இவரது குடும்பமே ஒரு சிற்பக் கலைக் குடும்பமாக விளங்கி வருகிறது என்பது பெருமைப்படத்தக்க செய்தியாகும்.

—பேட்டி: பி.வி.கிரி

# தமிழ்நாடு மின்சார வாரியம்

*(1-0)* கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வரிசை எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த எண் | ஒப்பந்தப் பிரதியின் விலை | வைப்புத்தொகை | ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கு கடைசி தேதியும் நேரமும் | ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதியும் நேரமும் | ஒப்பந்தத்தின் உத்தேச மதிப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தெர்மல் மின்நிலைய வட்டாரத்தில் உள்ள தண்ணீர் குளிர வைக்கும் கோபுரம் மூன்றிற்கும் நான்கிற்கும் இடையில் புல்லும், மரமும் வளர்ப்பது. | SEC2/MTPP 2268/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.100/- தமிழ் நாட்டிற்கு வெளியே ரூ.110/- | ரூ.6,400/- | 23.11.90 நண்பகல் 12 மணி | 23.11.90 மாலை 3.30 மணி அளவில். | ரூ.6,40,000 |
| 2. | தெர்மல் மின்நிலைய வட்டாரத்தில் பிரதான நிலக்கரி அரைக்கும் இயந்திரத்தின் வடக்கு பகுதியிலும் துணை நிலக்கரி அரைக்கும் இயந்திரப் பகுதியைச் சுற்றிலும் தளம் போடுவது | SE/CII/MTPP 2269/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.100/- தமிழ் நாட்டிற்கு வெளியே ரூ.110/- | ரூ.4,300/- | 30.11.90 நண்பகல் 12 மணி | 30.11.90 மாலை 3.30 மணி அளவில். | ரூ.4,25,000/. |

*(2-0)* ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் மேலே குறிப்பிட்ட தொகையினை பதிவு அஞ்சல் மூல மாகவோ அல்லது பணமாகவோ ஒப்பந்த எண்ணை குறிப்பிட்டு கணக்கு அதிகாரி (Accounts Officer) மேட்டூர் அனல்மின் திட்டம், மேட்டூர் மின் அமைப்பு வளாகம், மேட்டூர் அணை-1 அவர்களுக்கு செலுத்தி பெறப்பட்ட வாரிய இரசீதை இணைத்து கீழே குறிப்பிட்டுள்ளவரின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துக் கொள்வதின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். தாமதமாக பெறப்படும் ஒப்பந்தங்களும், வைப்புத்தொகை யின்றி பெறப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் நுண்கலை உதவியாளர் (Exe. Assistant to Superintending Engineer/Civil-II/MTPP) அவர்களால் பெறப்படும். ஒப்பந்தங்கள் Russian Erectors' Quarters-ல் திறக்கப்படும்.

*(3-0)* அஞ்சல் மூலம் அனுப்பும் ஒப்பந்த பிரதிகள் காணாமல் போனாலோ அல்லது காலதாமத மானாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

*(4-0)* ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கதல்ல.

*(5-0)* ஒப்பந்தப் பிரதிகளை அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் இருபது சேர்த்து அனுப்பவேண்டும்.

*(6-0)* குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக்கொள்வதற்கு மின்வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காமல் எல்லா ஒப்பந்தங்களை யும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்க இவ்வலுவலகத்திற்கு முழு உரிமை உண்டு. விற்பனைக் குள்ளாகும் ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்தஒரு நிபந்தனையும் தேவை எனக்கருதுகின்றபோது தளர்த் தவும் கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கே உரியது.

*(7-0)* ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனை, ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளப்படும் நாளின் முதல் நாள் மாலை 5.00 மணிக்கு நிறுத்தப்படும்.

DIPR/310/SLM/90/MCS

**மேற்பார்வைப் பொறியாளர்/**
**மேட்டூர் அனல் மின்திட்டம்**

## இந்தியாவிற்கு வருகை தந்த

# நெல்சன் மண்டேலாவுக்குப் 'பாரத ரத்னா' பட்டம்



**தெ**ன்னாப்பிரிக்க விடுதலைப் போராட்ட வீரர் நெல்சன் மண்டேலா, *11.2.1990* ஞாயிறன்று, கேப் டவுன் அருகே உள்ள விக்டர் வெர்ஸ்டர் சிறைச்சாலையில் இருந்து விடுதலை பெற்றார். எத்தனை ஆண்டுக் காலத்திற்குப் பிறகு தெரியுமா? *27* ஆண்டுகளுக்குப் பிறகு!

அத்தனை நீண்டகாலத் தண்டனையை அனுபவிக்கும் அளவுக்கு அவர் செய்ததாகக் கருதப்பட்ட குற்றம் - தனது கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டார்; கறுப்பு அழகானது; கறுப்பு வலிமையானது, கறுப்பு மிகக் கம்பீரமானது என்பதை உலக மக்களுக்கு உணர்த்துவதற்காக வாதாடினார்- போராடினார் என்பதுதான்!

நெல்சன் மண்டேலாவின் விடுதலையைக் கறுப்பரின மக்கள் மட்டுமல்ல; உகை நாடுகளிலெல்லாம் பரவிக்கிடக்கும் எல்லா இன மக்களும் இன்புற்றுக் கொண்டாடினர். அன்றைய தினம், மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருச்சிராப்பள்ளியில் ஒரு மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார். மண்டேலாவின் விடுதலைச் செய்தி கேட்டு மகிழ்ந்த அவர், அந்த மாநாட்டிலேயே அது குறித்த தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து, வெள்ளம்போல் திரண்டிருந்த மக்களெல்லாம் உள்ளம் உவந்து கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரத்தோடு வரவேற்கச் செய்தார்.

மாண்புமிகு இந்திய பிரதமர் திரு வி.பி.சிங் அவர்களும் நெல்சன் மண்டேலாவின் விடுதலைச் செய்தியை மகிழ்ந்து வரவேற்று வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். அது மட்டுமல்ல; 'இந்தியப் பெருமக்களின் இதயபூர்வமான வரவேற்பை ஏற்க வருகை தரவேண்டும்' என்றோர் சிறப்புச் செய்தியையும் மாவீரன் மண்டேலாவுக்கு அனுப்பி வைத்தார்.

**இந்தியா வருகை**

கடந்த மார்ச் மாதம், நமீபிய விடுதலைநாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்றிருந்த நமது பிரதமர் அவர்கள், நேரிலேயே ''இந்தியாவுக்கு வருகைதரவேண்டும்'' என மண்டேலாவைக் கேட்டுக் கொண்டார். அன்பான அந்த அழைப்பு முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி *15.10.90* அன்று ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரஸ் தலைவரும், தென் ஆப்பிரிக்க விடுதலைப் போராட்ட வீரருமான நெல்சன் மண்டேலா 5 நாள் சுற்றுப் பயண ஏற்பாட்டுடன் நம் இந்திய நாட்டுக்கு வந்து சேர்ந்தார். அவரை மாண்புமிகு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஐ.கே.குஜ்ரால் அவர்கள் டில்லி விமான நிலையத்தில் வரவேற்றார். வழி நெடுகிலும் மாபெரும் மக்கள் கூட்டத்தின் மகிழ்ச்சிக் கொந்தளிப்பான வரவேற்பை மண்டேலா ஏற்று இதயம் குளிர்ந்தார். ''அண்ணல் காந்தி அடிகள் பிறந்த நாட்டு மண்ணை மதிப்பதில் பெருமைப்படுகிறேன்'' என்று செய்தியாளர்களிடம் பெருமிதத்தோடு தெரிவித்தார்.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் மாளிகையிலும், பின்னர் குடியரசுத் துணைத் தலைவர் மாளிகையிலும் அவருக்கு அன்புகனிந்த விருந்துபசரிப்பு நடைபெற்றது. அவர்களோடும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங், மாண்புமிகு

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஐ.கே.குஜ்ரால் முதலான பல இந்தியத் தலைவர்களோடும் ஆப்பிரிக்காவின் தற்போதைய நிலைமைகள் குறித்து நெல்சன் மண்டேலா பேச்சுவார்த்தை நடத்தினார். இந்திரா காந்தி அரங்கில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிலும் அவர் பங்கேற்றார்.

மறுநாள் (16.10.90) பிர்லா மாளிகையில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்திற்குச் சென்று மரியாதை செலுத்தினார். மரக்கன்று நட்டார். ராஜ்காட்டில் உள்ள அண்ணல் காந்தி சமாதிக்குச் சென்று மலர் வளையம் வைத்தார். பத்திரிகையாளர்களைச் சந்தித்து மனம் திறந்து பேசினார்; அதன்பிறகு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் அளித்த மரியாதை ரீதியிலான விருந்தில் கலந்து கொண்ட தியாகதீபம் மண்டேலா- பல்வேறு வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதிநிதிகளையும் இங்குள்ள ஆப்பிரிக்க நிறுவனங்களின் தலைவர்களையும் கண்டு மகிழ்வோடு உரையாடினார்.

பாரத ரத்னா மண்டேலா

இந்திய நாட்டின் மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருது, நமது குடியரசுத் தலைவர் அவர்கள் மாளிகையில் நடந்த விருந்து ஒன்றில் விடுதலை வீரர் நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்பட்டது- மேதகு இந்தியக்குடியரசுத் தலைவரால் வழங்கப்படும் இவ்விருது, வெளிநாட்டுத்தலைவர் ஒருவருக்கு வழங்கப்படுவது இது இரண்டாவது முறை; இவ்விருது இதற்குமுன் (எல்லைக் காந்தி) கான் அப்துல் கபார்கானுக்கு அளிக்கப்பட்டது!

தென்னாப்பிரிக்க அரசு கடைப்பிடித்துவரும் நிறவெறிக் கொள்கைக்கு எதிராக இந்திய மக்களிடையே பிரச்சாரம் செய்து தென்னாப்பிரிக்க நாட்டுக் கறுப்பின மக்களுக்கு ஆதரவு திரட்டிய அமைப்புகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட- நிறவெறி நீக்கத்திற்கான நடவடிக்கைக் குழுவும் விடுதலை வீரர் மண்டேலாவுக்குத் தமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டன.

''தென்னாப்பிரிக்காவில் இன ஒதுக்கல் ஒழிக்கப்பட்டு, பெரும்பான்மை மக்களின் ஆட்சி ஏற்படுத்தப்படும் வரை அந்த நாட்டின் சிறுபான்மை அரசின் மீது சர்வதேச நாடுகளின் நிர்ப்பந்தம் நீடிக்க வேண்டும். இந்த வகையில், தென்னாப்பிரிக்கா மீது சர்வதேச நாடுகளின் பொருளாதாரத் தடை நீடிக்க வேண்டும் என ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ் எடுத்துள்ள நிலையை இந்தியா ஆதரிக்கிறது'' என்று தாம் அளித்த விருந்தின்போது, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தெரிவித்தார்.

'பாரத ரத்னா' விருது முதலாக- பனாரஸ் பல்கலைக் கழகத்தில் கௌரவ விருதும், கல்கத்தாவில் பஜாஜ் விருதும் பெற்ற நெல்சன் மண்டேலா- ''என்னுடைய அகிம்சை அரசியல் எண்ணத்தை முதன் முதலாக 1894-ஆம் ஆண்டு, தென்னாப்பிரிக்காவில்தான் மகாத்மா காந்தி துவக்கினார் என்பதால், அப்போது முதற்கொண்டே அவர்மீது எங்களுக்குப் பற்றும் பாசமும் ஏற்பட்டுவிட்டது. வரலாறு, அதன் பின்னணி ஆகியவற்றைப் பார்க்கும் போது இந்தியா ஒரு பாரம்பரியம் மிக்க நாடென்பது தெளிவு. அப்படிப்பட்ட இந்த நாட்டைப் பார்க்க நீண்ட நாட்களாகவே ஆவலோடிருந்தேன்; இந்தியாவிற்கும் தென் ஆப்பிரிக்காவிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு; இருநாட்டு மக்களுக்கும் பலவிதங்களில் நெருக்கம் இருக்கிறது''... என்றெல்லாம் குறிப்பிட்டார்.

இந்தியாவில்- மண்டல்கமிஷன் பரிந்துரைகளை அமலாக்க மாண்புமிகு பிரதமர் வி.பி.சிங் அவர்கள் எடுத்துள்ள முயற்சிகளையும் போற்றிப் பாராட்டினார். அதுபற்றி அவர் பேசுகையில் ''துணிச்சலான செயல் இது. ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போராடிவரும் எங்கள் நெஞ்சத்தில் இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங்கின் இந்தச் செயல் நிலைபெற்றுவிட்டது. மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த அவர் எடுத்துள்ள நடவடிக்கை தென்னாப்பிரிக்க மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இது குறித்த பிரதமரின் நடவடிக்கைகளைத் தென்னாப்பிரிக்க மக்கள் ஆர்வத்தோடு கவனித்து வருகிறார்கள். இந்திய அரசின் முடிவு இன ஒதுக்கலையும் நிறவெறி ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடும் அனைவரது இதயங்களிலும் உடன்பாடான உணர்வைத் தூண்டியுள்ளது. இதை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம்!'' என்று அகமகிழ்வோடும் அழுத்தந் திருத்தமாகவும் குறிப்பிட்டார்.

—பி.எல். ராஜேந்திரன்

## புற்றுநோய் அபாயத்தைக் குறைக்க ஆப்பிள் சாப்பிடுங்கள்!



**புற்றுநோய் ஏற்படும் அபாயத்தை ஆப்பிள் பழம் மிகவும் குறைத்து விடுகிறது என்று அமெரிக்க மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.**

**ஆப்பிள், ஸ்ட்ராபெர்ரி ஆகிய பழவகைகளில் இயற்கையாகவே ஒருவித அமிலம் சுரக்கிறது. இது 'எல்லஜிக் அமிலம்' (Ellegic Acid) என்று அழைக்கப்படுகிறது. விலங்குகள் மற்றும் மனிதர்களின் உடலில் சில இராசாயனப் பொருட்களினால் புற்றுநோய் ஏற்படக்கூடிய அபாயத்தை, இந்த இயற்கை அமிலம் வெகுவாகக் குறைத்து விடுவதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.**



★ **பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி.**

★ **மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல்பகைகள்.**

**—தந்தை பெரியார்**

## பெரியார் மாவட்டத்தில்

# தீவிர சுகாதாரத் திட்டப் பணிகள்



**குறைந்த செலவிலான நவீன கழிப்பிடம்**

தமிழகத்திலேயே ''தீவிர சுகாதாரத் திட்டம்'' பெரியார் மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளிலுள்ள அனைத்து வீடுகளிலும் குறைந்த செலவிலான நவீன கழிப்பிடம் அமைப்பதாகும். இக் கழிப்பிடம் அமைப்பதால் கிராமத்தின் சுற்றுப்புறச் சுகாதாரம் நல்ல முறையில் அமையப்பெறுவதால், மனிதக் கழிவுகள் மூலம் பரவும், காலரா, வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் தடுக்கப்படுகின்றன. அநாகரிக முறையில் திறந்த வெளியில் பாதுகாப்பின்றி கழிப்பது தவிர்க்கப்படுகின்றது. மேற்கண்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, இத்திட்டம் இம்மாவட்டத்தில் 1988-89 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் மத்திய, மாநில அரசுகள் மற்றும் 'யுனிசெப்' நிறுவன உதவியுடன், கிராமப்புறங்களில் உள்ள வீடுகளில் ரூ.611.3 இலட்ச மதிப்பீட்டில் முதல் கட்டமாக 35,000 குறைந்த செலவிலான சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. பிறகு இத்திட்டம் பள்ளிகள், சத்துணவு மையங்கள் ஆகியவைகளுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

இதுவரை 13,125 வீடுகளில் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1990-91-ஆம் ஆண்டுக்கு 10,000 கழிப்பிடங்கள் ஒவ்வொன்றும் ரூ.1600 மதிப்பீட்டில் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது.

பெரியார் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தில் ரூ.1.60 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் சிறப்பு அம்சமாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆதிதிராவிடர் வாழும் ஒரு கிராமத்தினை எடுத்துக் கொண்டு, அங்குள்ள அனைத்து குடும்பங்களுக்கும் கழிப்பிடங்களின் அவசியத்தை எடுத்து, விளக்கி அவர்களையும் இத்திட்டத்தில் ஈடுபடுத்தி,

> தமிழ்நாட்டிலேயே, 'தீவிர சுகாதாரத் திட்டம்' பெரியார் மாவட்டத்தில் மட்டுமே செயல் படுத்தப்பட்டு வருகிறது. அதை விளக்குகிறது இக் கட்டுரை.

அவர்கள் அனைவருக்கும் வீட்டுக்கு ஒரு கழிப்பிடம் அமைத்துக் கொடுக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

ஒரு கழிப்பிடம் அமைக்க அரசு மானியம் ரூ.1,280 கொடுக்கின்றது. மீதமுள்ள ரூ.320 கழிப்பிடம் கட்டிக் கொள்பவரின் பங்குத் தொகையாகிறது. இத்திட்டத்தில் முதன்முதலாக அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புதுப்பாளையத்தில் குடியிருக்கும் அனைத்து ஆதிதிராவிட மக்களுக்கும் கழிப்பிடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதே போல் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ள 300 குடும்பங்களுக்கு ''சக்தி சர்க்கரை ஆலை'', ''அரிமா சங்கம்'' போன்றோர் உதவியுடன் தனியார் வீடுகளில் கழிப்பிடங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தைச் சீரிய முறையில் செயல்படுத்தவும், மக்களிடம் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும், கிராம அளவிலும், பல்வேறு நிலைகளில் பயிற்சிகள் ஏற்படுத்தி விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினை சிறப்போடு செயல்படுத்திட 1,303 அலுவலர்களுக்கும், 368 பெண்களுக்கும், 87 ஆதிதிராவிடர்களுக்கும், 239 ஒன்றியம், பேரூராட்சி மற்றும் ஊராட்சி உறுப்பினர்களுக்கும், 1,280 பொதுமக்களுக்கும், 428 கொத்தனார்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தினை, பெரியார் மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் செயல்படுத்த தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வி.கே. சுப்புராஜ் இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**பெரியார் மாவட்டம்.**




# தங்கப்பதக்கம் வென்ற சிறுநீரக நோயியல் துறை



இந்தியச் சிறுநீரகயியல் துறைக் கழக, தென்மண்டலக் குழுவின் பத்தாம் ஆண்டு மாநாடு இவ்வாண்டு அக்டோபர்த் திங்கள் 13,14-ஆம் தேதிகளில் கோவை மாநகரில் நடந்தேறியது. தமிழகம், ஆந்திரம், கேரளம் மற்றும் கர்நாடகத்தைச் சேர்ந்த பல்வேறு மருத்துவ நிலையங்கள் அங்கம் வகிக்கும் இத்தென்மண்டலக்குழு ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வோரிடத்தில் கூடுவது வழக்கம். அதுசமயம் தென் மாநிலங்கள் நான்கிலும் உள்ள சிறுநீரக மருத்துவத் துறை நிபுணர்கள் ஒருங்கே கூடி இத்துறை சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும், சிறுநீரக மருத்துவத்துறையின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு நடத்துவர். இத்துறை சம்பந்தமான புதிய கண்டுபிடிப்புக்கள், சிறுநீரகநோய்க்கண்டுபிடிப்பில் சில புதிய எளிய வழிகள், மருத்துவ சிகிச்சை முறையில் சில முன்னேற்றமடைந்த மாறுதல்கள் ஆகியவை குறித்து தென்மண்டலக் குழுவின் மாநில மாநாட்டின்போது விவாதிக்கப்படும். அதுபோது இத்துறையைச் சேர்ந்த நிபுணர்கள் தங்களது அயரா உழைப்பின் காரணமாக, தாங்கள் கண்டறிந்த சில விஷயங்களை-தங்களது சொந்தப் படைப்புகளான ஆய்வுக்கட்டுரைகளைச் (Original Papers) சமர்ப்பிப்பார்கள். இவற்றுள் மிகச் சிறந்ததெனக் கருதப்படும் படைப்பினுக்குத் தங்கப் பதக்கம் வழங்கிச் சிறப்பளிக்கும் திட்டம் 1989 முதல் வழக்கத்தில் உள்ளது.

இவ்வாண்டு (1990) நடைபெற்ற மாநாட்டில், சென்னை மருத்துவக் கல்லூரியிலிருந்து பங்கு பெற்ற, பேராசிரியர் டாக்டர் முத்து சேதிபதியின் மாணாக்கரும்-டாக்டருமான டாக்டர். பத்மநாபன் மற்றும் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் சமர்ப்பித்த படைப்பு மிகச் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு- அதற்குத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. பேராசிரியர் டாக்டர் முத்துசேதுபதியின் தலைமையின் கீழ் பணிபுரியும் இச்சிறுநீரகத் துறை 1989-ஆம் ஆண்டும் தங்கப் பதக்கம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னை மருத்துவக் கல்லூரியின் சிறுநீரகயியல் துறை கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், மருத்துவத் துறை மற்றும் சிறுநீரக மாற்றறுவைச் சிகிச்சை தொடர்பாக சுமார் 10 ஆராய்ச்சிப் படைப்புகளை வெளியிட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் இத்துறையைச் சேர்ந்த மருத்துவர்கள் பல அரிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டுள்ளனர். அவற்றுள் சில- 'லெப்டோஸ்பைரோஸிஸ்' (Leptospirosis) எனப்படும் நுண்கிருமியால் வரக்கூடிய சிறுநீரகச் செயலிழப்பு (Renal failure), தாமிர சல்பேட்டு (Copper Sulphate) நச்சுத்தன்மையால் ஏற்படும் சிறுநீரகச் செயலிழப்பு, வயிற்றுப் போக்கினால் வரக்கூடிய சிறுநீரகச் செயலிழப்பு (Acute diarrhoeal disease) போன்றவை. இவை குறித்த ஆராய்ச்சிப் படைப்புக்கள் இந்திய அளவிலன்றி உலக நாடுகள் அளவிலும் குறிப்பிட்டுச் சொல்லும்படி இடம்பெற்றுள்ளன. உலக நாடுகளின் மருத்துவக் கழகம் (W.H.O) 'லெப்டோஸ்பைரோஸிஸ்' நோய் சம்பந்தப்பட்ட அகில உலக ஆராய்ச்சிப் பட்டியலில் பேராசிரியர் டாக்டர் முத்துசேதுபதி மற்றும் சக மருத்துவரின் பெயர்களைப் பதிந்து வைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

ஆக இத்துறையைச் சார்ந்த மருத்துவர்கள் இரண்டு முறையும் தங்கப்பதக்கம் வென்றது சென்னை மருத்துவக் கல்லூரிக்கு மட்டுமின்றி தமிழகத்திற்கே பெருமை சேர்க்கும் சாதனையில் ஒன்றெனக் கருதலாம்.



**புத்தகங்கள் ஞானப் பெட்டகத்தைத் திறக்கும் சாவிகள். இன்பப் பூங்காக்களில் புகும் நுழைவாயில்கள். உங்களை உயிர்த்துவிக்கும் வழிகள்; நம் நண்பர்கள். வாருங்கள் படிப்போம்.**

**—அமிலிபெளல்சன்**

**சில புத்தகங்களை ருசிபார்க்க வேண்டும். சிலவற்றை மெல்லாமல் விழுங்கிவிட வேண்டும். சிலவற்றை நன்றாய் சுவைத்து மென்று விழுங்கிச் செரிக்கச் செய்ய வேண்டும்.**

**—பேகன்**

**ஒரு புத்தகம் எழுத நூல் நிலையத்தில் உள்ள நூல்கள் அனைத்துக்கும் மேல் படிக்க வேண்டும்.**

**—ஜான்சன்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அதி / நவீன / பட்டு / வகைகள்




100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

# கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

